# பட்டாம் பூச்சியும் தூக்கமும்

சிவசங்கரி

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை-600 017.

முதற் பதிப்பு : செப்டம்பர் 1995
உரிமை : ஆசிரியருக்கு

PATTAM PUCHIYUM THUKKAMUM
By : SIVASANKARI
First Edition : September, 1995

விலை ரூ. 25-00

20220
3737262

கிடைக்குமிடம் :
திருமகள் நிலையம்
55, வெங்கட்நாராயணா சாலை
தி. நகர், சென்னை-600 017
போன் : 4342899, Fax : 91-44-4341559

அச்சிட்டோர் :
ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு சென்னை-5.

## உள்ளே...

| | | |
|---|---|---|
| 1. | பட்டாம் பூச்சியும் தூக்கமும் | 5 |
| 2. | சித்த சமத்தா இருக்க மாட்டியோடீ? | 16 |
| 3. | முட்படுக்கை | 31 |
| 4. | பயணம் | 41 |
| 5. | கழுதை தேய்ந்து | 53 |
| 6. | எல்லோரும் தான் | 66 |
| 7. | எங்கோ செல்ல ஒரு பாதை | 82 |
| 8. | வீழ்ச்சி | 110 |

### ஆசிரியர் சிவசங்கரியின் பிற நூல்கள்

எதற்காக?
ஆயிரம் காலத்துப் பயிர்
இதுவும் தாஜ்மஹால்தான்
ஆயுள் தண்டனை
பிராயச்சித்தம்
காற்றுள்ள போதே
மூக்கணாங்கயிறு
டிரங்கால்
ஒரு சிங்கம் முயலாகிறது
ஓவர் டோஸ்
தீர்வு
மண் குதிரைகள்
ருசி கண்ட பூனை
அது சரி அப்புறம்
அரவிந்தர் சொல்லுகிறார்
இனி தொடராது
காதல் என்பது எதுவரை
மனம் கவர்ந்த மலேசியா
ஒரு பகல் ஒரு இரவு
நூல் ஏணி
பிரதமருடன் ஒரு பயணம் **Part 2**
,, ,, **Part 1**
தெப்பக் குளம்
மலையின் அடுத்தப் பக்கம்
அந்தம்மா ரொம்ப நல்லவங்க
பச்சோந்திகள்
என் கண்ணோட்டத்தில்
அப்பா
உயர்ந்தவர்கள்
புதுப்புது அனுபவங்கள்

20220
3737262

# 1. பட்டாம்பூச்சியும் தூக்கமும்

சலனம்.

தோளருகே... தலைக்கு மேலே...

ட்யூப் லைட்டிலிருந்து ஒரு சாண் தள்ளி உட்காரலாமா, வேண்டாமா என்ற யோசனையுடன் சில நொடிகளுக்கு இறக்கைகளைப் படபடத்தவாறு தயங்கிய அந்த பட்டாம்பூச்சி ப்ரார்த்தித்துக் கொண்டது போல பிரதட்சிணமாகவும், அப்பிரதட்சிணமாகவும் நாலைந்து முறைகள் விளக்கை சுற்றி வந்துவிட்டு, களைத்துப் போய் சுவற்றில் தொற்றிக் கொண்டு இளைப்பாற முற்பட்டது.

மூக்கிலிருந்து இறங்கிவிட்ட கண்ணாடியை மேலே தள்ளியவன் ஒருவித ஸ்வாரஸ்யத்துடன் பட்டாம்பூச்சியைக் கவனித்தான்.

அப்படியொன்றும் அழகானது என்று சொல்ல முடியாது. ஒரோர் பட்டாம்பூச்சி போல ஆரஞ்சும், மஞ்சளுமாய் மின்னவில்லை. சாதாரண பழுப்பு நிறம். இறக்கைகளின் ஓரங்களில் கரை கட்டின மாதிரியும், நடுவில்

பொட்டுப் பொட்டாயும் கறுப்பு வண்ணம். பழுப்பில் கறுப்பு எப்படி எடுபடும்?

அவனுக்கு மீனாம்பா பாட்டியின் ஞாபகம் வந்தது. ரொம்ப சின்ன வயசில், வருஷா வருஷம் கோடை விடுமுறைக்கு ஆதிச்சபுரத்திலிருந்த மீனாம்பா பாட்டி வீட்டுக்குத்தான் போவது வழக்கம். பாட்டி வீட்டை ஒட்டிக் கால்வாய் சலசலத்துக் கொண்டு ஓடும். அமானுஷ்ய அமைதியை பங்கப்படுத்தும் முயற்சியில் சில வண்டுகள் எப்போதும் சத்தமிடும். நாணற்புதர்களுக்கு மேலே வண்ண வண்ணமாய் பட்டாம்பூச்சிகள் பறந்து ஆளை மயக்கும். அப்படி ஆளைக்கிறங்க அடித்த வண்ணத்துப் பூச்சி ஒன்றை அது ஏமாந்திருந்த சந்தர்ப்பத்தில் இரண்டு இறக்கைகளையும் ஒருசேர பிடித்து, வீட்டுக்குத் தூக்கி வந்து 'இதுவும் தட்டான்பூச்சி போல காலை தூக்குமாடா?' என்று ஒருநாள் சின்னக் கோண்டுவிடம் கேட்டதை காதில் வாங்கியவாறு மீனாம்பா பாட்டி வந்து விட்டாள்.

''என்னடா செஞ்சுண்டு இருக்கே?''

''ஒண்ணும் இல்ல பாட்டீ...தும்பி மாதிரி இதுவும்...'' முடிப்பதற்கு முன் பாட்டி அதட்டினாள்.

''அடே, கடங்காரா...அதும்பாட்டுக்கு தேமேன்னு போற வண்ணாத்திபூச்சிய பிடிச்சுண்டு வந்து ஏண்டா ஹிம்ச பண்றே...சட்டுனு மறுபடி பறக்க விட்டுடு... இல்லேன்னா உன்னை அது சபிச்சிடும்...''

அவன் சிரித்தான்.

''ஐயே...இது வண்ணாத்தி பூச்சி இல்ல பாட்டீ... பட்டாம்பூச்சி...இங்கிலீஷ்ல 'பட்டர்ஃப்ளை'னு சொல்.''

நாலே எட்டில் கிட்டத்தில் வந்து பாட்டி மறுபடியும் அவன் முடிக்கும் முன்னர் குறுக்கிட்டு முடித்தாள்.



''வண்ணாத்திப் பூச்சி பாவம் பொல்லாது; விட்டுடுனு சொல்றேன். கேக்காம மேல மேல பேசறியா...படவா...''

பாட்டிக்கு கோபம் அதிகம் வந்தால் வலிக்கக் குட்டுவாள். தெரியும். அதற்கு இடம் தராமல் பட்டாம் பூச்சியைப் பறக்க விட்ட அன்று இரவுதான் முற்றத்தில் வெள்ளையாய் நிலா வெளிச்சம் விழ, கையில் வத்தல் குழம்பு சாதத்தை நல்லெண்ணெய் விட்டு மணக்க மணக்க பிசைந்து போட்டுக் கொண்டே பாட்டி முதல் முறையாய் அந்தக் கதையைச் சொன்னாள்.

''ஒரு ஊர்ல ஒரு வண்ணான். ரொம்ப நல்லவன். அவனுக்கு ஒரு பொண்டாட்டி. அவளும் மஹா உத்தமி. தினமும் ரெண்டு பேரும் விடிகார்த்தாலே எழுந்து ஒண்ணா துறைக்குப் போய் ஒண்ணா துணி வெளுத்து, ஒன்னா வீட்டுக்கு வந்து சாப்பிடுவாளாம். அவ்வளோ ஒத்துமை. ஒரு சமயம் விடாம மழை கொட்டி சலவைக்கு எதிர்பாராம நிறைய துணி சேர்ந்துட்ட ஒரு நாள்ல 'வானம் கொஞ்சம் வெளுத்திருக்கு. நா முன்னால ரெண்டு மூட்டை வெள்ளத் துணிகளா எடுத்துண்டு போய் வெள்ளாயி வைக்கறேன். நீ சாப்பாட்டோட பாக்கி இருக்கற கலர் துணிகள எடுத்துண்டு வா. வேலை முடிஞ்சதும் அங்கயே சாப்டுட்டு நிதானமா வீடு திரும்பலாம்'னு சொல்லிட்டு புருஷன்காரன் கிளம்பிப் போயிட்டான். இவளும் அவனுக்கு புடிச்ச சமயலா செஞ்சு எடுத்துண்டு, ஒரு மூட்டை கலர் துணிகளையும் தூக்கிண்டு ஆத்துக்கு கிளம்பினா. ஆனா, அதுக்குள்ள மழை மறுபடியும் பிடிச்சுண்டுட்டதுல, ஆத்துல தண்ணி கிடுகிடுனு ஏறிப் போயி, வெள்ளம் வண்ணானை அடிச்சுண்டு போயிடறது. பாவம் வண்ணாத்தி...சாப்பாடு கூடையும், துணி மூட்டையுமா ஆம்படையானைத் தேடித் தேடி அலைஞ்சுட்டு கடைசில முதுகுல இருந்த அத்தனை துணிகளும் கலர் கலரான இறக்கைகளா மாற, அவ ஒரு அழகான வண்ணாத்திப் பூச்சியாகவே ஆயிடறா... இன்னிக்கும்

வண்ணாத்திப்பூச்சி ஒரு இடத்துல தங்காம மொனு மொனுனு பறந்துண்டே தன் புருஷனைத்தான் தேட றது...யாராவது அப்படி தேடறத்துக்கு இடைஞ்சல் பண்ணினா 'எங்களை மாதிரி நீயும் உன் பொண்டாட்டி யும் பிரிஞ்சு அவஸ்தைப்படணும்'னு அது சபிச்சுடுமாம். இப்ப புரியறதா, ஏன் அத விட்டுடுனு சொன்னேன்னு?''

புரிந்தது.

கூடவே, ஈர மண்ணில் விழுந்த விதை மாதிரி அதற் குப் பிறகு பட்டாம்பூச்சியை எப்போது பார்த்தாலும், அதன்பால் ஒரு இரக்க உணர்வு முளைவிடுவதும் புரிந்தது.

பட்டாம்பூச்சி ட்யூப் லைட்டை விட்டு பறந்து ஜன்ன லிடம் சென்று வெளியே போவது மாதிரி பாவ்லா காட்டி விட்டு மீண்டும் விளக்கையே சுற்றி வந்தது.

மக்கு பூச்சியே—உன் புருஷன் இந்த விளக்கடியிலா ஒளிந்திருக்கான்? வெளியே போய் தேடேன்!

அவன் புத்தகத்தை கையிலெடுத்து விட்ட இடத்தி லிருந்து படிக்க முற்பட்டான். பத்து நாட்களில் பாங்க் எக்ஸாம் வருகிறது. பொறுப்பாய் படித்து பாஸ் செய் தால் உத்தியோக உயர்வு, கூடுதல் சம்பளம், அம்மாவை அழைத்து வந்து குடுத்தனம் அமைப்பது போன்ற உபரி வசதிகளுக்கு இடம் உண்டு. இல்லாவிட்டால் இந்த நாற்றம் பிடித்த லாட்ஜ் அறை வாசமும், வேகாத 'மெஸ்' சோறும்தான் தொடரும்.

கட்டுப்பாட்டை மீறிக் கொண்டு புத்தி பரபரத்து திரிந்த பட்டாம்பூச்சியிடமே ஓட, விளக்கை அணைத்து வைத்தால் வெளியே சென்று விடும் என்கிற எண்ணத்தில் விளக்கை அணைத்தான். இருட்டில் உட்கார்ந்திருந்த ஓரிரு நிமிஷங்களிலும் தலைக்கு மேலே பூச்சி பறக்கும்



சலனத்தை உணர முடிய அவனுக்குத் திடுமென அப்பா இருந்த நாட்களில் பழைய மாம்பலம் வீட்டில் குடியிருந்த போது நடந்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. அப்போது அவன் பள்ளியில் பத்தாவது படித்துக் கொண்டிருந்தான்.

துருப்பிடித்த டேபிள் ஃபேன் ஒன்றை வைத்துக் கொண்டு ஏழு பேர்கள் காற்று வாங்கி நிம்மதியாய் உறங்க முடியவில்லை என்பதால் தீபாவளி போனஸ் பணத்தில் ஸீலிங்ஃபேன் வாங்கி கூடத்தில் அப்பா மாட் டிய வருஷம்.

ஒரு மாசம் சென்றிருக்கும். இரண்டு நாட்கள் வீட்டை பூட்டிக் கொண்டு உறவுக்காரர் வீட்டு விசே ஷத்திற்குச் சென்று வந்து பார்த்தால், கூடத்து தரை யெல்லாம் வைக்கோல், தேங்காய் நார் குப்பை. மின் விசிறிகள் மேல் கிண்ணத்தில் கூடு கட்டிவிட்ட குஷியில் ஜாலியாய் குரல் கொடுத்துக் கொண்டு இங்கும் அங்கும் பறக்கும் சிட்டுக்குருவிகள்!

''குருவிக்கூட்டை கலைச்சா, நம்ப குடும்பம் சிதறிடும் அதும் பாட்டுக்கு இருந்துட்டு போகட்டுமே...கூட ஒரு தடவை பெருக்கிட்டா போச்சு...''

அம்மாவின் சிபாரிசில் குருவிகள் சௌக்யமாய் குடும்ப வாழ்க்கையைத் தொடர, விரைவிலேயே முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் ஓயாமல் கத்துவது கேட்க ஆரம் பித்தது. ஒருநாள் ராத்திரி மணி ஒன்பதரை, பத்து இருக்கும், விளக்கை அணைத்து படுத்து கொஞ்ச நேரம் கூட ஆகியிருக்காது. 'டப்' என்று ஏதோ அடிபடும் ஓசை, பின்னோடு 'சொத்'தென்று தரையில் எதுவோ விழும் சத்தம்...

மின் விசிறியில் அடிபட்டு தாய்க் குருவி செத்துப் போனதும், அடுத்து வந்த நாட்களில் குஞ்சுகள் அம்மா

வுக்காக பரிதவித்ததும் நினைவுக்கு வர, அவன் சங்கடப் பட்டான்.

அந்தக் குருவிபோல இந்தப் பட்டாம்பூச்சியும் சுழலும் விசிறியின் இறக்கையில் சிக்கிக் கொள்ளலாம் என்கிற எண்ணம் இருப்புக் கொள்ளாமையை அதிகமாக்க, அவசரமாய் எழுந்து சுவரில் தடவி ஸ்விட்சை கண்டு பிடித்து, ஃபேனை நிறுத்தினான்.

மறுபடி இருட்டைத் துழாவிக் கொண்டே கட்டிலில் உட்கார்ந்தான்.

ஓரிரு நிமிஷங்கள் செல்வதற்குள் கழுத்திலும், கக்கத் திலும் வியர்வை கசகசக்க ஆரம்பித்ததும் மேற்கொண்டு பொறுக்க முடியாதவனாய் எழுந்து விளக்கைப் போட் டான்.

மொட்டுப் போல கதவுக்கு மேலே சமர்த்தாய் உட்கார்ந்திருந்தது, வெளிச்சம் பரவியதும் மீண்டும் பறக்கத் துவங்க அவன் ஓரத்தில் வைத்திருந்த குடையை எடுத்துச் சுவரில் தட்ட அதை விரட்டப் பார்த்தான். பட்டாம்பூச்சி அறைக்குள்ளேயே சுழன்று வந்ததே தவிர வெளியே போக பிடிவாதமாய் மறுத்தது.

சில நொடிகளுக்கு என்ன செய்வது என்று புரியாத திணுசில் அவன் மூச்சிரைக்க நின்றான். பட்டாம் பூச்சியை மறந்து விட்டுப் புத்தகத்தைப் படிக்கலாமா என்றும் நினைத்தான். முடியாது என்று தோன்ற விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான்.

புழுக்கம் அதிகமாய் இருந்ததில் உறக்கம் வர மறுத் தது. பட்டாம்பூச்சி எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு மின் விசிறியை சுழலவிட்ட சில நொடிகளுக்கெல்லாம் அது மடத்தனமாய் குறுக்கே பறந்து அடிபடுகிற மாதிரியான



கற்பனை எழ, 'சனியன், சனியன்' என்று வாய்விட்டு வைது கொண்டே எழுந்தான்.

இரவு முழுவதும் இப்படி அல்லாடிக் கொண்டிருந்து விட்டு காலையில் அவன் எழுந்த போது கண்கள் லேசாகச் சிவந்திருந்தன. முகத்தில் நீர் சுரந்திருந்தது.

கழிவறைக்குச் சென்று திரும்பிய போது எதிர்பட்ட மூணாவது அறை பாஸ்கர் 'என்ன, நைட் ஷோவா?' என்று கண்களைச் சிமிட்டி வினவியது எரிச்சலை எழுப் பியது.

உடை உடுத்தி தயாரான நாழிகையில் அந்த பட்டாம்பூச்சி ஜன்னல் வென்டிலேட்டர் மேல் உட்கார்ந் திருப்பதைப் பார்க்க முடிய, மாலை அலுவலகத்திலிருந்து திரும்புவதற்குள் அது நிச்சயம் வெளியே பறந்து விடும் என்று உறுதியாய்த் தோன்றியது. எதற்கும் இருக்கட்டும் என்று ஜன்னலை அகலத் திறந்து, கொக்கியை போட்டு விட்டு கிளம்பினான்.

நாள் முழுவதும் துளி ஒய்வு இல்லாமல் உழைத்து விட்டு மாலையில் லாட்ஜுக்கு வந்து, பூட்டியிருந்த அறைக் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்து விளக்கை போட்ட நொடியில் அது நாழிகை மறந்திருந்த பட்டாம்பூச்சியின் ஞாபகம் தலை தூக்கியது.

சட்டையை கூட கழற்றாமல் கண்களை சுழற்றி பார்த்தவரையில் அது தென்படாது போக, சன்னமாய் விசிலடித்துக் கொண்டே மின் விசிறியை வேகமாக ஓட விட்டான். உடைகளை கழற்றி, லுங்கி அணிந்து, குளிய லறைக்குச் சென்று முகத்தை கழுவிக் கொண்டு வந்தான்.

ஈரத் துண்டை நாற்காலியின் முதுகில் போட்டு விட்டு, கண்ணாடிக்கெதிராக நின்று தலை சீவிய போது முதலில் பின்னால் சலனத்தை உணர முடிந்தது. பிறகு

கண்ணாடியில் பிரதிபலிக்க பிம்பத்தையும் பார்க்க முடிந்தது.

திரும்பினான். அதுவேதான். அந்தப் பழுப்பு பட்டாம்பூச்சியேதான்.

அன்றிரவும் முந்தின இரவு போல அல்லாட்டத்தில் முடியுமோ என்கிற பதட்டம் எழ, கையிலிருந்த சீப்பை ஆத்திரத்துடன் பட்டாம்பூச்சியை நோக்கி வீசி எறிந்தான்.

யாரோ மணி அடித்து கூப்பிட்ட மாதிரி வந்து கழுத்தை அறுக்கறதே சனியன்!

லாட்ஜ் பையனைக் கூப்பிட்டு அதை துரத்தச் சொல்லலாம் என்று எண்ணினான்.

பத்து நாட்களுக்கு முன் கீழ் தளத்தில் இருக்கும் செந்தில் அறையில் கருந்தேள் ஒன்று எப்படியோ புகுந்து விட்டதும், அதை அடிக்க கூப்பிட்டதற்காக போவோர் வருவோரிடமெல்லாம் 'ஒரு ஆம்பிளை, தேளக் கண்டு பயப்பட்டா எப்படி?' என்று லாட்ஜ் பையன் சொல்லி டபாய்த்ததும் நினைவுக்கு வர, பட்டாம்பூச்சியை துரத்த அழைத்தால், நாளைக்கு பேரை சந்தி சிரிக்கப் பண்ணி விடுவான்—என்ற பயம் தோன்ற நினைப்பை மாற்றிக் கொண்டான்.

எரிச்சல் அடங்காமலேயே விளக்கை அணைத்து, கதவை பூட்டிக் கொண்டு மெஸ்ஸுக்கு சாப்பிடப் போனான்.

திரும்பி வந்தபோது பிரச்னை இன்னும் கொஞ்சம் சிக்கலாயிருந்தது.

எங்கிருந்தோ அறைக்குள் வந்துவிட்ட சாம்பல் நிற பல்லி ஒன்று, பட்டாம்பூச்சிக்கு குறி வைத்து அதை துரத்திக் கொண்டே நகர, பின் தொடரும் ஆபத்தை



உணராமல் பட்டாம்பூச்சி தன் இஷ்டத்துக்கு மடத்தனமாய் சஞ்சரிக்க, அதை வேடிக்கை பார்த்தவாறு கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாமல் அவன் பல்லி பூச்சியை நெருங்க விடாமல் விரட்ட முற்பட்டான்.

சுவரில் பலமாய் தட்டி பல்லியை பயமுறுத்தினாலும் அது சில நிமிஷங்களுக்கு கட்டிலுக்கு அடியில், கதவில் இருந்த விரிசலில் என்று இண்டு இடுக்கு பார்த்து ஒளிந்து கொண்டிருந்துவிட்டு, மறுபடி ஓசைப்படாமல் வெளிப்பட்டு தன் இரையை தொடருவதிலேயே குறியாய் இருக்க, இவன் அதற்கு மிஞ்சின எச்சரிக்கையுடனும் வேகத்துடனும் செயல்பட வேண்டி வந்தது.

இருக்கற கஷ்டம் போதாது போல சில சந்தர்ப்பங்களில் பல்லி எட்டிப் பிடிக்கற தொலைவில் வலிய வந்து அந்த முட்டாள் பட்டாம்பூச்சி உட்காருவதை விரட்டி விடும் வேலையோடு மின்விசிறியை நிறுத்தி, புழுக்கம் அதிகமானால் ஓடவிட்டு, மறுபடி நிறுத்திய அவஸ்தை வேறு சேர்ந்து கொண்டது.

இதனடுவில் பதட்டத்தில் இவன் எழுப்பிய ஓசைகளை கேட்டுவிட்டு, மூடியிருந்த கதவை அடுத்த அறை சுந்தரலிங்கம் தட்டி 'என்ன சத்தம், தம்பி? நிம்மதியா தூங்க விடாம என்னத்த உருட்டிக்கிட்டு இருக்கீங்க? நடு ராத்திரில?' என்று அதட்டலான விசாரிப்பையும் சமாளிக்க வேண்டி வந்தது.

இரவு கழிந்து, பொழுது விடிந்த போது சொத சொதத்து ஏகத்துக்கு சிவந்து கண்களும், அவைகளைச் சுற்றி கருவளையங்களுமாய் இருந்தவன் அதே கோலத்தில் ஆபீஸுக்குப் போனதும் தலையோடு கால் ஏறிட்ட அதிகாரி சிடுசிடுப்பை மறைக்காமல் கேட்டுவிட்டார்.

''வாட்ஸ் ராங்? ரொம்ப நல்ல பையன்னு நினைச்சிருந்தேனே?''

அவருடைய மாப்பிள்ளை சென்ற ஆண்டு குடி நோயாளியாக மாறி வயிறு வீங்கி, ரத்த வாந்தி எடுத்து இளம் மனைவியையும் பிஞ்சு பிஞ்சாய் இரண்டு குழந்தைகளையும் விட்டுவிட்டு அகாலமாய் செத்திருந்தது, தூசி விழுந்து யாருக்காவது கண்கள் சிவந்து போனால்கூட 'குடி கேஸ்தான்' என்கிற தீர்மானத்தில் 'நல்ல பையன்னு நினைச்சிருந்தேனே வாட்ஸ் ராங்?' என்ற கேள்விதான்

மதியம் ஆவதற்குள் வேலைகளை ஒழுங்காக கவனிக்க முடியாமல் கண்கள் ஏரேடியாய் எரிந்தன, இமைகள் திறக்க மறுத்தன. சிந்தனை தெளிவில்லாமல் கன்னா பின்னா என்று ஓடியது.

பீச்சில் காத்தாட உட்கார்ந்து விட்டு, இருட்டிய பிறகு லாட்ஜுக்குத் திரும்பிய போது அவன் ஏகத்துக்கு ஓய்ந்திருந்தான்.

உள்ளே நுழையவே தயக்கமாக இருந்தது.

மின்விசிறியையோ விளக்கையோ போடாமல் கொஞ்ச நேரம் சும்மா உட்கார்ந்தான்

பிறகு மெதுவாக எழுந்து விளக்கை ஏற்றிவிட்டு, கூசின கண்களை வெளிச்சத்துக்கு பழக்கி மெதுமெதுவாக அவன் நிமிர்ந்த போது எங்கிருந்தோ பறந்து வந்த பட்டாம்பூச்சி பரிச்சயம் ஆகிவிட்ட தைரியத்தோடு ட்யூப்லைட்டின் விளிம்பிலேயே அமர, விளக்கின் அடி பக்கத்தில் சாமர்த்தியமாய் மறைந்திருந்துவிட்டு சரக்கென்று வெளிப்பட்ட சாம்பல் பல்லி, கண்மூடி திறக்கும் அவகாசத்தில் அதை நோக்கி தாவ...

முக்கோணமாய், குறுக்கே கோடு கிழித்த அரை உள்ளங்கை சைஸில் தெரிந்த பட்டாம்பூச்சியின் உடம்பில் பாதிப்பகுதி காணாமல் போயிற்று. மரண அவஸ்தையில துடித்த மிகுதியை, தலையை உதறி நாலு விழுங்கலாய் விழுங்க... எண்ணி சில [கணங்கள் நகர்வதற்குள் அந்த



பட்டாம்பூச்சி இருந்த சுவடு தெரியாமல் மறைந்தது மாயமாக...

அவன் எதையுமே சிந்திக்க, செய்ய தோன்றாத மாதிரி செயலிழந்து போனான். உடம்பு விரைத்தது. பிடறியில் வியர்த்தது

அடி உதட்டை நாவால் மெதுவாக ஈரமாக்கி மூச்சை இழுத்து வெளியிட்டான். பின்னர் தலையை குனிந்த வண்ணம் கட்டிலை நெருங்கி மெள்ள காலை நீட்டி படுத்துக் கொண்டான்.

சில நிமிஷங்களில், இன்னும் சாப்பிடாததையோ, விளக்கை அணைக்காமல் இருப்பதையோ குறித்து அலட்டிக் கொள்ளாமல் நிம்மதியாய் உறங்க ஆரம்பித்தான்.

---

## 2. "சித்த சமத்தா இருக்க மாட்டியோமா?"

இன்லாண்ட் லெட்டரின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டிருந்ததை ஞானம் திரும்பத் திரும்பப் படித்தாள்.

சம்பிரதாய ஆரம்ப—முடிவுக்கு இடையில் 'நான் அஸ்ஸாமிலிருந்து வந்து பத்து நாள் ஆகிறது. முடிந்தால் அண்ணா நகருக்கு ஒரு தரம் நீ வந்து என்னை பார்த்தால் நல்லது' என்ற வரிகளில் தொனித்தது வெறும் செய்தியா அழைப்பா என்று புரியவில்லை.

எதுவானாலும், மன்னியைப் பார்த்து நாளாகிறது. அவளே கூப்பிடும்போதும் போகாவிட்டால் நன்றாக இருக்காது. பார்த்தாலும் கூட 'நன்றாக இருக்க' ஒன்றுமிராது என்றாலும், எத்தனை நாளைக்குத்தான் தள்ளிப் போடுவது?

போகலாம் என்று முடிவு செய்தாலும் சரசரவென்று கிளம்பிப் போய்விட முடிகிறதா என்ன! 'மன்னியைப் பார்த்துவிட்டு வந்தேன்' என்று சாதாரணமாக சொல்வதும், 'காலையில் எனக்கு நெஞ்சு வலித்தது. ஹார்ட் அட்டாக்காக இருக்குமோ' என்று பயப்படுவதும் புருஷன் சிவராமனுக்கு ஒன்றுதான். எதற்கும் 'அப்படியா?'' என்பதுபோல ஒரு பார்வை, மிஞ்சிப் போனால் 'போறது போ!' என்பதுதான் மாமூலாக கிடைக்கும் பதில்.

தானுண்டு, தன் வேலையுண்டு ரகம். லட்ச ரூபாய் லாட்டரியில் வந்தாலும் குதிப்பது கிடையாது; போனாலும் இடிந்து போகிறவர் இல்லை. சரியான அப்பிராணியா, இல்லை விவேகம் நிறைந்த ஸ்திதப் பிரக்ஞரா? தெரியாது. தெரிந்து கொள்ளவும் ஞானம் ஆசைப்பட்டதில்லை.

கையிலிருந்த கடிதத்தை மற்றுமொருமுறை படித்தாள்.

போய் வந்துவிட்டால், ஒரு காரியம் முடிந்தது. நாளைக்கு 'நான் லெட்டர் போட்டும், நீ வரவில்லை' என்கிற குற்றச்சாட்டுக்கு இடம் இருக்காது.

கல்யாணமாகி இத்தனை வருஷங்கள் கழிந்த பிறகும், மாப்பிள்ளைகள் வந்து பேரன் பேத்தி பிறந்த பிறகும் மன்னியிடம் தனக்கு இருக்கும் பயத்தை நினைக்கையில் உதட்டோரம் சிரிப்பொன்று சுழித்தது.

மீண்டும் ஞானம் கடிதத்திடம் கவனத்தைச் செலுத்தினாள்.

ஒன்பது மணிக்கு கடையை மூடி சாவியை முதலாளி வீட்டில் கொடுத்துவிட்டு அவர் வரும்போது வீடு திறந்திருந்தால் போதும், அதற்குள் அண்ணா நகருக்கு நாலு தரம் போய்விட்டு வரலாம். ஆனால் தனியாக எப்படிப் போவது!

போக வேண்டும் என்கிற தீர்மானத்தின் தோளை அணைத்தபடி கவலையும் உடன்வந்து நின்றது.

கடைக்குட்டி சுபத்ரா மூன்று மாசங்களுக்கு முன் திருமணமாகிச் செல்லும் வரை எதற்கும் அவள் கூட நின்றதால், ஞானம் எந்த வகையிலும் கஷ்டத்தை உணர வழி இல்லாமல்தான் இருந்தது.

பெற்றது நாலும் பெண் என்றாலும் ஒவ்வொருத்தியும் வீட்டில் இருக்கும்வரை, குடும்பச் சுமையை பகிர்ந்ததும் அல்லாமல் உப்பு, புளி வாங்குவதிலிருந்து தங்கள் கல்யாணத்துக்கு சத்திரம் பார்ப்பதுவரை தாங்களே கவனித்துக் கொண்டு விட்டார்கள். சுபத்ரா போன பின்தான் ஞானத்துக்கு திண்டாட்டமே ஆரம்பமாயிற்று. ஒரு வழியாய் இப்போதுதான் வாசலில் காய்கறி வாங்கவும், தெரு முனையில் இருக்கும் கடையில் மளிகை வாங்கவும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அழகில் அண்ணா நகருக்கு தனியாய் எப்படிப் போவது? எந்த பஸ்ஸில் ஏறி, எங்கு இறங்கி, எப்படிப் போக!

மூத்தவள் நிர்மலாவின் புருஷனுக்கு கோயமுத்தூருக்கு மாற்றலாகி போய் ஒரு வருஷமாகிறது. இங்கே சென்னையிலேயே இருந்திருந்தால் கூப்பிட்ட குரலுக்கு உடனே ஓடிவருவாள், நிச்சயம். இப்போது மட்டுமென்ன சென்னைக்கு வரும் ஒவ்வொரு முறையும் பெற்றவர்களின் மெடிகல் செக்கப் முதல் தங்கைகளின் கல்யாண விஷயங்கள் வரை அத்தனையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள். போதாததற்கு புடவை, கிரைண்டர் என்று வாங்கி வந்து 'அவர் தாம்மா ஐடியா கொடுத்தார்' என்று சின்ன சிரிப்போடு நீட்டுகிறாள்! எதுக்குடீ இதெல்லாம்? என்றால், இன்னும் பெரிதாக சிரிப்பாள். 'செஞ்சா என்னம்மா? ரெண்டு பேரும் ஒரே மாதிரி பாங்க் வேலைதானே? மாமியாருக்குப் பண்ணலாம், அம்மாவுக்குன்னா கூடாதா?' என்று அவள் ஒரே போடாகப் போடுவதை மாப்பிள்ளையே 'அதானே!' என்று அங்கீகரிக்கும்போது மறுத்துப் பேச ஞானத்துக்கு வாய் ஏது!

இரண்டாமவள் கல்யாணிக்கு சம்சாரம் பெரிசு. மச்சினர் ஓர்ப்படியோடு கல்யாணமாகாத கொழுந்தன்களும், நாத்தனார்களும் உண்டு. இருப்பினும் ஓயாத அடுப்பங்கரைக் காரியத்துக்கு இடையிலும் மாசம் ஓரிரு



தரமாவது எட்டிப் பார்க்காமல் இருப்பதில்லை. 'வந்த இடத்திலியாவது சித்த பேசாம படுத்துக்கிடக்கப்படாதோ?' என்று ஞானத்துக்குத்தான் அங்கலாய்ப்பாக இருக்கும். ஆனால் கேட்கிறவள் இல்லை கல்யாணி. அதிகம் பேசுகிறவளும் இல்லை. என்னமோ பாதியில் விட்டுப் போன கைக்காரியத்தைத் தொடர்கிற மாதிரி வரும்போதே புடவையைத் தூக்கி செருகிக் கொண்டேதான் வருவாள். இரவு அவள் கிளம்பிப் போகும்போது பார்த்தால் வீடு பளிச்சென்று ஆகியிருக்கும்.

இந்த முறை கல்யாணி வந்துவிட்டுப் போய் நாலு நாள் கூட ஆகவில்லை. அதற்குள் மறுபடி கூப்பிட முடியுமா? வேண்டாம்.

கௌசல்யாவைக் கேட்டால் என்ன? 'மன்னியப் பார்க்கணும், வர்றியா?' என்றால் அவள் மாமியார் முசுடு. விடுமோ விடாதோ! 'உன்னூர்ல பொறந்தாம் இருக்குன்னு துசுக்கு துசுக்குன்னு கிளம்பியாயிடறது!' என்று எப்போது போனாலும் குத்திக் காட்டத் தவறுவதில்லை. 'அம்மா வருத்தப்படும்படியா வெச்சுக்காதே கௌசி' என்று அவள் புருஷனும் நாசூக்காகத் தடைபோடுகிறவன்தான். நாசூக்காகத்தான் சொல்வானோ அல்லது வேறு ஏதாவது கடுமையாய் சொல்வானோ, எதுவும் தெளிவாகச் சொன்னதில்லை கௌசல்யா. ஞானத்திடம் எதையும் சொல்லி புலம்பாததோடு, புக்காத்து மனிதர்களை விட்டுக் கொடுக்காமல் பேசுவதிலும் அவள் கெட்டிக்காரி. ''யார் வீட்டுல ப்ரச்னை இல்ல? சின்ன விஷயத்த எல்லாம் பெரிசு பண்ணினோம்னா வாழ்க்கை நரகமாயிடாதா? அவான்னாம் அடிப்படைல நல்லவாதான்...வார்த்தை ஜாலம் பண்ணி பேசத் தெரியல... அவ்வளோதான்!'' என்பாள், எல்லாம் தெரிந்த நூற்றுக் கிழவி மாதிரி!

ஆனால் அவர்களைச் சமாளிக்கத் தெரிந்தவளுக்குக் கூட மன்னியை மட்டும் பிடிப்பதேயில்லை. துணைக்காவது வா என்று கேட்டுத்தான் பார்க்க வேண்டும். வேறு வழியில்லை.

கௌசல்யாவைக் கூப்பிடலாமா, வேண்டாமா? ''ரொம்ப பெரிய மனுஷி! 'வா'னு லெட்டர் போட்ட ஒடனே, அடிச்சு பொரண்டுண்டு ஓடறதுக்கு? வேற வேலை இல்லம்மா உனக்கு!' என்று அதட்டுவாளோ! என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும், இந்த காதில் வாங்கி அந்தக் காதால் விட்டு விட்டு சுருக்க இரும்பிடலாம் வாடீ'— என்று சொல்லி, அவளோடு போய் வந்து விட்டால் ஒரு வேலை முடிந்தது என்று இருக்கும்

செய்ய வேண்டியது என்ன என்று உறுதியான பிறகு ஞானம் வீட்டைப் பூட்டிக் கொண்டு இரண்டு வீடு தள்ளியிருந்த டாக்டர் கிளினிக்குக்கு போய், டேபிளின் மீதிருந்த டைப்ரைட்டரைத் தட்டிக் கொண்டிருந்த பெண்ணிடம், ''ஒரு போன் பண்ணிக்கட்டுமாம்மா?' என்றாள் மெதுவாக.

வழக்கமாய் வருகிறவள் என்பதனால் அந்தப் பெண் தலையாட்ட, ஞானம் கையில இருந்த சீட்டைப் பார்த்து நம்பரைச் சுழற்றினாள்.

''ஹலோ, யாரு? கௌசியா?''

''நான்தாம்மா...என்ன இப்பிடி மத்தியான வேளைல போன் பண்றே? யாருக்கும் உடம்புக்கு ஒண்ணுமில்லியே?''

''அதெல்லாம் இல்லேடீ...மன்னிகிட்டேந்து கடுதாசி வந்திருக்கு, அதான் சித்த போய் பார்ப்பமேனுதான்...''

கௌசல்யாவின் குரல் உயர்ந்து கத்தலாய் வெளிப்பட்டது. ''உடனே விழுந்தடிச்சிண்டு அண்ணா நகருக்குப்



போப்போறியாக்கும்! ஏம்மா உனக்கு எத்தனை தரம் சொன்னாலும் உரைக்கவே மாட்டேங்கறது?''

எதிர்ப்பார்த்ததுதான். ஞானம் அதை பாராட்டாமல் கேட்டாள்.

''ப்ச்...அதெல்லாங் கிடக்கட்டுண்டீ! நீ எனக்குத் துணைக்கு வருவியா மாட்டியா? அதச் சொல்லு...''

''மாட்டேன். நானும் வரமாட்டேன், நீயும் போக வாண்டாம். இங்க மாமியாருக்கு உடம்பே நன்னால்லே, எத்தச் சாப்பிட்டாலும் வயத்துல தங்காம வந்துடறது.. விட்டுட்டு வராப்பல இல்லே...வேற ஏதானும் அவசியம்னாலும் எங்காத்துக்காரர்கிட்ட சொல்லி பாத்துக்கச் சொல்லலாம். இப்ப நீ அண்ணா நகருக்குப் போகற அளவுக்கு அவசரம் ஒண்ணுமில்லே...பேசாம இரு!''

சுபாவப்படி அவள் மூச்சுவிடாமல் கத்த, ஞானத்துக்கு ஏமாற்றம். ரிஸீவரை வைத்துவிட்டு காசைக் கொடுக்கும்போது சுபத்ராவுக்கு போன் செய்து கேட்டால் என்ன என்று ஒரு கனம் தோன்றிய நினைப்பு உடனே மறைந்தது.

ஆபத்து என்றால் ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு ஓடியே வருவாள் என்றாலும், அவளும்தான் 'மன்னி' என்று கேட்டாலே கத்துவாள். அதோடு புதுசாய் கல்யாணமானவள், சாயந்திரம் புருஷனோடு என்ன புரோகிராம் வைத்திருக்கிறாளோ! கிளினிக்கிலிருந்து வந்து பூட்டைத் திறந்து வீட்டுக்குள் நுழைந்தபோது, ஏதோ ஒரு கையாலாகாத்தனம் மனசு முழுக்கப் பரவியிருந்தது.

ஒரு பிள்ளை—ஒரே ஒரு பிள்ளையாவது பெற்றிருந்தால் இப்படி கெஞ்சிக் கொண்டிருக்க வேண்டாமே!

'எடுடா வண்டியை' என்றால் நிமிஷ நாழிகையில் கொண்டு சேர்த்துவிட மாட்டானா!

'சித்த சமத்தா இருக்க மாட்டியோடீ? என்ற மன்னியின் விமர்சனம் நிஜம்தானோ! இன்னும் கொஞ்சம் சமர்த்தாக இருந்திருக்கலாமோ! பெண்ணுக்கு பதில் பிள்ளையாய் பெற்றிருக்கலாமோ?

சே...என்ன பேத்தலான நினைப்பு இது! என்னமோ வேண்டுமென்றே பெண்ணை விருப்பிப் பெற்ற மாதிரி! நம் கையில் என்ன இருக்கிறது! எது வேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் உரிமை யாருக்கும் இல்லாதபோது சமர்த்து என்ன, அசடு என்ன!

வேலை ஏதும் ஓடாமல் குருட்டு யோசனையில் ஆழ்ந்திருந்த ஞானம் மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் சத்தம் கேட்டு ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள்.

கணவனின் தோளைப் பிடித்தபடி உட்கார்ந்திருந்த சுபத்ரா இறங்கி உள்ளே வந்தாள்.

''என்னம்மா, தூங்கிண்டிருந்தியா?'' என்ற கேள்விக்கு பதில் சொல்லாமல் ஞானம் மாப்பிள்ளையைப் பார்த்து சின்ன குரலில் ''வாங்கோ...'' என்றாள்.

லேசான கூச்சத்துடன் அலன் தலையசைத்து சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

''ஆபீஸ் லீவாடி இன்னிக்கு? இந்த நேரத்துல போய் வந்திருக்கியே?''

''லீவா? இன்னிக்கு சனிக்கிழமைம்மா... மறந்துட்டியே? அரை நாள்தானே ஆபீஸ்...''

''ஆமா, ஞாபகமே இல்லே...சரி, என்ன சாப்பிடறேன்? இட்லி மாவு இருக்கு, ஒரு ஈடு வார்க்கட்டுமா?''



''ஒண்ணும் வேண்டாம்மா... வரும்போது ஹோட்டலில சாப்பாடே ஆய்டுத்து. சரி, நீ கிளம்பறியா, மன்னியாத்துக்குப் போகலாம்...''

''மன்னியாத்துக்கா?'' ஞானத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

சுபத்ரா சிரித்தாள்.

''கௌசிதாம்மா போன் பண்ணிச் சொன்னா... நல்லவேளையா நா அப்பத்தான் ஆபீஸ் முடிஞ்சு இவரோட சினிமாக்குக் கிளம்பிண்டிருந்தேன். 'மன்னிய பாக்காம அம்மாவால இருக்க முடியாது—என்னால போகமுடியல நீயானும் போயேன்'னு சொன்னா...''

''அப்போ, சினிமா?''

''அதுக்கென்ன, இன்னொரு நாள் போயிண்டா போச்சு! இல்லேன்னா நீ மறுபடியும் நாலு நாள் கழிச்சு கௌசியத்தான் தொந்தரவு பண்ணுவே. பாவம் அவ, பெரிய சம்சாரத்துல மாட்டிண்டு இருக்கா...இன்னிக்கு விட்டா என்னால அப்புறம் வரமுடியாது, இந்த மாதிரி இழுத்துக் கட்டிண்டு 'மன்னி...மன்னி'னு ஓடாதேனு சொன்னா நீ கேக்கவா போறே? சரி கிளம்பு...''

அவளுடைய சலிப்பைப் பொருட்படுத்தாமல் ஞானம் பரபரவென்று புடவையை மாற்றிக்கொண்டு தயாரானாள்.

''ஜாக்கிரதையா போயிட்டு வாங்கோ, நா எட்டு மணி வாக்குல வந்து பிக்அப் பண்ணிக்கறேன்'' என்ற கணவனுக்கு விடை கொடுத்துவிட்டு வந்த சுபத்ராவுடன் வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பினாள்.

அரைமணி காத்திருத்தலுக்குப் பிறகு வந்த பஸ்ஸில் மதிய வேளை என்பதாலோ என்னவோ உட்காரக்கூட இடம் கிடைத்தது.

''அடடா, மன்னிக்கு ஒண்ணுமே வாங்கிக்கலையே! ஒரு டஜன் மலைப் பழமாவது வாங்கிண்டு பஸ் ஏறிருக்கணும்டீ சுபத்ரா''

''ஆ...மா! நீ கொண்டு போறதத் திங்கறதுக்காகத் தான் அவ நாக்கத் தொங்கப் போட்டுண்டு காத்திண்டிருக்காளாக்கும்! உனக்கு இன்னும் இந்த அஞ்ஞானம் விடலியே!''

''எதுக்குடி விடணும்? என்ன இருந்தாலும் எங்கண்ணா பொண்டாட்டி அவ...''

''அதான் அண்ணாவே போயாச்சே, அப்புறம் இவளை என்ன பார்வை வேண்டிக் கிடக்கு!''

''அதுக்காக அண்ணா போயிட்டா உறவே இல்லேனு ஆயிடுமா? அது என்னமோம்மா, உங்க ஒருத்தருக்காவது அவளைப் புடிக்கறதேயில்லே! சித்த லொடலொடனு பேசற சுபாவம்...பாவம்...மத்தபடி...''

''ஆஹா...ரொம்ப பாவம்தான்! எங்களுக்குத்தான் புடிக்கல்லே, உனக்கு என்ன? நாலு நா வட்டம் போய் மன்னிக்கிட்ட சீராட்டிட்டு வரதுதானே? எப்பவோ ஒரு தரம் போயிட்டு வர்றப்பவே உனக்கு பி.பி. ஏறிப் போயிடறது. அவ பேச்சையும் குத்தலையும் கேட்டுண்டு அழாம நீ வந்த நாள் ஏதாவது உண்டா? போம்மா... பெரிசா சப்பை கட்டாத...எனக்குத் தாங்கல...''

ஞானம் மேலும் பேச்சை வளர்த்தவில்லை.

பேச என்ன இருக்கிறது? சுபத்ரா சொல்வது அத்தனையும் உண்மைதானே? மன்னியைப் பார்த்து விட்டு கண்ணில் நீரும் நெஞ்சில் பாரமுமாய் வராத நாளே கிடையாது.

இப்போது என்றில்லை. அந்த நாளில் அண்ணாவின்



கையைப் பிடித்த நிமிஷத்திலிருந்தே அவள் இப்படித் தான்.

வெறும் அக்கவுண்டாய் நுழைந்த அண்ணா படிப் படியாய் உயர்ந்து கம்பெனியின் மேனேஜிங் டைரக்டராய் ஆனபோது மன்னியின் வாயும் நீண்டுதான் போய் விட்டது.

போதாததற்கு அவள் பெற்றது மூன்றும் ஆண் பிள்ளைகள். சொல்லி வைத்த தினுசில் ஞானத்துக்கு நேர் எதிராய் பெண்களாய் வந்து வாய்த்தார்கள்.

முதல் இரண்டு பிரசவத்துக்கும் பிறந்தகம் போன போது ஆரம்பித்த 'சித்த சமத்தா இருக்க மாட்டியோடீ?' என்ற குத்தல் பேச்சு கடைசி இரண்டு பிரசவங்களுக்கு ஞானம் புக்ககத்திலேயே இருந்தபோதும் விடவில்லை.

கொண்டையும் அதைச் சுற்றிய வேணியும், கை, கழுத்து, காது கொள்ளாத வைரமும், தோளைப் போர்த்திய ஜரிகை புடவையும், சற்றே உயர்த்திய முகத்தில் அலட்சிய பார்வையுமாய் மன்னி வரும்போதே ஞானத்துக்கு வயிற்றைக் கலக்கும்.

''மூத்ததுதானே இது? போன தரம் பார்த்ததுக்கு இப்ப என்னமா வளர்ந்திருக்கா? வயத்துல வெச்சு திணிக்கறயாக்கும்! பொண் வளர்த்தியோ பீர்க்கங்கா வளத்தியோனு பெரியவா சொல்ற மாதிரி தபதபனு பெரிசாயி நிக்கும், அப்புறம் நெருப்பக் கட்டிண்டு அலையணும்!''

மேலும் கீழுமாய் பார்வையை மேயவிட்டு, என்னமோ தப்பு நடந்து விட்ட தினுசில் மன்னி பேசும் போது குழந்தைகள் கூசிப் போய் நிற்பார்கள். போதாக் குறைக்கு குழந்தைகள் தவித்து இருக்கையில் ஒத்து நாயனம் மாதிரி அவள் பிள்ளைகள் வேறு! கேர்ல்ஸ்

கூட நாங்க விளையாட மாட்டோம்' என்றும், 'பாய்ஸ் ரூமுக்குள்ள கேர்ல்ஸ் வரக்கூடாது' என்றும் மாற்றி மாற்றி அதிகாரம் செய்தால் யாருக்குத்தான் பிடிக்கும்!

இனிமே நாங்களும் அங்க வரமாட்டோம், உங்க மன்னியும் அவ அருமைப் பசங்களும் இங்க வரவேண்டாம்' என்று எத்தனைதான் பெண்கள் அழுதாலும் ஞானத்துக்குத்தான் ஏனோ மனசு கேட்பதில்லை. பகவான் புண்ணியத்தில் மன்னியிடம் பணத்துக்குப்போய் நிற்க வேண்டிய அவசியம் வாய்க்கவில்லை, நாலு பேருமே படிப்பில் சுட்டி. உயர்ந்த படிப்பு படித்து சமர்த்தாய் நல்ல உத்தியோகங்களைத் தேடிக் கொண்டு விட்டார்கள். எப்போதுமே அதிகம் ஆசைப்படாத வாழ்வானதால், சக்திகேற்ப, ஒருத்தர் தயவின்றி கல்யாணம் காட்சிகளைக் கூட ஒப்பேற்றியாகி விட்டது.

ஆனால், இவர்கள் போய் நிற்காவிட்டாலும், மரியாதைக்காகவாவது எதற்கும் உதவி வேண்டுமா என்றுகூட கேட்டவளில்லை இந்த மன்னி. அண்ணாவுக்கு எப்போதுமே நேரம் இருந்ததில்லை. பார்க்கும் சந்தர்ப்பங்களில், 'சௌக்கியமாம்மா? மாப்பிள்ளை எப்படி இருக்கார்? குழந்தைகள்? அவசர வேலையிருக்கு, நா வரட்டுமா? நீ மன்னிகிட்ட பேசிண்டிரு...' என்று வார்த்தை மாறாமல் ஒப்பித்து விட்டுப் போவார்.

இவள் வீட்டு விசேஷங்களுக்குக்கூட ஒன்று அல்லது இரண்டு வேளை வந்து தலையைக் காட்டிவிட்டுப் போவார்கள். அவ்வளவுதான். அவள் பிள்ளைகளுக்கு அதற்குக்கூட நேரம் இருந்ததில்லை.

'ராகவ் லண்டனுக்குன்னா போயிருக்கான், அவன் எப்பிடி வர முடியும்? ரமேஷும் ரவியும் பரீட்சைக்குப் படிக்கறா... வெறும் டிகிரியா, போனாப் போறதுன்னு விடறதுக்கு? இன்ஜினீயரிங்கும், சி.ஏ.வும் படிக்கறவானால நினைச்சாப்பல கிளம்பிட முடியறதா!''



இதற்குப் பிறகு யாருமே வாயைத் திறக்க மாட்டார்கள். திறக்காமலிருக்க ஞானமும் பழகிவிட்டாள். பெண்கள் எரிச்சலுடன் பேசும்போது மட்டும் 'சொல்லட்டுமே? மன்னிக்கு எல்லாமே நன்னா அமைஞ்சிருக்கு. பெருமையா பேசிக்கறா. பிடிக்கலேன்னா நாம காதுல போட்டுக்காம இருக்கணும்' என்று சமாளிப்பாள்.

வாஸ்தவம்தான். எல்லாமே அவர்கள் கணக்குப்படி உசத்தியாக அமையத்தான் செய்தன. மூத்தவன் ராகவன் லண்டனுக்குப் படிக்கப் போனவன் அங்கேயே ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான். அவளை இந்தியாவுக்கு அழைத்து வந்து பெற்றவர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டு திரும்ப லண்டனுக்குப் போனவன் பிறகு வரவில்லை, தகப்பன் இறந்த நேரத்தைத் தவிர.

அடுத்தவன் ரமேஷுக்கு மன்னியே பார்த்து முடிவு செய்த இடம்தான். லட்சாதிபதி வீட்டுப் பெண். பெங்களூரில் பெரிய ஃபாக்டரியும், தோட்டம் போட்ட வீடுமாய் எதற்கும் குறைவில்லை.

கடைசிப் பிள்ளை ரவி அஸ்ஸாமில் வேலையாகிப் போனபோது அங்கே காதலித்த அஸ்ஸாமியப்பெண்ணை இங்கே கட்டி வந்து சம்பிரதாயம் மாறாமல் கைப்பிடித்தான்.

பஸ் குலுக்கலுடன் நின்றது. அடுத்து அமர்ந்திருந்த பெண்மணிக்கு இறங்க வழிவிட்ட கௌசல்யா நினைத்துக் கொண்டு சொன்னாள்.

''இவருக்குக்கூட இஷ்டமே இல்லேம்மா... மரியாதையா நடத்தாதவா வீட்டுக்கு நாம்ப எதுக்குப் போகணும்னார். நான்தான் சமாதானப்படுத்தி என்னைக் கொண்டு விடுங்கோன்னேன். கல்யாணமானவகையோடு நாங்க நமஸ்காரம் பண்ணப் போனப்போ

உங்க மன்னி பேசினதக் கேட்டவா யாரும் அவ மூஞ்சில கூட முழிக்க மாட்டா, தெரியுமோ?''

சுபத்ரா சொன்னதற்கு ஞானம் பதிலேதும் சொல்ல வில்லை.

அண்ணா போய் ஒரு வருஷம் முடியவில்லை என்பதற்காக மன்னி வெளியே வராமல் இருந்த போதுதான் சுபத்ரா கல்யாணம் நடந்தது. கணவனும் மனைவியுமாய் மன்னிக்கு நமஸ்காரம் செய்யப் போனதும், 'ஒரு வழியா உங்கம்மா பாரம் குறைஞ்சிதாடீ! நீங்கள்ளாமாவது சமத்தா இருங்கோ, என்ன புரியறதா?' என்று ஆசீர்வாதம் பண்ணிய மனுஷியின் பேரைச் சொன்னாலே பெண்கள் கோபப்படுவதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது?

பஸ் ஸ்டாண்டில் இறங்கி தெருவுக்குள் திரும்பி நடக்கத் துவங்கியதும் ஞானம் மறுபடி, ''மறந்துட்டியா சுபத்ரா, பழம் வாங்கினாத் தேவலைடீ...'' என, சுபத்ரா ''வேற வேலை இல்லேம்மா உனக்கு...'' என்று சலித்துக் கொண்டாள்.

அம்மாவை அங்கேயே நிற்கச் சொல்லிவிட்டு மெயின் ரோடில் இருந்த பழக்கடைக்குச் சென்று பிளாஸ்டிக் பை நிறைய வாழையும், திராட்சையும் வாங்கி வந்தாள்.

மன்னி வீட்டின் பெரியகேட்டுக்கு உள்ளே அந்த கால போர்டிகோவில் கருப்பு அம்பாஸிடர் கார் ஒன்று தூசி படிந்து நின்றிருந்தது.

அழைப்பு மணியை அழுத்தியதும் கதவைத் திறந்தது சமையல்கார பாட்டி.

''என்ன பாட்டி, சௌக்கியமா? மன்னி எங்கே?''

''யாரு? ஞானமா? வா... வா... உறவு விட்டுப்



போகாம நீயாவது வந்து போயிண்டு இருக்கியே...உங்க மன்னி அந்த ரூம்ல படுத்திண்டிருக்கா...''

பாட்டியின் குரலோ, படுக்கையில் படுத்திருந்த மன்னியின் ''வா ஞானம்...'' என்ற அழைப்போ அத்தனை சுரத்தாக இல்லை.

''உடம்பு சரியில்லையா மன்னி? இன்னிக்குத்தான் சுடுதாசி வந்தது. உடனே புறப்பட்டு வந்துட்டேன்... அஸ்ஸாம்லேருந்து எப்போ வந்தேள்?''

மன்னியிடமிருந்து பதில் வரவில்லை.

சுபத்ராவைப் பார்த்தவள் மெல்ல, ''குளிச்சிண்டிருக்கியா?'' என்றாள்.

வெட்கத்தோடு அவள் தலையைக் கவிழ்த்துக் கொள்ள, ''இல்லே மன்னி...மெய்யோ பொய்யோனு இருக்கு, இன்னும் டாக்டர் தீர்மானமா சொல்லலை...'' என்றாள் ஞானம்.

மன்னி எழுந்து உட்கார்ந்தாள். சுபத்ராவை அருகில் அழைத்து இருத்திக் கொண்டாள். ''இந்த நிலைமைல ஏன் அத்தனை தூரம் பஸ்ஸுல வந்தேள்? குழந்தைய என்டீ தொந்தரவு பண்ணினே ஞானம்?''

இந்த அணைப்பு, இந்த கரிசனம் எல்லாம் புதுசாகப் பட, சுபத்ரா வியப்புடன் அம்மாவை நிமிர்ந்து பார்த்தாள்.

''பரவாயில்லே மன்னி... 'வா'னு நீங்க எழுதியிருந்தேளா, எனக்கு இருப்பே கொள்ளல்லே... சௌசியக் கூப்பிட்டேன், அவ இவளை அனுப்பிச்சுட்டா. அஸ்ஸாம்ல ரவி, அவன் பொண்டாட்டி குழந்தைல்லாம் சௌக்யம்தானே? அவ பேசறது உங்களுக்குப் புரியறதா மன்னி?''

மன்னியிடமிருந்து சலிப்பான ஒரு 'ப்ச்' என்ற சூள் கொட்டல்தான் பதிலாக வெளிப்பட்டது.

"வரும்போது பெங்களூர் போயிட்டு வருவேன்னு சொன்னேளே, ரமேஷாத்துக்குப் போயிருந்தேளா?"

"ப்ச்." என்றாள் மன்னி மறுபடியும். "எங்க போனா என்ன, எனக்கு ஒண்ணும் சரிப்பட்டு வரலே...எல்லாருக்கும் நா வேண்டாத மனுஷியா ஆயிட்டேன்..." என்றபோது குரல் தழுதழுத்தது. சில நொடிகளுக்கு மௌனித்தவள் பேச்சை மாற்றும் உத்தேசத்தோடு "பாட்டி இவாளுக்கு காபியும், டிபனும் கொண்டு வாங்கோ... பாவம் வெயில்ல வந்திருக்கா..." என்றாள்.

வந்தவைகளை சாப்பிட்டு முடித்து ஞானம் ஏதேதோ பேசின அரை மணி நாழியில் மன்னியிடமிருந்து அதிகமான பேச்சில்லை. வழக்கமான ஈட்டிக் குத்தல்களும் இல்லை.

"நா கிளம்பறேன் மன்னி, இவாத்துக்காரர் வேற எட்டு மணிக்கு வரேனு சொன்னார். அப்பறம் வீணா கவலைப்படுவார்..."

மன்னியை சிரமப்படுத்த வேண்டாம் என்று தாங்களே இரண்டு பேரும் சுவாமி அலமாரியிலிருந்த சிமிழியிலிருந்து குங்குமம் இட்டுக் கொண்டு கிளம்பினார்கள்.

"வரோம் மன்னி, உங்க ஒடம்பு நன்னாவேயில்ல... பாத்துக்கோங்கோ...ரொம்ப முடியாமபோனா சொல்லி அனுப்புங்கோ...தனியா கஷ்டப்பட வாண்டாம்..." நிஜமான கரிசனத்துடன் பேசிய ஞானத்தின் கையைப் பிடித்துக் கொண்டு "சரி..." என்ற மன்னி, பலவீனமான குரலில் "சமத்துடீ நீ, பொண்ணாப் பெத்திருக்கே...' என்றபோது அந்த ஒற்றை வரி, நடந்துவிட்ட அத்தனை சமாசாரங்களையும் துல்யமாக உணர்த்த, முதல் முறையாக ஞானத்துக்கு மன்னியை நினைத்து பரிதாபப்படத் தோன்றியது.

---

# 3. முட்படுக்கை

பூட்டியிருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தபோது வீட்டில் நிலவிய அமைதி, சங்கடப்படுத்தியது. கிழவி இருந்தால் இப்படி பூட்டியும் இருக்காது, மயான அமைதியுடனும் இருக்காது. செருப்பை உதறி, இருட்டில் சுவரைத் தடவி, விளக்கை ஏற்ற முனைகையில் காலடியில் எதுவோ மிதிபட்டு 'ஙே' என்று பரிதாபமாய் குரல் எழுப்பியது.

சின்னப் பையனின் ரப்பர் பொம்மை! குனிந்து எடுத்ததை மேஜைமீது வீசினான். பெண்டாட்டியையா அல்லது மனசில் மண்டிய எரிச்சலையா என்று விளங்காமல் பொதுவாக 'சனியன்' என்று முணுமுணுப்பாய் வைதான்.

கோட் ஸ்டாண்டில் சட்டையை மாட்டியபோது அருகில் இருந்த டி.வி.யின் உச்சியில் காணப்பட்ட சீட்டு பார்வையில் விழுந்தது. எடுத்துப் படித்தான்.

எதிர் வீட்டு பர்வதம் அக்காவுடன் மாலை ஆட்டத்துக்குப் போகிறேன். சமையல்கட்டு மேடையில் டிபன் வைத்திருக்கிறேன்.

இந்த முறை மனைவியை மனசில் நிறுத்தி மறுபடியும் 'சனியன்' என்று உரக்க திட்டியவன், காகிதத்தை கசக்கி மூலையில் எறிந்தான். சற்று தள்ளி விழுந்தது இரண்டு தரம் அப்படியும், இப்படியும் உருண்டு விட்டு நின்றது.

இவனுக்கு வேறு என்ன வேலை? ஊரில் ஒரு கொட்டகையில் புதுப் படம் ரிலீஸ் ஆகக்கூடாது! இரண்டு நாட்

கணுக்குள் பார்க்காது போனால் தலை வெடித்து விட்ட மாதிரி ஓயாமல் புலம்புவாள்!

போன வாரம்தானே ஒரு படம் பார்த்தாய், அதற்குள் இன்னொன்றா? என்றால்கூட என்னமோ கேட்கக்கூடாததை கேட்டுவிட்டது போல பத்ரகாளியாய் குரல் எடுத்து கத்துவாள்.

''ஊர் உலகத்துல ஒவ்வொரு புருஷன் பொண்டாட்டிய தாங்குற மாதிரி நீங்க எதனாச்சும் செய்யறீங்களா? கேவலம் ஸினிமா! இத கூட பார்க்க கூடாதுனு சொன்னா எப்படி? சிறைச்சாலை கைதியாட்டம் நாள் பூரா வீட்டுலேயே அடைஞ்சு கிடக்கச் சொல்றீங்களா? பெரிசா வி.ஸி.ஆர் வாங்கிப் போட்டு, கேபிள் டி.விக்கும் கனெக்ஷன் கொடுத்திட்ட மாதிரி என்ன பேச்சு இது? அதுக்கு ஏற்பாடு பண்ணிடுங்க, அப்புறம் நா வெளியே காலடி எடுத்து வச்சா, ஏன்டீனு கேளுங்க!''

ஆமாமாம், கேட்க வேண்டியதுதான்! போன வருஷம் வரைக்கும் ''கால் காசு பெறாதவளெல்லாம் கலர் டி.வி வச்சுகிட்டு பெருமை பட்டுக்கறா...வசதியான குடும்பத்துல பொறந்தும் தாலி கட்டினவருக்கு துப்பு இல்லாததால பிளாக் அண்ட் வொயிட் டி.வி.ய கட்டிகிட்டு மாரடிக்கணும்னு என் தலைல எழுதியிருக்கு'' என்று வாய் ஓயாமல் புலம்பினது தாளமுடியாமல் போக கலர் டி.வி. வாங்கியாயிற்று.

இப்போது வி.ஸி.ஆர். கேபிள் டி.வி! இவற்றை உன்பாடு என்பாடு என்று சாதித்துக்கொண்ட பிறகு புதுசாய் இன்னொரு புலம்பல் கிளம்பும்.

புலம்பல், புகார் சொல்லுதல், அடுத்தவரைப் பழித்தல்—இவை தவிர கமலத்திற்கு வேறு என்ன உருப்படியாய் செய்யத் தெரியும்?

பேண்டை கழற்றி, வேட்டி உடுத்திக் கொண்டவன்



பின் கட்டுக்குச் சென்று குளியல் அறையில் குளிர்ந்த நீரை முகத்தில் வாரி அடித்துக் கொண்டான்.

வேட்டியை தூக்கி துடைத்துக் கொண்டே சமயல் அறைக்கு வந்து, மேடை மேல் தட்டுப் போட்டு மூடி வைத்திருந்த பாத்திரத்தை திறந்து பார்த்தான்.

காய்ந்து, தீய்ந்து, ஆறி வரட்டி போலிருந்த தோசைகளை பார்க்கவே பிடிக்காமல் போக, அடங்கி இருந்த எரிச்சல் மீண்டும் தலை தூக்கியது.

பசி அதிகமாய் இருந்ததில், பிளாஸ்கில் சூடு இல்லாமல் பூனை மூத்திரம் மாதிரி வெதவெதத்த காபியை மட்டும் டம்ளரில் ஊற்றி நாலு வாயாக குடித்தான்.

அலுப்புடன் முன் அறைக்கு வந்து கட்டிலில் காலை நீட்டி படுத்தான்.

கிழவி இருந்தால் இந்த திண்டாட்டம் இல்லை.

விளக்கை ஏற்றிவிட்டு, இவன் வருகைக்காக வாசப்படியிலேயே கதவை திறந்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். இவன் தலையை கண்டதும், 'கை கால கழுவிட்டு வா தம்பி, சூடா தோசை சுட்டுப் போடறேன்' என்றவாறு எழுந்து கூடவே வருவாள். 'இன்னும் ஒன்ணு சாப்பிடு தம்பி நாள் பூரா வேலை செஞ்சு களைச்சு வர்ற பிள்ளை வயித்துக்கு சரியா சாப்பிடாட்டி எப்படி?' என்று மன்றாடி சாப்பிட வைப்பாள்.

படுக்கையில் ஏதோ உறுத்தியது. எழுந்து உட்கார்ந்து என்னவென்று தடவி பார்த்தான். ஒன்றும் இல்லை. மறுபடி படுத்தான்.

கிழவி இருந்த வரையில் வீடு இப்படி கந்தர கோலமாய் ஒரு நாள் இருந்து இவன் பார்த்ததில்லை. முடிகிறதோ, இல்லையோ, இரண்டு வேளையும் பெருக்குவாள்; செவ்வாய், வெள்ளி மெழுகுவாள்; படுக்கை

விரிப்பை தட்டி போடுவாள்; சின்ன பையனின் விளையாட்டு சாமான்களை ஓரிடமாய் அடுக்கி வைப்பாள்; மாலை வேளைகளில் காமாட்சி விளக்கை ஏற்றி விட்டு, பேரனை அருகில் அமர்த்திக் கொண்டு ராமாயண, மகாபாரத கதைகளைச் சொல்லுவாள்

இவை மட்டுமல்லாது, காலையில் வெள்ளன எழுந்து பால் வாங்கி வருவது, சமயலுக்கு காய் அரிந்து, அரைத்து, கரைத்து கொடுப்பது எல்லாம் கூட கிழவியின் வேலைதான்.

இத்தனை செய்தும் கமலத்தின் வாயில் கிழவி விழுந்து புறப்படாத நாளே இல்லை.

''விடிஞ்சதும் விடியாததுமா பாலை வாங்க கிழம் ஏன் ஒடுது தெரியுமா? அதுக்கு கண்ணத் திறந்த உடனேயே காபி வேணும்! இருட்டுல தடுக்கி எங்காச்சும் விழுந்து கை, கால் ஒடஞ்சி படுத்துகிட்டா அதுக்கு பணிவிடை பண்ண என்னால முடியாது சாமி இப்பவே வேலை இடுப்பு விட்டுப் போவுது'' என்பாள்

''இந்த கிழத்தை கொஞ்சம் அதட்டி வையுங்க... வீட்டை கூட்டறேன். மெழுகிறேன்னு இதத் தூக்கி அங்க, அதை எடுத்து இங்க வச்சு பெரியய்ய ரோதனை பண்ணுது. நேத்து மூணாவது வீட்டு தர்மு அக்கா 'ராணி புஸ்தகம் கொடுத்தேனே,எங்கடீ'னு கேட்டாங்க.. தேடி எடுக்கறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடிச்சு.. ராமா, ராமானு சொல்லிகிட்டு மூலைல விழுந்து கிடைக்காம, சின்ன பொண்ணா நினைச்சுகிட்டு கிழவி அடிக்கற கூத்து சகிக்கலைங்க'' ,என்பாள் மறுநாள்.

சொல்கிறாளே என்று அதிசயமாய் கிழவி கோவில், குளத்துக்கு கிளம்பிவிட்டால் அதையும் பழிக்காமல் கமலம் விடமாட்டாள்.



''சாமி பாக்கவா இந்த கிழம் போகுது! எவ கிடைப்பா வம்பு பேசனு இல்ல. கோவிலை தேடி ஒடுது...'' என்பாள். இல்லாவிட்டால்...

''காலைலேந்து தலைவலினு அவஸ்தை பட்டுகிட்டு இருக்கேன்...ராத்திரி சமையல செய்ய ஒத்தாசை பண்ணாம, தன் பாட்டுக்கு கிழம் வெளியே போயிடுச்சு, பாருங்க'' என்று பல்லை கடிப்பாள்.

அத்தனைக்கும் வாயைத் திறந்து இவன் ஒருவார்த்தை பதில் சொன்னவனில்லை. திருமணமான இந்த ஐந்து வருஷங்களில் கமலத்தின் குணம் நன்றாகவே புரிந்து, இவன் ஒன்று சொன்னால் அவளிடமிருந்து நாலாக பதில் வரும் என்பதால் வாயை இறுக்க மூடிக்கொண்டு யாரோ யாரையோ சொல்கிறார்கள் என்கிற மாதிரி மௌனம் சாதிப்பான்.

ஆனால், அடிக்கிற அடியில் அம்மிக் கல்லே நகரும் என்கிறபோது இவன் எம்மட்டு?

கமலத்தின் போதனை, காதில் விழுந்து மனசில் பதிந்து, கடைசியில் அவனும் கிழவியிடம் சொல்லத் தகாத வார்த்தைகளை வீசி விட்டதுதானே நடந்தது?

நடுமுதுகில் ஏதோ 'சுரீர்' என்று குதத, அவசரமாய் எழுந்து உட்கார்ந்தான்.

பகல் வேளையில் தூங்கி எழுந்தபிறகு நொறுக்கு தீனியை தட்டு நிறைய நிரப்பிக் கொண்டு. அசை போட்டவாறு ஸினிமா சம்பந்தப்பட்ட பத்திரிகைகளை ஒரு வரி விடாமல் படிப்பது கமலத்தின் மாமூல் வழக்கம். அப்படி தின்று சிதறிய பலகார துகள்களுக்காக படுக்கையை மொய்க்கும் சிற்றெறும்புகள் கடிப்பதால்—தான் இந்த வேதனையா?

கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்த வரையில் எதுவும் புலப்படவில்லை.

அரை நிமிஷம் அப்படியே குந்தி, படுக்கலாமா வேண்டாமா என்று யோசித்தவன். விளக்கத் தெரியாத அயர்ச்சி ஆளை அழுத்த மெதுவாக படுத்தான்.

சில மாசங்களாகவே கமலம் கிடைக்கும்போதெல்லாம் இவனிடம் ஓதும் விஷயம்தான் அன்று கணப்பொழுதில் விஸ்வரூபம் எடுத்து இவனையும் விவகாரத்தில் மூக்கை விடச் செய்துவிட்டது,

''கிழத்தை வச்சுக்க நமக்கு மட்டும்தானா தலை எழுத்து? கஸ்தூரிக்கு அந்த பொறுப்பு கிடையாதா? 'போய் மூணு மாசம் இருந்திட்டு வா'னு ரெயில் ஏத்தி அனுப்ப உங்களுக்கு தைரியம் இல்ல...கிழம் வீட்டுல இருக்கறதால ரெண்டுநாள் கூட வீட்டை பூட்டிகிட்டு இங்க, அங்க போக முடியறதில்லை. நா சொன்னா கிழம் காதுல வாங்க மாட்டேங்குது. நீங்க எதனாச்சும் சொல்லப்போறீங்களா, இல்லையா?'' என்று எப்போதும் அவள் கூறி, இவன் இந்தக்காதில் கேட்டு அந்தக் காதால் விடும் தினுசில் அல்லாது அன்று மட்டும் சோதனையாய் உள்ளுக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் பிசாசு, விழித்துக் கொண்டு. கோரப்பற்களும், புலி நகங்களுமாய் வெளிப் பட்டுவிட்டது.

கிழவிக்கு ரத்த அழுத்தக் கோளாறு உண்டு. தினமும் மாத்திரை சாப்பிடும்போதே சில சந்தர்ப்பங்களில் தலை சுற்றி உட்கார்ந்துவிடுவாள்.

பத்து நாட்களுக்குமுன் ஆபிஸுக்கு புறப்பட்ட வனிடம் ''மாத்திரை தீர்ந்து போச்சு தம்பீ, வாங்கிட்டு வர்றியா?'' என்று கிழவி கேட்டிருந்தாள்தான், வேலை மும்முரத்தில் மறந்துவிட்டது. அன்றிரவு சாப்பாடாகி கமலத்தோடு டி.வி. இரண்டாவது சானலில் 'படமும் பாடலும்' பார்த்துக் கொண்டிருக்கையில், உள் கட்டு வேலை முடிந்து, ஈரக்கையை தலைப்பில் துடைத்தவாறு வந்து நின்ற கிழவி 'மாத்திரை வாங்கிட்டியா தம்பீ?' என்றபோது உள்ளங்கையால் நெற்றியில் அடித்துக் கொள்வதைத் தவிர அவனால் வேறு எதுவும் செய்ய இயலவில்லை.



படுத்த பிறகு கமலம் ''உப்பு இல்லாம கிழவிய இருக்கச் சொல்லுங்க, நாக்க கட்டினா தன்னால ரத்த அழுத்தம் சரியாயிடும்'' என்று தெரிந்த மாதிரி பேசிய தற்கு ''அப்படி ஒண்ணும் கண்டத நிங்கறவங்க இல்லையே?'' என்று சாதாரணமாய் இவன் பதில் கூறியது தப்பாகிவிட்டது.

''என்ன...என்ன?'' என்று கேட்டவாறு எழுந்து உட்கார்ந்தாள். ''அப்ப, நா இல்லாததையும், பொல்லா ததையும் பேசறேன்னு சொல்றீங்களா?'' என்று ஆரம் பித்து மாபாரமாய் சண்டைக்கு வந்தவளை சமாதானப் படுத்துவதற்குள் அவன் திண்டாடிப் போனான்.

இறுதியில் கிட்டத்தில் படுக்காமல் தரையில் பாய் விரித்து கமலம் படுக்க, இரவு முழுவதும் இவனுக்கு சரியான உறக்கம் இல்லை.

காலையில் எழுந்திருக்கும்போது தலை வலியில் நமநமவென்றது. கமலத்தின் தூக்கிய முகம், குழாயில் தண்ணீர் வராத பிரச்னையோடு, ''எழுந்திருக்க முடியாம கண்ண இருட்டிகிட்டு வருது தம்பி'' என்று கிழவி கைகளில் தலையை தாங்கி பரிதாபமாக கூறியதும் சேர்ந்து கொள்ள, ஊசி முனை பட்ட பலூன் மாதிரி சட்டென்று வெடித்தான்.

''வர வர ரொம்பத்தான் மாமாலம் செய்யறே! ஒரு நாள் மாத்திரை சாப்பிடாட்டி உசிரா போயிடும்?

என்னமோ மறந்திட்டது—வேணும்னே வாங்கி வராம இருந்த மாதிரி நாலு தரம் சொல்லி காட்டறியே! சரி, சரி—நா செய்யறது பத்தலைனா இங்க ஏன் இருக்கே? முப்பது பவுன் நகை, கையில ரொக்கம் இருபதாயிரம்னு இருந்ததெல்லாம் கஸ்தூரிக்கு வாரிவிட்டியே. அங்க போய் சொகுசா இருக்கறதுதானே? என் காலை சுத்தின பாம்பா என் கழுத்தயே அறுக்கறே?''

தணல் துண்டங்களாய் வார்த்தைகள் வெளியே வந்து விழுந்தபோது அதன் காட்டத்தை உணர முடிய வில்லை. ஆனால் கொஞ்ச நேரம் செல்வதற்குள் அசிங்கமாய் பேசிட்டோமே?' என்கிற தவிப்பு உண்டாகவே செய்தது. வாயை மூடிக் கொண்டு குனிந்த தலையுடன் அறைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டான்.

ஆபீஸுக்கு புறப்படும் போது கிழவி எதிரில் வந்து நின்றாள். சின்ன குரலில் பேசினாள்.

''நீ சொல்றது நியாயம்தான், தம்பீ. இங்கயும், அங்கயுமா இருக்கறதுதான் சரி, சாயங்கால வண்டிக்கு டிக்கெட் எடுத்திட்டு கஸ்தூரிக்கும் தந்தி அடிச்சிடறியா?'

அவசரமாய் மறுக்க நிமிர்ந்தவனால் கிழவிக்கு பின்னால் நின்று கொண்டு கமலம் விழிகளை உருட்டி! சரி என்று சொலுங்கள்! என்று சமிக்ஞை செய்வதை புரிந்து கொள்ள முடிய, சும்மா தலை அசைத்துவிட்டு படிகளில் இறங்கினான்.

பின் இடுப்பில் சுருக்கென்று ஏதோ குத்துவதை துல்லியமாய் உணர முடிந்தது புரண்டு படுத்தான். மறுபடியும் சுருக். மறுபடியும் சுருக். இங்கே அங்கே...

என்ன வேதனை இது! துவைத்து வைத்த வேட்டியில் சிராம்பு ஏதாவது ஏறி இருக்குமோ? அதான் உறுத்துகிறதோ?



எழுந்து கட்டியிருந்த வேட்டியை அவிழ்த்து உதறி உடுத்திக் கொண்டான்.

மீண்டும் படுக்க தயக்கமாக இருந்தது.

கூடத்தில் இருந்த பிரம்பு நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

கஸ்தூரி இருப்பது ஹைதிராபாத்தில். கிழவிக்கு தெலுங்கு ஒரு வார்த்தை தெரியாது. கஸ்தூரி வேலைக்குப் போய் விட்டால் கொட்டு கொட்டென்று தனியாய் வீட்டில் இருக்க வேண்டும். பொழுது போவது கஷ்டம, கஸ்தூரி வீட்டில் வடக்கத்திய பாணியில் இரண்டு வேளையும் சப்பாத்திதான். கிழவிக்கு கோதுமை ஒத்துக் கொள்ளாது.

இருப்புக் கொள்ளாமல் இவன் எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

'பத்து நாட்கள் அங்கு இருந்தது போதும், வந்து விடு' என்று கடிதம் போடலாமா?

''நகத்தை கடித்தவாறு யோசித்த போது கிழவியை திரும்ப கூட்டி வந்து விட்டால் தேவலை போல தோன்றியது, 'அன்னிக்கு என்னமோ புத்தி கெட்டு போய் பேசிட்டேன், மனசுல வச்சுக்காதே! என்று சொல்லி விட்டால் தேவலை போல தோன்றியது.

நாளைக்கே கடிதம் எழுதிவிட வேண்டும். கமலத்தை சமாளிக்க ஆபீஸில் கடனை வாங்கியாவது வி.ஸி.ஆர் வாங்கித் தந்து விடலாம்.

தீர்மானம் எடுத்த பிறகு உட்கார்ந்தான். பத்து நாட்களாய் அலைக்கழிக்கும் உறுத்தல் சட்டென்று குறைந்து விட்டதை உணர முடிய, சின்னதாய் தனக்குத் தானே புன்னகைத்துக் கொண்டான்.

இப்போது நிம்மதியாய் படுக்க முடியும் என்கிற நம்பிக்கையுடன் எழுந்து இரண்டடி வைத்த நொடியில் வாசல் மணி அடித்தது.

படம் முடிந்து விட்டதா? அதற்குள்ளாகவா? மணி எட்டரைதானே ஆகிறது?

புருவங்கள் கேள்வியில் உயர, கதவைத் திறந்தான்.

தந்தி சேவகர்,

கையெழுத்து போட்டு வாங்குவதற்குள் உள்ளங்கையில் வியர்த்தது.

பிரித்தான்.

'அம்மா மாரடைப்பால் இன்று பகல் காலமானார். உடனே வரவும்— கஸ்தூரி!'

டைப் செய்யப்பட்டிருக்கிற வாசகங்களின் அர்த்தம் புரியாத மாதிரி பத்து தரம் திரும்பத் திரும்ப படித்தான்.

கிழவி செத்து விட்டாளா?

ஐயோ... கிழ...வார்த்தை பாதியிலேயே நின்றது. கமலத்தைப் போலவே தானும் கிழவி என்றே குறிப்பிடுவதை முதல் முறையாக உணர முடிய, ஹிருதயம் அதிர்ந்தது. கூசியது. கால்கள் துவண்ட மாதிரி வெலவெலத்தது.

மெதுவாக நகர்ந்து நாற்காலியில் வந்து உட்கார்ந்தவன், முகம் கோணிப் போக, வாய் விட்டு 'அம்மா... ஆ...' என்று கத்தலாக அழ ஆரம்பித்தான்.

———

# 4. பயணம்

அம்மா இன்னும் பதில் சொல்லவில்லை.

''கிளம்பட்டுமாம்மா?'' என்று நாலு தரம் கேட்டும் அனுமதி கிடைத்தபாடில்லை.

கட்டி வைத்திருந்த சாமான்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து, ''எல்லாம் எடுத்து வெச்சாச்சா?'' என்று கேட்டுக் கொண்டேயிருந்தாள். டூத் பிரஷ் முதல் துண்டு வரை லிஸ்ட் போட்டு எடுத்து வைத்ததை கிட்டத்தில் இருந்து பார்த்த பிறகும் ''இது இருக்கா? அத எடுத்து வைச்சுண்டியோ?'' என்று கேள்விகளாகவே வெளியிட்டுக் கொண்டிருந்தாளே தவிர, 'சரி—போய்விட்டு வா' என்று வழி அனுப்ப இன்னும் அம்மா தயாராகவில்லை.

நான் என்ன சின்னப்பெண்ணா? இல்லை, இன்றுதான் முதல்முறையாக வெளியூர் போகிறேனா? அல்லது, அம்மாதான் இப்படி இருப்புக் கொள்ளாமல் தவிக்கிற ரகமா?

எதுவுமில்லை!

பெரிய என்ஜினியிரிங் கம்பெனியின் விற்பனைப் பிரிவில் அதிகாரியாக இருப்பவளுக்கு பிரயாணமும். மூட்டை முடிச்சு கட்டுவதும் அன்றாட நியதியாகவே ஆகிவிட்ட விஷயம்.

அம்மாவுக்கு மட்டும் இது தெரியாதா என்ன? நன்றாகத் தெரியும்.

மெட்ராஸுக்கு ட்ரான்ஸ்ஃபர் ஆகி வந்துவிட்ட இரண்டு மாசத்தில் ஒரே ஒரு முறை பெங்களூர் சென்று வந்ததைத் தவிர வேறு எங்கும் பயணிக்கா விட்டாலும் ஹைதிராபாத்தில் இருந்த வருஷங்களில் பழகி, படிந்தே போய்விட்ட இந்த வாழ்க்கையை வெகுசுலபமாக, சிரமமின்றி ஏற்றுக்கொண்டு விட்டவள்தானே அம்மாவும்!

''என்னம்மா, நா வரட்டுமா?''

இந்த முறையும் கேள்வியே காதில் விழாதவள் போல அம்மா சமையலறையைப் பார்க்க நடக்கத் துவங்கி, பின், சட்டென்று திரும்பினாள்—''நீ வேணா போய் ஆட்டோ பிடிச்சுண்டு வந்துடறியா? தயிர் சாதத்த அப்பவே பிசைஞ்சு வச்சதுல புளிக்குமோனு தோண்றது—கொஞ்சம் பாலை விட்டு...''

நான் சிரித்தேன்.

''வேண்டாம்மா, நாழியாச்சு—தெரு முக்குக்குப் போயிட்டா ஆட்டோ கிடைக்கும். கிளம்பட்டுமா?''

''வந்து...சித்த இரேன்...எதயோ மறந்துட்ட மாதிரி தவிப்பா இருக்கு...''

எத்தனை யோசித்தாலும் நினைவுக்கு வரப் போவதில்லை அம்மா, வந்தாலும் நீ சொல்லப்போவதில்லை. ஏன் தெரியுமா? நீ ஒன்றையுமே மறக்கவில்லை. இதோ, உன் நாக்கு நுனியில் இருக்கிறது அந்த விஷயம், எனக்கா தெரியாது.

சொல்ல விரும்புவதை அம்மா சொல்லாமலே விட்டால்கூட தேவலை போல தோன்றியது. சொல்லிவிடப் போகிறாளே என்று பயமாகக்கூட இருந்தது.

குனிந்து, பெட்டியைத் தூக்கிக் கொண்டேன்.



வார்த்தைகளை வெளியில் விட்டு, காற்றில் கலக்க வைத்து, காது வழியாக என் மனசுக்குள் நுழைந்துதான் உன் உணர்வை எனக்குப் புரிய வைக்க வேண்டுமா அம்மா?

எனக்கு அந்த நினைப்பு இல்லை, அந்த ஆர்வம் கிடையாது என்பதா உன் எண்ணம்?

உன் முகபாவத்தில், உன் ஒரு பார்வையில் மனசைப் பார்த்துவிட முடிகிற எனக்குமா இப்படி நினைவூட்டுதல் தேவை என்று தவித்துத் தயங்குகிறாய்?

கண்ணை மறைத்த நீர்த்திரையை அம்மா பார்த்துவிடப் போகிறாளே என்று உடனே தலையைத் தாழ்ந்து கைக்கடிகாரத்தில் மணி பார்த்தேன்.

''மணி ஆயிடுத்தும்மா. நா வரேன் நீ ஜாக்கிரதையா இரு. இருட்டினப்புறம் வெளியில போறதானா ஆயாவ அழைச்சுண்டு போ, தனியா போ வேண்டாம்மா...''

சாமான்களுடன் தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தபோது, கதவருகில் அம்மா நின்று பார்ப்பதை உணர முடிந்தது.

நேரமாகிவிட்ட தினுசில் ஓட்டமும் நடையுமாக தெருமுனையில் நின்றிருந்த ஆட்டோவில் உட்கார்ந்து, பஸ் ஸ்டாண்டுக்கு வண்டியை விடச் சொன்னபோது படபடப்பாய் இருப்பது புரிந்தது.

திருச்சி செல்லும் தனியார் பஸ்ஸில் ஏறி ஜன்னல் பக்கமிருந்த சீட்டில் சாய்கையில் கூட அந்த படபடப்பு குறையவேயில்லை.

அம்மாவைப் பேச விட்டிருக்கலாமோ? 'போற வழில தானே நம்ம வீடு இருக்கு? அந்த வழியாத்தானே பஸ்

போகும்?'—என்று தானே கேட்க நினைக்கிறாய்? என்று பளிச்சென்று கேட்டிருக்கலாமோ?

கேட்டிருந்தால், அம்மாவை நேருக்கு நேராய் பார்த்து, இந்த வார்த்தைகளைப் பேசும் போது அவள் கண்ணில் பீறிட்டு வரும் நீரைக் காண வேண்டியிருந்திருக்கும். தவிர, 'ஆமாம்' என்று சந்தோஷமாய் தலையாட்டுவதோ, திரும்பி வந்த பிறகு தொலைவிலிருந்தாவது வீட்டைப் பார்த்த விபரத்தைத் தெரிவித்து பேசி மகிழ்வதோ சாத்தியமா என்ன?

ம்ஹூம்—நிச்சயமாய் இல்லை—

அந்த வீடும் அதில் கிடைத்த அற்புத வாழ்க்கையும் அலாதியானவை. நினைவுகள் மகிழ்ச்சியானவை.

ஆனாலும்—

அத்தனை சந்தோஷமும், பரவசமும், நிம்மதியும் அப்பாவோடு மறைந்து போனதுதானே நிஜம்? இப்போது நினைத்துப் பார்க்கையில், இந்த உணர்வுகளைத் தாண்டி முட்டிக் கொண்டு முன்னால் வருவது ஏதோ ஒரு ஏமாற்றமும், இருப்பதைத் தொலைத்த ஒரு தவிப்பும் தான்.

இத்தனைக்கும் அது சொந்த வீடு கூட இல்லை. அப்பாவுக்கு மெட்றாஸிலிருந்து மாற்றலானபோதுதான் அங்கு போகவேண்டியிருந்தது. நான் ராஜஸ்தான் பிலானி காலேஜில் மூன்றாவது வருடம் என்ஜினியரிங் படித்துக் கொண்டிருந்த போது அம்மா லெட்டரில் இந்த மாற்றல் விவரத்தை எழுதியிருந்தாள்.

கிராமமுமில்லாத நகரமுமில்லாத அந்த ஊரின் பாங்க் கிளையில் அப்பா காஷியராகப் பொறுப்பேற்றிருந்தார். ஊருக்குள் இல்லாமல், தாண்டிக் கொண்டு



சென்ற தேசிய நெடுஞ்சாலையில் இருந்தது சின்னஞ்சிறிய அந்த வீடு.

அம்மாவும் அப்பாவும் மட்டுமான சிறு உலகத்தில் அங்குதான் எத்தனையெத்தனை சந்தோஷச் சிலிர்ப்புகள்!

குடித்தனத்தை மாற்றி அங்கு குடிபோன பிறகு ஆறு மாசம் கழித்துத்தான் என்னால் லீவில் ஊருக்குப் வர முடிந்திருந்தது.

கதவில் சாய்ந்து நின்று ''வா...'' என்று கையை நீட்டி என்னை அணைத்துக் கொண்டு முத்தமிட்டு. ''இங்க வாங்களேன், அருணா வந்துட்டா...'' என்று அப்பாவை அழைத்த அம்மா இன்னும்கூட என் கண்ணுக்குள்.

கரும்பச்சை புடவையும் ரவிக்கையும், நடு வகிடெடுத்த சுருட்டைத் தலைமுடியில் பந்தாய் பூ, குவிந்த மோவாய், மொட்டு மாதிரி வாய் அதில் நிறைந்த மனசைக் காட்டும் பூரண சிரிப்பு, லேசாய்த் தூக்கின அழகான மூக்கு, அப்புறம் அந்த கண்கள்...

அதில் சந்தோஷத்தையும் சிரிப்பையும் கனிவையும் தவிர வேறு எதையாவது நான் பார்த்தது உண்டா? வேறு ஏதாவது தோன்றும் விதத்தில் அப்பாதான் நடந்து கொண்டிருக்கிறாரா?

உணர்வுகளை அதிகம் வெளிக்காட்டாதவர் என்றாலும்கூட, ஒரு சின்ன சிரிப்பில், கண் சிமிட்டலில் அவர் உணர்த்திய அன்புதான் அம்மாவை அப்படி உசத்தியாய் ஆளாக்கியிருந்தது. தீர்க்கமான கண், மூக்கு, மெல்லிய உதடுகள், நாற்பதுக்கு மேலாகியும்கூட அடர்த்தியும் கருமையும் குறையாத கிராப்புடன் அம்மா பக்கத்தில் அவர் நின்றால் 'பார்த்தீங்களா எங்களை'—என்று போவோர், வருவோர் கண்களை அந்த காட்சி கட்டி இழுக்கும்.

அதிலும் வெளியூரில் படிக்கச் சென்று, லீவு நாட்களில் மட்டும்தான் சேர்ந்து இருக்க முடிந்த நிலை வந்ததாலோ என்னவோ வருஷத்துக்கு ஒருமுறையோ இருமுறையோ வீட்டுக்கு வரும்போதெல்லாம் அப்பாவை, அம்மாவை, அந்த அன்பை அணு அணுவாய் ரசித்து அனுபவித்திருக்கிறேன்.

எப்போதுமே நறுவிசாய் இயங்குகிற அம்மா, எனக்காக கூடுதல் கவனத்தோடு செய்யும் சமையலை...ஊரின் ஒரே பொழுது போக்கான சினிமாக் கொட்டகைகளை மூவருமாய் படையெடுத்ததை...நெடுஞ்சாலையில் வாக் போவதால் சொல்லிக் கொண்டு சர் சர்ரென்று பறக்கும் வாகனங்களை விமர்சித்தபடி நின்றதை...என்னை தேய்க்கிறேன் பேர்வழி என்று அம்மா என் தலையை உருட்டி, தட்டும் ஒரு மணி நேரமும் அம்மாவின் இடுப்பை அணைத்தபடியே சுகமாய் அமர்ந்திருந்ததை... தலைப்பை மடிமேல் பரத்தி, வெற்றிலையை ஈரம்போக துடைத்துத் துடைத்து அம்மா மடித்துக் கொடுக்க அப்பா 'ரொமாண்டிக்கா இருக்கு இல்லே?' என்று கண் சிமிட்டி சிரித்தபடியே வாங்கி வாயில் போட்டதை... அவர்களின் இரட்டைக் கட்டிலிலேயே மூவருமாய் படுத்து விடிய விடியப் பேசினதை...

இன்னும்...இன்னும்...அந்த வீடு தந்த உன்னத அனுபவங்கள்தான் எத்தனை?

அத்தனையும் வீடு தந்ததா? என் அம்மா, அப்பா என்ற மனிதர்கள் தந்தது இல்லையா?

சட்டென்று உதட்டில் புன்னகை ஒன்று ஓடியது...

எனக்கென்னவோ அந்த வீட்டின் ராசியால்தான், சூழ்நிலையால்தான் அத்தனை சிறப்புகளையும் முழுமையாக உணர்ந்தேன் என்று தோன்றுகிறது. நகரங்களின்



பரபரப்பும், ஓய்வில்லாத வாழ்க்கையும் சராசரி அனுபவங்களைத்தானே எவரையுமே ருசிபார்க்க வைக்கின்றன?

அந்த வீட்டில் செலவழித்த வருஷங்கள் வாழ்க்கையின் அன்பின், வேறு ஒரு பரிமாணத்தை எனக்கு உணர்த்தியது உண்மைதான்.

அது அப்படியே நீடித்து நிலைத்திருக்கக் கூடாதா? படிப்பு முடித்து வேலை கிடைத்த சந்தோஷத்தை முழுமையாகக் கொண்டாடக்கூட விடாமல் எது அப்பாவின் இருதயத்தைத் தாக்கி அவரை பலி வாங்கியது? ஒரு குடும்பத்தின் நிம்மதியை அழிக்க, அம்மாவின் பிரசன்ன முகத்தை இருட்டாக்க கடவுளுக்கு எப்படி மனம் வந்தது?

பதில்கள் இல்லாத கேள்விகள்.

அப்பாவோடு வந்து நுழைந்த வீட்டிலிருந்து அவரை தன்னந்தனியாய் வெளியே அனுப்பிவிட்டு புதுவேலையை ஒப்புக் கொள்கிற சாக்கில் அம்மாவும் நானும் வெறும் நினைவுகளின் துணையோடு ஹைதிராபாத் போனோம். அங்கிருந்து ட்ரான்ஸ்பரில் இப்போது மெட்றாஸ் வருவதற்குள் பல வீடுகள் மாறியாகிவிட்டது. எந்த மாற்றத்திலும் பழகின வீட்டை விட்டு போகிறோமே என்று தற்காலிகமாக ஒரு வேதனை ஏற்பட்டு, ஓரிரு நாட்களில் மறைந்தும் போகும். ஆனால், இந்த வீட்டின் நினைவு மட்டும் ஏன் மறையவில்லை? குறையவில்லை?

நினைத்தாலே மனசுக்குள் நிதானமாய் வண்ண வண்ண பட்டாம்பூச்சிகள் பறக்கும்; வானவில் தோன்றும்; நீரூற்றுக்கள் உயரே உயரே எழுந்து பன்னீர் தெளித்த மாதிரி சிலிர்க்க வைக்கும்.

அவ்வப்போது மனசுக்குள் தோன்றும் ஏக்கத்தில் உடனே சென்று அந்த வீட்டை பார்த்து விட்டு வர துடிக்கும். ஆனால், யதார்த்த வாழ்க்கைக்குக் கஷ்டப் பட்டுத் திரும்பிக் கொண்டிருக்கும் அம்மாவிடம் இந்த

ஏக்கத்தை வெளிப்படுத்தி அவளிடமும் சலனத்தை உண்டாக்க ஏனோ மனசில் தெம்பில்லை.

ஆனால்

'சரிதான் போ? நீ அந்த பேச்சை எடுக்காவிட்டால் எனக்குத் தோன்றாதா என்ன!' என்று உன் முகம் உணர்த்தியதை இரண்டு நாட்களுக்கு முன்பு புரிந்து கொள்ள முடிந்தபோது, ஒரு பக்கம் வேதனையாகவும், மறுபக்கம் சந்தோஷமாகவும் இருந்தது அம்மா—

உனக்கும் அதே ஆதங்கம், ஏக்கம் இருக்கிறதா அம்மா? அந்த வீட்டையும் அதில் அனுபவித்த சொர்க்கத்தையும் நீ இன்னமும் மனசுக்குள் பூட்டி வைத்திருக்கிறாயா அம்மா? ஏன் என்னிடம் ஒரு தரம் கூட அதைக் காட்டவில்லை? நான் அதிகமாய் துக்கிப்பேன் என்று நினைத்தாயா? அலலது, நினைப்புகளின் பளுவில் மூழ்கிப் போய் விடுவோம் என்று நீயே பயந்தாயா?

'திருச்சிக்குப் போக வேண்டும் ஆபீஸ் வேலையாக ரயிலில் டிக்கெட் கிடைக்கவில்லை பஸ்ஸில்தான் பயணம்' என்ற போது — எப்படி திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாய்! அவ்வப்போது மேகம் மறைத்து மறைத்து செல்லும் சூரிய ஒளி மாதிரி உன் முகத்தில் சந்தோஷமும் வேதனையுமாய் மாறி மாறி பிரதிபலித்ததை நான் பார்க்கவில்லை என்று நினைத்தாயா அம்மா!

ரயிலில் டிக்கெட் கிடைக்காமல் இல்லை, நான் வேண்டுமென்றேதான் பஸ்ஸில் போகப் போகிறேன். நெடுஞ்சாலையில் அன்பு நெஞ்சங்களின் சங்கமத்திற்கு ஒரு நினைவுச்சின்னமாக நிற்கும் அந்த வீட்டைப் பார்க்க விரும்புகிறேன் என்பதை உன்னிடம் சொல்ல எனக்கு வாயே வரவில்லை அம்மா. நீயும்தான் ஆகட்டும், 'நம்ம வீடு எப்படியிருக்குனு பார்த்துட்டு வா' என்று நேரடியாய் சொன்னாயா? உன் முகமும், வழக்கத்துக்குமாறான,



பரபரப்பும் அந்த ஆசையை வெளிச்சம் போட்டுக் காட்டினவே தவிர' நீயாகச் சொன்னாயா?

நான் வேதனைப்படுவேன் என்று நினைத்தாயா? இல்லை. அப்படிப்பட்ட உணர்வெல்லாம் ஏழாமல் நான் இறுகி விட்டேன் என்று முடிவு செய்து விட்டாயா? அல்லது — காய்ந்து பொருக்கு தட்டிப் போன ரணத்தை கிளறி மறுபடி புண்ணாக்க வேண்டாம் என்பதால் அப்படித் தயங்கினாயா?

எதுவானால் என்ன! இதோ, இன்னும் கொஞ்ச நேரம்தான், நான் நம் வீட்டைப் பார்க்கப் போகிறேன்· பார்த்ததை அப்படியே கண்ணில் தேக்கி, நாலு நாளில் சென்னை திரும்பியதும் உன்னிடம் கொட்டப்போகிறேன் அம்மா.

ஜன்னல் கம்பிகளில் முகத்தை சாய்த்து பார்வையை கூர்மையாக்கினேன். வெளியே இன்னும் சாம்பலாய் வெளிச்சம் மிச்சம் இருந்தது.

ஊர் நெருங்குவதற்கு அடையாளமாக டீக்கடைகளும், பரோட்டா ஸ்டால்களும் பிரகாசமான விளக்குகளுடன் கண்ணில் படத் துவங்கின.

வீட்டைத் தாண்டி கொஞ்சம் சென்றதும் ஒரு உணவு விடுதிமுன் கால் மணி போல வண்டி நின்று கிளம்புவதற்குள் பொடி நடையாய் சென்று வீட்டை கிட்டத்தில் பார்க்கும் அவகாசம் கிட்டுமோ?

கேட்டை ஒட்டி ஒரு பவளமல்லி செடி இருக்கும். சிகப்பு தண்டும், வெள்ளை நட்சத்திர இதழ்களுமாய் இருப்பதை மென்மையாய் பொறுக்கி, மாலையாய் கோர்த்து சாமி படங்களுக்குப் போடுவது வழக்கம். அதை ஒட்டி சிகப்பு பந்துகளாய் பூக்கும் விருட்சி. வீட்டுக்குப் பின்னால் கொல்லென்று பூத்து மணம்பரப்பும் மருதாணி.

பக்கத்தில் வாழை. கொல்லை படிக்கட்டுக்கு எதிரில் துளசி மாடம்.

ஊருக்குள் நுழைந்து வெளிப்பட்ட பஸ் வேகம் எடுத்தபோது எனக்குள் படபடப்பு அதிகரித்தது. உள்ளங்கையில் வியர்த்தது.

இதோ, இடது பக்கம் திரும்பி நெடுஞ்சாலையில் கலந்துவிட்டால்—இரண்டே நிமிஷம்...

அதே செங்கல் தெரிய உடைந்திருந்த கடைகளின் சுவர்கள். அதே குட்டைத் தென்னை மரம்... பாதி புதைந்திருந்த அதே மைல்கல்...அதே மின்வாரிய ஆபீஸ்... அதன் வெளிச்சத்தில் தெரிந்த அதே வரிசை வீடுகள்... கடைசியாய், கொஞ்சம் தள்ளி அதே...

இல்லையே! அந்த வீட்டை மட்டும் காணுமே!

கவனக்குறைவாய் சரியாகப் பார்க்கவில்லையோ என்ற தவிப்புடன் எழுந்து ஜன்னல் வழியே வெளியே தலைநீட்டிப் பார்த்தேன். வேகமாக ஓடிய பஸ்ஸின் பின்னோக்கிச் சென்ற எந்த இடத்திலும் அந்த வீடு இல்லை. அந்த வீடு மட்டும் இல்லை,

எங்கே? எங்கே போயிற்று?

சிரமப்பட்டு கூர்ந்து கவனித்தபோது, வீட்டை இடித்து குவித்து வைத்திருந்த கற்கள் குன்று கண்ணில் பட்டது.

இடித்து விட்டார்களா? ஏன்? ஐயோ —ஏன்?

அப்பா இறந்து போய்விட்டதாக போன் வந்த அந்த இரவு இரண்டு மணியின் அதிர்ச்சியும், அழுகையும் இப்போதும் முட்டிக் கொண்டு கிளம்ப, என்னையும் மீறி கேவினேன்.



சாப்பாட்டு விடுதி முன் பஸ் நின்று அத்தனை பயணிகளும் இறங்கி, 'நீங்க சாப்பிட வரலியாம்மா?' என்று கண்டக்டர் கேட்டது காதில் விழாதவளாய் கன்னங்களில் கண்ணீர் கோடு போட அமர்ந்திருந்தேன்.

வராமலே இருந்திருக்கலாம், பார்க்காமலே போயிருக்கலாம், வீ' டை இடித்தது தெரியாமலே வாழ்ந்திருக்கலாம்...

கடவுளே! எனக்கு ஏன் தெரிய வைத்தாய்?

நினைக்க நினைக்கத் தாங்காமல் மருகின மறுகல் அடுத்து வந்த நாலு நாளிலும் குறையவில்லை. ஏனோ தானோ என்று வேலைகளைச் செய்து ஐந்தாம் நாள் காலை ஊருக்குத் திரும்பியதும், ஆட்டோ சத்தம் கேட்டு அம்மா வந்து கதவைத் திறந்தாள்.

திறந்த கதவில் சாய்ந்து நின்று, ''வா...'' என்று கையை நீட்டி அணைத்துக் கொண்டாள்.

நடு வகிடெடுத்த சுருட்டைத் தலைமுடி, குவிந்த மோவாய், மொட்டு மாதிரி வாய், லேசாய்த் தூக்கின அழகான மூக்கு...

ஆனால், அந்த வாயில் சிரிப்பும், கண்ணில் சந்தோஷமும், தலையில் பூவும் எங்கே?

''போன வேலையெல்லாம் முடிஞ்சுதா அருணா? ரயில்ல வந்தியா, இல்லே இப்பவும் பஸ்ஸுதானா''

அம்மாவைப் பார்த்ததும் வெடித்துக் கொண்டு கிளம்பிய ஏமாற்றத்தை பிரயாசையுடன் அடக்க வேண்டியிருந்தது. தலையாட்டலை மட்டும் பதிவாக்கி விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்ததும் அம்மா கூடவே வந்தாள்.

நாலு நானாக உறுப்போட்டு வைத்திருந்த மாதிரி திடுமென "போகும்போது ஞாபகப்படுத்தணும்னு நினைச்சேன் நம்ம வீட்டைப் பார்த்தியோ" என்றாள் தடக்கென்று.

எதிர்பாராமல் தாக்குப்பட்ட தினுசில் உடம்பு ஒருதரம் உதறிப் போட்டது. சமாளித்துக் கொண்டேன். நிமிர்ந்தேன்.

"ப்ச்...இல்லம்மா— செங்கல்பட்டு வரை படிச்சிண்டு இருந்ததால, மதுராந்தகம் வர்றப்போ தூங்கிட்டேன். மறுபடி கண் விழிச்சு பார்த்தப்போ உளுந்தூர் பேட்டை தாண்டிடுத்து..."

வலிய வரவழைத்துக் கொண்ட அலட்சியத்துடன் பதில் சொல்லிவிட்டு, மறுபடி அம்மா எதையும் கேட்டு விடாமல் இருக்க, 'இன்னிக்கு சீக்கிரமா ஆபீஸ் போகணும்மா... குளிச்சிட்டு வந்துடறேன்" என்று பேச்சை முடித்துக் கொண்டு அறைக்குள் போனேன்.

திரும்பி பார்க்காமலேயே அம்மாவின் முகத்தில் படர்ந்திருக்கும் ஏமாற்றத்தை உணர முடிந்தது. ஏமாற்றம்தான்.

உன் சொர்க்கத்தை இடித்து தரைமட்டமாக்கி விட்டார்கள் என்கிற சேதி உண்டாக்கும் வலியை விட பெண்ணுக்கு தகப்பன் வாழ்ந்த வீட்டை பார்க்க கூட அக்கறை இல்லை என்கிற ஏமாற்றம் பரவாயில்லை அம்மா...

———

20220
3737262

## 5: கழுதை தேய்ந்து...

செய்தித்தாளின் மூலையில். எளிதில் கண்ணில் பட்டு விடாத ஓர் ஓரத்தில் அந்த விளம்பரத்தை அச்சிட்டிருந்தார்கள்.

அவலமான தன் நிலையை எடுத்துச் சொல்லிக் கணவனின் மருத்துவச் செலவுக்காகப் பணம் கேட்கும் ஒரு பெண்ணின் வேண்டுதல்.

'தனியார் கம்பெனியில் எழுத்தராகப் பணியாற்றும் 33 வயதாகும் என் கணவர் திரு. சேதுராமனுக்கு இரு சிறு நீரகங்களும் பழுதடைந்து, மாற்றுச் சிறுநீரகம் பொருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அறுவை சிகிச்சைக்கும், தொடர்ந்து மருத்துவக் கவனிப்புக்குமாக ஒரு லட்ச ரூபாய் வரை தேவைப்படுகிறது. வயதான பெற்றோர், மனைவி, மூன்று குழந்தைகள் ஆகியவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என் கணவருக்கு இருப்பதாலும், அவரது உடல் நிலையின் தீவிரம் கருதியும் இச்சிகிச்சையினை அவசரமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. ஏழ்மை நிலையிலுள்ள எங்களால் இப்பெரிய தொகையை உடனடியாகச் செலுத்த முடியாமல் தவிக்கிறோம். எனவே, கருணை மனமும், உதவும் மனப்பான்மையும் கொண்ட அனைவரையும் தாராளமாகப் பொருள் தந்து உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அனுப்ப வேண்டிய முகவரி...'

தொடர்ந்து படிக்க முடியாமல் பேப்பரை மடித்து டீப்பாயின் மீது போட்டாள் பூரணி.

என்ன ஒரு பரிதாபம்! நிலைமை எவ்வளவு மோசமானதாக இருக்க வேண்டும், இப்படி இரு கைகளையும் நீட்டி 'பணம் தாருங்கள்' என்று கேட்டு விளம்பரம் செய்வதற்கு!

சின்ன வயசு மூன்று குழந்தைகள். அப்பா அம்மா வேறு. வெறும் கிளார்க் உத்தியோகம். என்ன பெரிய சேமிப்பு இருந்திருக்கப் போகிறது! பதினைந்து தேதி ஆனாலே குழம்பு ரசமாகி, தயிர் மோராகும் வருமானத்தில் சேமிப்புக்குக்கூட இடம் உண்டா என்ன! அதுதான் விளம்பரமே சொல்கிறதே, 'ஏழ்மை நிலை' என்று!

ச்சே—இப்படிப்பட்டவர்களுக்குப் போய் லட்சக்கணக்கில் செலவாகும் வியாதியெல்லாம் வருவானேன்! ஏழைகளுக்கெல்லாம் சுகவீனமே வரக்கூடாது. வெறும் தும்மல், ஜலதோஷம், தலைவலி—போதும். மற்ற சிறுநீரக, இருதய பெரிசுகளெல்லாம் காசுள்ளவர்களுக்கு வேண்டுமானால் வரட்டுமே!

இப்படிப் பிரிவுபடுத்தி இயற்கை அமைத்து விட்டால், பணக்காரர்களெல்லாம் காசைத்தெருவிலாவது கொட்டிவிட்டு நோயின்றி இருக்கவே விரும்புவார்கள். நிச்சயம்.

ஆனால், எங்கே? விரலுக்குத் தக்க வீக்கமாய் தாங்கக் கூடியதாய் எந்தச் செலவு வருகிறது! நல்லதோ, கெட்டதோ அத்தனைக்கும் தகுதிக்கு மீறின அளவில் தான் பணத்தைக் கொட்ட வேண்டிய நிலை அல்லவா எங்கும் எதிலும் காணப்படுகிறது!

'உஹூம்!—பூரணி தன்னால் இதுதான் முடியும் என்கிற தினுசில் நீளமாய் பெருமூச்சொன்றை வெளியிட்டாள்.



அது சரி, யார் யாருக்கு என்னென்ன கொடுக்க வேண்டும் என்று கடவுளுக்குத் தெரியும் என்பார்களே, அது பொய்யா! தெரிந்திருந்தால் இப்படி ஓர் ஏழைக் குடும்பத்தைக் கஷ்டப்படுத்துவாரா?

பூரணி மறுபடி பேப்பரை எடுத்து விளம்பரத்தைப் படித்தாள்.

அறுவை சிகிச்சைக்கும் தொடர்ந்து மருத்துவக் கவனிப்புக்குமாக... இதற்கு பெரிய நோயால் அவதிப்படும்போது ஆபீஸுக்குப் போய்வருவதெல்லாம் நடக்காது. அப்படியானால் பால், மளிகை, வீட்டு வாடகை, பள்ளிகூடச் செலவுகள் இன்னும் அதற்கும் இதற்கும்... என்ன செய்வார்கள்?

நினைக்க நினைக்க வேதனைதான் அதிகமாயிற்று. விளம்பரத்தைப் படித்த போது உண்டானதைவிட இப்போது இரக்கம் பெருகிற்று. என்ன செய்வோம் என்கிற தவிப்பைத் தொடர்ந்து இப்படி வெட்டியாய்ப் பரிதாபப்படுவதோடு, ஏதாவது செய்தேயாக வேண்டும் என்கிற தீர்மானமும் எழுந்தது.

நம்மாலான உதவியாய் ஏதாவது பணம் அனுப்பினால் என்ன? இருட்டு அறைக்குள் தடுமாறிக் கொண்டிருக்கையில் யாரோ விளக்கை ஏற்றிவிட்ட மாதிரி பூரணி நிமிர்ந்தாள்.

அனுப்ப வேண்டும்...கண்டிப்பாய். கூடவே நாம் மட்டும் அனுப்பிவிட்டு உட்காராமல் தெரிந்தவர்களிடம் எல்லாம் சொல்லி முடிந்தவரை உதவும்படிக் கேட்க வேண்டும். ஆளுக்குக் கொஞ்சமாய்ப் போட்டு, சேர்த்து அனுப்பினால் நிச்சயம் அந்தக்குடும்பத்துக்கு உதவியாகத்தான் இருக்கும். சிறுதுளி பெரு வெள்ளம்.

பண உதவி செய்ய வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டபின், ஏனோ கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. எப்படி

யும் அந்தச் சேதுராமன் பிழைத்து விடுவார் என்ற நம்பிக்கை எழுந்தது.

தன்னைவில் தலைதூக்கிய சின்னத் திருப்தியுடன் பூரணி எழுந்தபோது கேசவனின் ஸ்கூட்டர் வாசலில் வந்து நின்றது.

முன்புறக் கொக்கியில் மாட்டியிருந்த பிளாஸ்டிக் பையை அவிழ்த்து அதிலிருந்து வட்டடிபன் டப்பாவைப் பூரணியிடம் கொடுத்தவன், ''டிபன் ஏதாச்சும் இருந் தாக் குடு, இல்லாட்டி வெறும் காபி மட்டுமாவது உடனே குடு, தலைவலி தாங்க முடியலை...'' என்றவாறே உள்ளே வந்தான்.

அவன் உடைமாற்றி முகம் அலம்பி வருவதற்குள் மதியம் செய்திருந்த மசால் வடையில் நான்கை ஒரு தட்டில் வைத்து எடுத்து வந்தாள். அதைத் தின்று கொண்டே, 'என்ன இன்னிக்கு டி. வி. போடலியா? ஆரம்பத்துலேர்ந்து அவங்க ஸ்டேஷன்ல வணக்கம் அறி விப்புப் போடறவரைக்கும் பார்க்கறவளாச்சே நீ!'' என்று கிண்டலாகப் பேசியவனிடம் மௌனமாகக் காபியை நீட்டினாள்.

''ஏய் என்னாச்சு? கோவமா என்ன?'' என்ற அவனது அடுத்த கேள்விக்கும் பதிலேதும் சொல்லாமல் அவள் காலி டம்ளருடன் உள்ளே போக, கேசவன் பின்தொடர்ந் தான்

''உடம்பு சரியில்லையா பூரணி? முகமே வாட்டமா இருக்கே? டாக்டராண்ட வேணா போவமா?'' ஒரு கையால் அவளை அணைத்து மறுகையை அவள் நெற் றியில் வைத்து ஜுர சூடு ஏதாவது உணரமுடிகிறதா என்று பார்த்தான்.

''ப்ச்...அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க...என்னமோ மனசே சரியா இல்லே, எதுவுமே பேசப் பிடிக்கலே...''



''மனசு சரியா இல்லியா? ஏன்? எங்கம்மா, தங்கச்சி யாராவது வந்திருந்தாங்களா? அவங்க வந்துட்டுப் போனாத்தான் வழக்கமா நீ இப்படி மூஞ்சியத் தூக்கிட்டு நிப்பே!''

பேச்சு வேண்டாத திசையில் போவதை உணர்ந்த மாதிரி அவள் பேப்பரை எடுத்து அந்த விளம்பரத்தைக் காட்டினாள்.

''ஓ, இதுவா! நா காலையிலயே பார்த்தனே! இதுக்குப் போய் உன் மனசு சரியில்லாம போவானேன்?''

''உங்களுக்குப் பாவமா இல்லே? எவ்வளவு வேதனை யோட வேண்டுகோள் விடுத்திருக்காங்க...ஓர் ஏழைக் குடும்பத்துக்கு ஆண்டவன் இப்படிக் கஷ்டத்தக் குடுக்கக் கூடாதுங்க!''

''அதுக்கென்ன செய்யறது! அதெல்லாந்தான் விதினு சொல்றது! தினம் இந்த மாதிரி தினசரிகளிலும் பத்திரி கைங்களிலும் பத்து விளம்பரமாவது வந்துகிட்டுதான் இருக்கு...உனக்குதான் ஒண்ணையும் படிக்கற வழக்கமே இல்ல! ஆமா. இன்னிக்கு மட்டும் எப்படி அதிசயமா கண்ணுல பட்டுச்சு?''

''சரி, எனக்கு உங்களை மாதிரிப் பேப்பரையும், கண்டதையும் படிக்கற ஆர்வம் இல்லைன்றத ஒத்துக் கறேன்! இப்ப அந்த நக்கல் எதுக்கு? இன்னிக்கு வேலை யெல்லாம் முடிச்சிட்டு சும்மா உக்காந்திருந்தப்போ பேப்பர்ல டி.வி. ப்ரோக்ராம் என்னனு பார்க்கலா மேன்னு தோணிச்சு, பார்த்தேன். எதேச்சையா இந்த அறிவிப்பு கண்ணுல பட்டுச்சு...நீங்களும்தான் இத பாத்திருக்கீங்க...ஐயோ பாவம்னு வருத்தப்பட முடியாட் டியும் இந்த நையாண்டிக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே!''

''அடடா...ஏதோ பேச்சுக்குச்சொன்னா கோவிச்சுக் கிட்டியே! படிச்சப்ப எனக்கும் வருத்தமாத்தான் இருந்துச்சு...ஆனா, என்ன செய்யமுடியும் சொல்லு...எங்க ஆபீஸ் அக்கௌண்டண்ட் தேவராஜு தெரியுமில்லே, அவர் மகனுக்குக்கூட இதேமாதிரிதான் கிட்னி ரெண்டும் கெட்டுப்போய் ஆபரேஷன் செஞ்சாங்க...இப்ப ஓரளவு நல்லாயிட்டான்னாலும், அப்ப பாவம், குடும்பமே திண்டாடிப் போயிடுச்சு! நல்லவேளை, அவன் சம்சாரம் கவர்மெண்ட் உத்தியோகத்துல இருக்கக்கண்டு இப்பிடிப் பணம் கேட்டு விளம்பரம் செய்யற அளவுக்கு நிலமை மோசமா போகாம தப்பிச்சாங்க! இப்ப, நம்மளையே எடுத்துக்க... நெருப்புன்னா வாய் வெந்திடுமா? நாளைக்கே எனக்கும் ஏதாச்சும் ஒண்ணு வந்திடுச்சுன்னு வெச்சிக்க...''

வார்த்தையில்கூட அது வருவதை விரும்பாதவள் போல அவள் அவசரமாகப் ''போதுங்க...ஏன் என்னென்னமோ பேசறீங்க?'' என்று பதறினாள்.

கேசவன் மெல்ல சிரித்தான்.

''மனுஷ உடம்புதானே பூரணி? எது வேணாலும் வரத்தான் செய்யும். எல்லாத்துச்கும் தயாராத்தான் இருக்கணும்...ஆனா, நமக்கெல்லாம் வந்தா உதவி செய்ய நம்மளப் பெத்தவங்க இருக்காங்க...கடவுள் புண்ணியத்துல, வசதியாவும் இருக்காங்க. ஆனா, நீ சொல்ற மாதிரி இது பாவமான கேஸுதான்! நாம வேணா ஏதாச்சும் உதவி செய்வமா?''

பூரணி சட்டென்று நிமிர்ந்தாள். கணவனின் நினைப்பும், தன்னுடையதும் ஒரே மாதிரி இருக்கும் சந்தோஷம் கண்களில வெளிச்சம் போட்டது.

''ஆமாங்க, அதச் சொல்லத்தான் வந்தேன். கட்டாயமா நாம ஏதாச்சும் பணம் அனுப்பிச்சே ஆகணும். ஒரு ஐநூறு ருபா அனுப்புவமா?''



''ஐநூறா?''

கேசவன் யோசித்தான். அப்புறம் மெதுவாகப் பேசினான்.

''தாராளமா அனுப்புவம். ஆனா, தீபாவளிக்குப் பட்டுப்புடவை வேணுன்னு கேக்கக்கூடாது, சரிதானா?''

எதற்கும் எதற்குமோ அவன் முடிச்சுப் போடுவது எரிச்சலை எழுப்ப பூரணி ''ச்சே'' என்றாள். ''நா எவ்வளவு வேதனையோடு பேசறேன்னு உங்களுக்குப் புரியலே இல்லே. அதான் இப்பிடிக் கிண்டலடிக்கறீங்க! எனக்குப் பட்டுப்புடவை என்ன, வேற ஒரு புடவையும் வேணாம், அந்தப் பணத்தையும் இவங்களுக்கு அனுப்பிடுங்க, போதுமா?''

அவள் தொடையில் மெல்லத்தட்டி ''ஸாரி...''என்று சொன்னபோது அவன் குரலில் மன்னிப்புக்கோரலும் ஒருவிதக் கரிசனமும் கலந்திருந்தன.

''உன் வேதனை எனக்குப் புரியுதும்மா...ஆனா நீ இவ்வளவு சீரியஸா இந்த விஷயத்த எடுத்துகிட்டு மனச உழைப்பிக்க வேண்டாம்னுதான் அப்படிச் சொன்னேன். நம்மளமாதிரி நிறையப்பேர் இந்த விளம்பரத்தப் பார்த்திருப்பாங்க, அதுல கொஞ்சம் பேருக்காவது பணம் அனுப்பணும்ன்ற நினைப்பு வந்திருக்காதா? அதனால ஒரேயடியா ஐநூறு ருபா அனுப்பறதுக்குப் பதிலா இருநூத்தி அம்பது அனுப்பிச்சா போதும்னு தோணுது. நம்ம தகுதிக்கு இவ்வளவுதான் இப்பமுடியும்..அத்தோட, இவங்க ஒருத்தருக்கே நிறைய அனுப்பறதவிட இன்னொருத்தருக்கும் பிரிச்சு அனுப்பலாமே? என்ன சொல்றே?''

பூரணி அடி உதட்டைக் கடித்துக் கொண்டு சிந்தித்தாள்.

''அதுவும் வாஸ்தவந்தாங்க...இனிமே எப்ப இந்த மாதிரி விளம்பரம் வந்தாலும் என்கிட்ட ஒரு வார்த்த சொல்லுங்க...மறக்காம உதவி செய்வோம், அதோட, நம்ம உறவுக்காரங்க, இங்க அக்கம்பக்கத்துல எல்லாம் கேட்டுப்பார்க்கட்டுமா, ஆளுக்குக் கொஞ்சமா போட்டா கணிசமா அனுப்பலாமே?''

''அதெல்லாம் சரிப்பட்டு வராது பூரணி...நீ போய்ப் பணம் கேக்க ஆரம்பிச்சின்னா என்னவோ உனக்குத் தானமா குடுக்கற மாதிரி மூஞ்சியத் தூக்கிக்குவாங்க... நம்மவரைக்கும் என்ன முடியுதோ அதச் செய்வோம், போதும், என்ன?''

இருநூற்றி ஐம்பது ரூபாய் என்று முடிவானபின், பூரணி பேப்பரைப் பார்த்து அந்த விலாசத்தைக் குறித்து அவனிடம் கொடுத்தாள்.

எவருக்கோ ஏதோ நல்லது செய்யப் போகிறோம் என்ற எண்ணம்அலாதி நிறைவைத் தந்தது.

சற்றே உற்சாகத்துடன் டி.வி. பார்த்து, 'செய்திகள்! நேரத்தில் சாப்பாடு முடிந்ததும் கேசவன் தெரு முக்குக் கடைக்குச் சென்று ஒரு சிகரெட் பிடித்து, பீடா வாங்கி வந்தான்.

சமையலறையைச் சுத்தம் செய்துவிட்டுப் பீடாவை மென்றபடியே வாசல் பிரம்பு நாற்காலிகளில் சற்று நேரம் உட்கார்ந்திருந்தபோது, பூரணி திடுமென நினைத்துக் கொண்ட மாதிரி கேட்டாள்.

''ஏன் அப்ப தடக்குனு 'நமக்கும் இப்படி வந்திட்டா'னு ஆரம்பிச்சிட்டீங்க? எனக்குப் பகீர்னு ஆயிடுச்சு! சும்மா வெளையாட்டுக்குக்கூட அப்பிடிப் பேசாதீங்க...''



''அத இன்னுமா நினைப்பு வெச்சிச்சுகிட்டிருக்கே? இந்த மாதிரி பெரிசா வியாதி வர்றப்ப அதத் தடுக்கற சக்தி யார் கைல இருக்கு' முன்ஜாக்கிரதையா சிகிச்சைக் காவது பணத்தச் சேமிச்சு வெச்சுகிட்டம்னா ரொம்ப சிரமப்படாம இருக்கலாம். அனாவசிய செலவெல்லாம் குறைக்கணும்னு நா அப்பப்ப சொல்றப்ப உனக்குக் கோவமா வருமே, எல்லாம் இந்த மாதிரி ஒரு நிலமை நிடும்னு வந்திட்டா சமாளிக்கத்தான். இப்பப் புரியுதா?''

கண்களை மூடி ஒரு நிமிஷம் தீவிரமா யோசனை செய்தபின் பூரணி தலையசைத்து அவன் சொன்னதை ஆமோதித்தாள்.

''கரெக்டுங்க... இப்பவே புடிச்சு சேமிச்சாதான் நாளைக்கு நோய்நொடி, இல்ல, பசங்க ஸ்கூல், அது இதுனு வர்றப்ப சரியா இருக்கும்...''

பேசியவள் நிறுத்தினாள். குரலைத் தழைத்துக் கொண்டாள்.

''முகம் தெரியாத அந்த நோயாளியோட கஷ்டம் தாங்க முடியலைதான். ஆனாலும், நிதானமா நினைச்சுப் பாக்கறப்போ, 'தலைக்கு மிஞ்சிதான் தர்மம்'னு பெரிய வங்க சொல்லியிருக்கிறது ஞாபகத்துக்கு வருது... அறிவிப்ப பார்த்ததும் உண்டானபடபடப்புல இருநூத்தி ஐம்பது ரூபா அனுப்பலாம்னு தீர்மானிச்சது கூட, நம்ம அந்தஸ்துக்கு அதிகம்னு தோணுது! தர்மம் செய்யறதும், கஷ்டத்துல இருக்கறவங்களுக்கு உதவறதும் நல்ல காரியம் தான். அதுக்காக நம்ப நிலைமைய நினைச்சுப் பார்க்காம இருந்தா எப்படி? கையில இருக்குன்றதுக்காக இப்ப அனுப்பிட்டா அப்பறம் தொடர்ந்து இதே மாதிரி செய்ய முடியுமா? இப்ப அனுப்பிட்டா அப்பறம் தொடர்ந்து இதே மாதிரி செய்ய முடியுமா? கஷ்டம்... அதனால அனுப்பறத நூறாக்கிடுங்க... போதும்...''

''நாங்கூட் சொல்லணும்னு நினைச்சேன், இருநாத்தி ஐம்பது அதிகம்னு அப்பவே பட்டுச்சு! ஆனா, நீ அவ்வளவு வருத்தத்தோட சொல்றப்ப...''

அவனை முடிக்க விடாமல் பூரணி குறுக்கிட்டாள்.

''நாம மட்டும் என்ன பெரிய கோடீச்வரங்களா? நூறு ருபா போதும். அனுப்பணும்னு சொன்னதும் மறக்காம உடனே சரினு சொன்னீங்களே, அதுவே பெரிசு!''

இரவு தூங்கும் போது, தான் அனுப்பும் நூறு ரூபாய் பணம் அந்தக் குடும்பத்துக்கு மிகமிக உதவியாக இருப்பதாகவும், கலங்கிய கண்ணோடு வரும் அந்த இளம் மனைவி, 'உங்களுக்குத்தான் எவ்வளவு பெரிய மனசு, நீங்க நல்லா இருக்கணும்' என்று வாழ்த்துவதாகவும் தோன்றியவை கனவா, பிரமையா என்று புரியவில்லை,

ஆனால், இரவு முழுவதும் சரியாக உறங்க முடியாமல் புரண்டு, புரண்டு படுத்து எழுந்ததில் காலையில் எழுந்ததுமே வலது நெற்றிப் பொட்டில் வலி நமநம வென்று பிராண்டியது.-

அதைப் பொருட்படுத்தாமல் காபி, டிபன், சமையலைக் கவனித்து முடிப்பதற்குள் நெற்றிப் பொட்டிலிருந்து வலி பின் மண்டைக்குத் தாவியிருந்தது.

என்றாலும், எட்டரை மணிக்குக் கேசவன் அலுவலகத்துக்குக் கிளம்பும் போது, ''ஆபீஸுக்குப் போனதும் மறக்காம மணியார்டர் பண்ணிடுங்க... விலாசத்தை எடுத்துக்கிட்டீங்களா?'' என்று நினைவூட்ட, ''நல்ல வேளை ஞாபகப்படுத்தினே...ஆபீஸ் பரீட்சைக்குப் பணம் கட்ட நேத்து தான் கடைசி நாள்ன்றதால கையில இருந்ததப் போட்டுக் கட்டிகிட்டேன் 'காஸ்' சிலிண்டர் வந்தா வேணும்னு வெச்சிருக்கியே அந்தப் பணத்தைக் குடு... சிலிண்டர் வர எப்படியும் ரெண்டு நாள் ஆகும்,



அதுக்குள்ள பாங்க்லேருந்து 'டிரா' பண்ணி கொடுத்துர்றேன்'' என்றான் கேசவன்.

''பாங்க்லேருந்து 'டிரா' பண்ணணுமா? ஏன்? அவ்வளவு சீக்கிரமாவா எல்லா பணமும் செலவழிஞ்சுப் போச்சு? சம்பளம் வர இன்னும் நாலு நாள் இருக்குதே?''

''ஏன்னு கேட்டா எப்படி? இந்த மாசத்துல மட்டும் மூணு புது சினிமா, நாலு தரம் ஹோட்டல்ல டின்னர் எல்லாம் இருந்திருக்கு. மறக்காத! பத்தாததுக்கு அடுத்த வீட்டம்மா குடுத்தாங்கன்னு சொல்லிப் புதுப் புடவையை வேற வாங்கி நூறு ருபா இன்ஸ்டால்மெண்ட் குடுத்திருக்கே... அப்புறம் எப்படி செலவாச்சுனு கேட்டா என்னத்த சொல்றது? சரி, சீக்கிரமா பணத்தைக் குடு...''

உள்ளே போனவள், தலையை ஒரு கையால் அமுக்கிப் பிடித்தவாறே நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து வந்தாள். அதைக் கொடுத்துவிட்டு, ''இத வச்சிக்கங்க. ஆனா மணியார்டர் ஐம்பது ருபா அனுப்பிச்சா போதும். மிச்சம் உங்க செலவுக்கு இருக்கட்டும். சேமிச்சு வச்சிருக்கிறத எடுத்துட்டே இருந்தம்னா அப்புறம் அவசரம், ஆபத்துன்னா நாம என்ன செய்றது?'' என்றாள் லேசான வருத்தத்துடன்.

அவன் ஸ்கூட்டரை உதைத்துக் கிளம்பும் போது, ''ஞாபகமா அனுப்பிடுங்க...போன வாரம் எங்கக்காவுக்கு மதுரைக்கு எழுதின லட்டரை நாலு நாளு வெச்சிருந்து கடைசில நானே போய் போஸ்ட் செஞ்ச மாதிரிஇதையும் மறந்திடாதீங்க! திருப்பதிக்குப் போக மஞ்சத் துணியில முடிஞ்ச வெப்பாங்களாமே, அடிக்கடி பார்த்து நினைவுபடுத்திக்க, அந்த மாதிரி முடி வேணா போட்டு அனுப்பட்டுமா?'' என்று சிரிக்காமல் அவள் கூற, ஆபீஸ்போகும் கேசவன் அவசரத்தில் வெறுமே தலையாட்டி விட்டுச் சென்றான்.

நுழைந்ததும் நுழையாததுமாய் அலுவலகத்தில் காத்திருந்த வேலைகளும், நண்பர்களும், அரட்டையும், கான்டீனும் அவனை ஆக்ரமித்ததில் மணியார்டரும், அந்தச் சிறுநீரக நோயாளியின் அவஸ்தையும் சுத்தமாய் நினைவிலிருந்து விலகிப் போயின.

சாயங்காலம் வீடு திரும்பிய போது, பூரணியின் தம்பியும் அவன் புது மனைவியும் வந்திருந்தார்கள்.

''......அடிக்கடி கூட்டிக்கிட்டு வந்தாத்தானே நம்ம உறவு மனுஷங்க கூடப் பேசிப் பழக முடியும்? ஹனிமூன் போயிட்டு வந்து, பதினைந்து நாளுக்கு மேல ஆகுது. இப்பத்தான் நம்ம வீட்டுக்கு வழி தெரிஞ்சிருக்கு பாருங்க...''

கணவனும் மனைவியுமாய் அந்தப் புது தம்பதியை விருந்தால் திணற அடித்து, இரவு பஸ் ஸடாண்ட் வரை சென்று பஸ் ஏற்றி விட்டு வரும்போது மணி பத்துக்கு மேல் ஆகியிருந்தது.

''...அவங்க பொறந்த வீட்ல விருந்துக்குப் போனப்ப 'போயிட்டு வாங்க'னு கையத் தட்டிக்கிட்டு அனுப்பிட்டாங்க... அதுக்காக நாம சும்மா இருக்க முடியுமா? மொத மொத தம்பியும் அவன் பொண்டாட்டியுமா நம்ம வீட்டுக்கு வந்திருக்காங்க, சரியான மரியாதை செய்யாட்டி எப்படி! என் புது ஷிபான் புடவைக்காக கண்ணாடி வச்சு தச்ச ஜாக்கெட் பீஸ் ஒண்ணு வாங்கினமே, நாப்பது ரூபா குடுத்து, அத வெத்தலை பாக்குல வெச்சு குடுத்திட்டேன்... என்னங்க, நா செஞ்சது சரிதானே? எனக்கு மறுபடி வாங்கிக்கிட்டா போச்சு!...''

உடை மாற்றும் போது சட்டைப் பாக்கெட்டிலிருந்து பர்ஸ், பணம் எடுத்து அலமாரியில் வைக்கையில் பூரணி எழுதிக் கொடுத்திருந்த விலாசச் சீட்டு பறந்து விழுந்தது.

''என்ன சீட்டுங்க அது?''



''அ...அது...அதுவா? வந்து மணியார்டர் பண்ணச் சொல்லி...''

பூரணி திரும்பி நின்று கொண்டு அவனைப் பார்க்காமல் பேசினாள்.

''மறந்துட்டீங்களாக்கும்! உங்க ஞாபக மறதிதான் உலகப் பிரசித்தம் ஆச்சே! போவுது விடுங்க! இன்னிக்கு எதிர்பாராத விருந்தாளிங்களால வேற செலவு! இதுல மணியார்டர் அனுப்பாம இருந்ததுகூட நல்லதுக்குத்தான்!''

தன் பேச்சு தனக்கே சமாதானமாகாத மாதிரி தோன்ற சற்றே நிதானித்தவள் உறுத்தலை மறைக்கும் விதமாய் மெல்லச் சொன்னாள் — ''நம்மள மாதிரி எல்லாருந்தான் பேப்பர் பார்த்திருப்பாங்க...நிறைய வசூலாகியிருக்கும். நாம தந்துதான் அவங்களுக்கு விடியப் போகுதா என்ன? கடல்ல கரைச்ச பெருங்காயம்! அடுத்த தரம் அனுப்பிக்கிட்டா போவுது!''

—கல்கி தீபாவளி மலர், 1991

---

# 6. எல்லோரும் தான்

**ப**த்து மணிக்கே கொளுத்தத் தொடங்கிவிட்ட வெயிலைப் பொருட்படுத்தாமல் மாலையில் வரப்போகும் விருந்தினருக்காக சமைக்க வேண்டி தேவைப்பட்ட காய் கறிகளை வாங்கவென வேர்க்க விறுவிறுக்க கையில் கூடையுடன் நடக்க முற்பட்ட கீதா, பக்கத்து வீட்டு ஸ்யாமளா தோட்டத்தில் நிற்பதைப் பார்த்துவிட்டு, வேகத்தை கட்டுப்படுத்தினாள்.

கீதா அந்த வீட்டுக்குக் குடி வந்து இன்னமும் ஒரு வாரம் கூட பூர்த்தி ஆகவில்லை. முன்பு இருந்த வீட்டில் ஏக தண்ணீர் கஷ்டம். விடிகாலை மூன்றுக்கும், நாலுக்கும் எழுந்து கை ஓய பம்பு அடித்து, வாசலில் தண்ணீர் லாரி வரும்போதெல்லாம் பக்கெட்டுகளுடன் ஓடி, நாலு வாளி தண்ணீருக்காக மன்றாடி, மன்றாடி அலுத்துப் போய், வாடகை கூடுதலாக இருந்தாலும் பரவாயில்லை என்று இங்கு குடி வந்தது ஒரு பெரிய கதை.

புதுவீட்டில் அவளுக்கு ரொம்ப பிடித்த விஷயம் எந்தக் குழாயை எப்போது திறந்தாலும் சளசளவென்று கொட்டும் தண்ணீர்தான். சரியாக எண்ணெய் தேய்த்து அலசி தாராளமாய் குளிக்க கூட முடியாமல் இருந்த அவதி நீங்கி, ராத்தூக்கத்தை இழந்து கஷ்டப்படாமல் நினைத்த போது தூங்கி, எழுந்து, அவகாசம் கிடைத்த நாழிகையில் அம்பாரமாய் துணிதோய்த்து, முற்றத்தில் வரவரவென்று சமைத்த பாத்திரங்கள் குமிந்து பயமுறுத்தாமல்—ஹா—எத்தனை நிம்மதியான வாழ்வு இது!



இந்த தண்ணீர் தந்த சந்தோஷத்தோடு, பக்கத்து வீடுகளெல்லாம் ஒண்டு குடித்தனமாக இல்லாமல், தோட்டமும், புல்வெளியுமாய் ரம்யமாய் என்னேரமும் ரசிக்கத் தக்கதாய் இருந்தது இன்னொரு ப்ளஸ் பாயிண்ட்தான்'

கீதா பிறந்து வளர்ந்தது எல்லாம் பம்பாயில். அதனால் தோட்டம் கீட்டம் என்று பராமரித்தோ, அனுபவித்தோ அவளுக்கு ரொம்ப பழக்கம் இல்லை. என்றாலும் ரோஜாவும், ஜாதியுமாய் சிரிக்கும் தோட்டத்தை பார்த்து ரசிக்க, அதற்கென பட்டப்படிப்பு படிக்க வேண்டுமா, என்ன?

முதல் நாள் வந்து இறங்கினதுமே அடுத்த வீட்டு தோட்டத்தில் வண்ணவண்ணமாய் சிரித்த ரோஜாக்களையும், தேய்த்து குளிப்பாட்டிவிட்ட பணக்காரவீட்டு குழந்தைகள் போல பளபளவென்று நின்றிருந்த க்ரோட்டன்ஸ்களையும் பார்த்து ஆச்சர்யப்பட்டுப் போனாள். வெயிலை பொருட்படுத்தாமல் பக்கத்து வீட்டுப் பெண்மணி தலையை தலைப்பால் மூடியபடி ரொம்ப நேரம் தினம் தோட்டத்திலேயே நின்று தானே வேலை செய்வதைப் பார்த்த பிறகு, ஓ! வீட்டுச் சொந்தக்காரியே கவனிக்கிறாளா, அதுதான் கண்ணைப் பறிக்கற தினுசில் தோட்டம் இத்தனை கவர்ச்சியாய் இருக்கிறதா, என்றும் நினைத்துக் கொண்டாள்.

நடுநடுவில் அவரவர் வீட்டில் நின்று ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்து, 'நா கீதா'—'நா ஸ்யாமளா' என்று அறிமுகப்படுத்திக் கொண்டாலும், அடுத்த வீட்டுக்குச் சென்று ஆற, அமர உட்கார்ந்து கதை பேசவோ, தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கவோ இன்னும் அவகாசமே கிட்டவில்லை என்பது நிஜம்.

நடந்து கொண்டிருந்த கீதா நின்றாள்.

இப்போது 'ஹலோ' என்று சொல்லி தோட்டத்தை ஒரு ரவுண்டு அடிக்கலாமா? போனால் பூஜாடியில் வைக்க ரோஜாப்பூக்களை கொடுப்பாளோ என்னமோ! மார்கெட்டுக்கு கொஞ்சம் முன்னே பின்னே போனால் என்ன? நேரம் இருக்கிறதா?

இருந்தது.

'கேட்' அருகில் சென்றவள் ''ஹலோ'' என்று நட்புடன் கூற, குனிந்து ஒரு ரோஜாச் செடியிலிருந்து மலர்களை கத்திரிக்கோலால் வெட்டிக் கொண்டிருந்த ஸ்யாமளா நிமிர்ந்தாள்.

''ஓ...ஹாலோ...என்ன...மார்கெட்டுக்கா?''

''ம்ம்...சாயங்காலம் விருந்தாளிங்க வராங்க...காய் வாங்கிட்டு வரலாம்னு புறப்பட்டவ, நீங்க தோட்டத்துல நிக்கறதப் பாத்து வந்தேன்...உங்க தோட்டம் ரொம்ப அருமையா இருக்குங்க... ஒருநாள் நிதானமா வந்து பாக்கணும்''

ஸ்யாமளா பெருமையுடன் சிரித்தாள்.

''ஒரு நாள் என்ன? இன்னிக்கே வாங்களேன்...''

பூஜாடிக்கு ரோஜாக்கள் கிடைப்பது நிச்சயம் என்று தோன்ற, ஒருவித குஷியுடன் கீதா உள்ளே நுழைந்தாள்.

பார்வையை சுழற்றி வீசிவிட்டு ''அடேயப்பா—நர்ஸரிக்குள்ள நுழைஞ்ச மாதிரி இல்ல இருக்கு!'' என்று வியக்க, ஸ்யாமளா அவசரமாய் மறுத்தாள்.

''மாதிரினு சொல்லாதீங்க... அதவிட பெட்டரா இருக்குனு சொல்லுங்க...என்கிட்ட இருக்கற ரோஜா வெரைட்டிங்க, நர்சரில கூட இருக்காது, தெரியுமா?''

''நிஜமாவா?''



''இத பாருங்க...கருப்பு ரோஜா...இது மாதிரி நீங்க வேற எங்கயாலது பாத்திருக்கீங்களா? பங்களூர்லேந்து கொழந்தய தூக்கிட்டு வர்ற மாதிரி கொண்டு வந்தேன்... பாலீதின் பையில வைச்சு, மண் காயாம இருக்க, பாசி கொடிய அடர்த்தியா தண்ட சுத்தி பரத்தி...ப்பா... ஆனா, பட்ட கஷ்டம் வீணா போகல...நல்லா பூக்கத் துவங்கிடுச்சு...''

''இவ்வளவு கஷ்டப்படறத்துக்கு ஃப்ளவர் ஷோல ஏதாவது பரிசு வாங்கியிருக்கீங்களா?''

ஸ்யாமளா புருவங்கள் உயர பேசியவளை ஏறிட்டாள்.

''வாங்கியிருக்கீங்களா வா? உள்ள வந்து பாருங்க... கூடத்து அலமாரி பூரா கப்புங்க, ஷீல்டுங்கதான்...''

''அப்படியா! ரொம்ப சந்தோஷங்க...ஆமா, எல்லார் வீட்டுலேயும் நா ரோஜா செடி பாத்திருக்கேன்தான்—ஆனா உங்க வீட்டுது 'பாக்கவும் தளதளனு இருக்கு, பூக்களும் ஏராளமா...''

அவளை முடிக்கவிடாமல் ஸ்யாமளா குறுக்கிட்டாள்.

''இல்லாம எப்படி இருக்கும்? இதுங்களோட என்ன பாடுபடறேன் தெரியுமா? தினமும் ரோஜா செடிகளோட மட்டும் ரெண்டு மணி நேரமாவது நிப்பேன். ஒவ்வொரு செடியையும் கொழந்தைமாதிரி நினைச்சுக்கிட்டு பேசுவேன்...என்னதான் தோட்டக்காரன் தண்ணிவிட்டாலும் நம்மோட தனிப்பட்ட கவனம் இருந்தாத்தானே தோட்டம் நல்லாயிருக்கும், இல்லையா?''

கீதா அவசரமாய் ''ஆமாம்...'' என்றாள்.

''ரோஜாச் செடிகளுக்கு 15 நாளைக்கு ஒருதரம் பூச்சி மருந்தடிப்பேன்...மாசம் ஒருதரம் ரோஸ் மிக்ஸ் போடுவேன்...அடிலேருந்து வளருதே, வாட்டர் ஷுட்ஸ் அதையெல்லாம் வெட்டி விட்டிடுவேன்...ஒரு மழை வந்ததும் ரோஜாச் செடியை கச்சிதமா 'ப்ரூன்' பண்ணுவேன்...அப்புறம் க்ரைடோஸைம் அடிச்சேன்னா நல்லா குப்புனு துளுத்து பூத்துக் குலுங்கும்...''

அவளுடைய பாஷை புரியாமல்போக, கீதா எழுந்த கொட்டாவிய சிரமப்பட்டு அடக்கினாள்.

''அதே மாதிரி இங்க பாருங்க...என்ன தெரியுதா? 'கோலியாஸ்-எங்கிட்ட இருக்கற வெரைட்டி கோலியாஸ் யார் கிட்டேயும் கிடையாது. கோலியாஸுக்கு நிறைய நிழல் வேணும். மிதமா தண்ணீர் விடணும். துளிரோட நுனியை கிள்ளி விட்டுட்டா, பரவலா வளரும். கோலியாஸைப் பூக்கவே விடக்கூடாது கீதா. பூத்துச் சுன்னா செடி சீக்கிரம் முத்திப் போயிடும். அடிக்கடி டதியன் போட்டு மாத்திகிட்டே இருக்கணும்...அப்புறம் இங்க வாங்க...இந்த 'லானை' எப்படித் தயார் பண்ணணும்னா...''

மூச்சு விடாமல் தோட்டப்பிரதாபத்தை நிறுத்தாமல் ஸ்யாமளா கூற, மண்டிக்கொண்டு எழுந்த எரிச்சலையும், சலிப்பையும் மறைக்கும் முயற்சியில், கீதா தலையை குனிந்து ரிஸ்ட் வாட்சை ஏறிட்டாள்.

''அடடே! மணி ஆயிடுச்சா...! உங்க அருமையான தோட்டத்தைப்பத்தி நாள் பூரா பேசிட்டு இருக்கணும்னு ஆசையாத்தான் இருக்கு—ஆனா, பாருங்க...நாழியாச்சு.. வேலை தலைக்கு மேல இருக்கு...விருந்தாளிங்க வராங்களா..போய் வீட்டைச் சீர்பண்ணற வேலை வேற பாக்கி இருக்கு...''



இது நாழிகை அவள் பீற்றிக்கொண்டதை பொறுமையுடன் கேட்டதற்கு சன்மானமாக கையிலிருக்கும் ரோஜா மலர்களை இவளிடம் நீட்டி ''வீட்டுல கொண்டு ஃப்ளவர் வாஸுல வையுங்க...கலர் ஃபுல்லா இருக்கும்'' என்று சொல்லுவாள் என்று எதிர்பார்த்து, அப்படி ஸ்யாமளா செய்யாமல் இருக்க, நேரத்தை வீணடித்து விட்டோமே என்கிற கோபமும, ச்சே இவள் தற்பெருமை தம்பட்டம் கேட்க நான்தானா மாட்டிக் கொள்ள வேண்டும் என்கிற ஆயாஸமும் சரக்கென்று ஆளை ஆக்ரமிக்க, ''நா வரேன்'' என்று முனகலாக கூறிவிட்டு திரும்பி அரக்கபரக்க நடந்தாள்.

காய்கறி மார்கெட்டில் நுழைந்து இரவு சமையலுக்குத் தேவையான பதார்த்தங்களை பொறுக்கி வாங்கினவள் 'ஹாய் கீதா' என்று யாரோ பரிச்சயமான குரலில் அழைக்க, திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

ஓ! நளினி...அவள் முன்னால் குடி இருந்த கட்டிடத்தில் இன்னொரு ஃப்ளாட்டில் வசிப்பவள்.

இரண்டடி வைத்து ஸ்னேகிதியை நெருங்கினவள் வாஞ்சையுடன் அவள் கையைப் பற்றிக் கொண்டாள்.

''ஹாலோ நளினி...ரொம்ப நாளுக்கப்புறம் உன்னை பாக்கறது சந்தோஷமா இருக்கு...ஆமா, இந்த மார்கெட்லியா நீயும் காய் வாங்கறே?''

நளினி தோளை குலுக்கினாள்.

''நோ...நோ...இவ்ளோ தூரம் அடிக்கடி வர முடியுமா? எப்போதாவது இந்த பக்கம் வரும்போது வாங்குவேன். இங்க ஃப்ரெஷ்ஷா கிடைக்கும்...சரி புது வீடெல்லாம் எப்படி இருக்கு.''

கீதா அலுப்புடன் சூள் கொட்டினாள்.

''வீடு நல்லாதான் இருக்கு. ஆனா, இந்த பக்கத்து

வீட்டுக்காரங்க தொல்லைதான் தாங்க முடியாம போயிடு மோனு பயமா இருக்கு!''

''தொல்லையா? அப்படி என்ன பண்ணறாங்க? வீண் சண்டைக்கு, கிண்டைக்கு...''

அவளை முடிக்கவிடாமல் கீதா வெட்டினாள்.

''அதை மாதிரி எல்லாம் இல்ல...அது ஒரு டைப்...ஒரு தற்பெருமை கேஸ். தோட்டத்தைப்பத்தி பேச்சு எடுத்திட்டா வாய் மூடாது...அடுத்தவங்களுக்கு இன்ட்ரஸ்ட் இருக்கா இல்லையான்ற அக்கறை எல்லாம் கிடையாது... அப்பாடீ...சரியான போர்...''

நளினி அவள் தோளை தட்டி சிரித்தாள்.

''அவங்க பேச்சு இப்ப எதுக்கு? உன் வீட்டுல எல்லாரும் எப்படி இருக்காங்க...தண்ணி கஷ்டம் இல்லாம வசதியா இருக்கிங்களா? முக்கியமா உன் நாய், ஸாரி, உன் குழந்தை ப்ருடஸ் எப்படி இருக்கு...புது வீடு அதுக்கு பழகிடுச்சா?''

நாயைப் பற்றி பேசியதும் கண்களில் உற்சாகம் வெளிச்சம் போட, கீதா குரலை உயர்த்தி பேசினாள்,

''அவனுக்கென்ன கனகுஷியாதான் இருக்கறான். ஓட்டமும் துருதுருப்புமா...அதுவும் ஃப்ளாட்ல எடம் இல்லாம இருந்துட்டு, இங்க ஓடி ஆட வேண்டிய இடம் இருக்கறதுல தேன் குடிச்ச நரிமாதிரி என்னேரமும் ஓயாத விஷமம்தான்...''

''குட்டிதானே கீதா விஷமம் பண்ணாம இருக்குமா?''

''இல்லே...நீ வந்து பாக்கணும் அவனோட விஷமத்தை...ஒரு செகண்டு சும்மா இருக்க மாட்டேங்கறான்...சதா எதையாவது உடைக்கறதும், பிய்க்கறதும்



அப்பப்பா தாங்க முடியலே...முந்தா நாள் பாரு என் ஹஸ்பண்டோட கஸின் உமா, அ, லண்டன்ல இருக்காங்களே அவங்கதான், வந்திருந்தாங்க...ரொம்ப உசத்தியான செருப்பு போட்டுகிட்டு வந்திருந்தாங்க...நாங்க ரெண்டு பேரும் ஸ்வாரஸ்யமா பேசி முடிச்சப்புறம் வீட்டுக்குக் கிளம்பறப்போ பார்த்தா...இது அவங்க செருப்பை உருத்தெரியாம கடிச்சு, ரகளை பண்ணி வச்சிருக்கு...எனக்கு மானம் போச்சு...நீ சிரிக்கறே...பாவம், அத்தனை நாகரிகமானவங்க செருப்பே இல்லாம போனாங்க பாரு...ரொம்ப கஷ்டமாயிடுச்சு...அது ஒரு பக்கம்னா இந்த கலாட்டாவை கேளு...கண்டதையும் கடிச்சு, விழுங்கிடறதுல நேத்திலேருந்து ப்ருடஸுக்கு ஒரே வயித்துப்போக்கு...ஆரோரூட் மாவுல கஞ்சி வைச்சி ரெண்டு மணி நேரத்துக்கு ஒருதரம் குடுக்கறேன்... பெபேஸாலின்—ஒ குடுத்துகிட்டு இருக்கேன்..நிக்கலேன்னா இமோடியம் குடுக்கணும்...டீ வொர்ம் வேற பண்ண வேண்டியிருக்கு...நாளை டாக்டர்கிட்டே கூட்டிகிட்டுப் போய் சரியான விதமா டீவர்ம் பண்ணணும்...அப்பத்தான் முடி பளபளனு, நல்ல ஆரோக்கியமா இருக்கும்... ஆனா, ஹாஸ்பிடல் போறதுக்குள்ளே ப்ருடஸ் படுத்தி வக்கற பாடு இருக்கே...''

அவள் பேசும் பாஷை புரியாது போக, சலிப்பில் எழுந்த கொட்டாவியை அடக்க நளினி சிரமப்பட்டுப் போனாள்.

''பெடிகிரி நாயெல்லாம் ரொம்ப ஜாக்கிரதையா வளக்கணும் நளினி...பணம் கொடுத்து வாங்கிட்டா ஆச்சா? மூணாம் மாசத்துக்குள்ள ஆன்டி டிஸ்டம்பர் ஊசியும், ஆறாம் மாசத்துக்குள் ஆன்டி ரேபிஸ் ஊசியும் போடணும்...நடுவுல 'பார்வோ' ஊசி வேற... இதோட...''

மூச்சுவிடாமல் நாய் பிரதாபத்தை நிறுத்தாமல் கீதா கூற, மண்டிக் கொண்டு எழுந்த எரிச்சலையும், சலிப்பை

யும் மறைக்கும் பாவனையில் தலையைத் திருப்பி மார்கெட்டுக்கு வெளியில் பார்வைய வீசின நளினி, தூரத்தில் தன் பையனின் தலை தெரிய அப்பாடி என்கிற நிம்மதியோடு "என் பையன் தேடறான்—நா போறேன்... அப்புறமா பாக்கலாம்" என்றபடி திரும்பி நடந்தாள்.

கால்களை அகலஅகலமாய் வைத்து நடந்து வண்டியை நெருங்கினவள் உள்ளே ஏறி உட்கார்ந்து பெருமூச்சொன்றை வெளியிட்டாள். வண்டி கிளம்பினதும் பிள்ளை பக்கம் திரும்பி "நல்ல வேளையா நீ வந்தே இல்லேனா நாயப்பத்தி போர் அடிச்சே என்ன அவ கொன்னுருப்பா..." என்றாள்.

"அது யாரும்மா அத்தனாம் பெரிய காரியத்த அத்தனை ஈஸியா செய்யறது?"

"வேற யாரு. நம்ம ஃப்ளாட்டுக்கு பக்கத்துல இருந்தாளே அந்த கீதா ஆண்டிதான்...சரியான நாய் பைத்தியம்...அது என்ன பீத்தல் நாய்ப் பத்தி...ச்சி...தாங்க முடியல...இரு...இரு...அ து ய ா ரு...பத்மா தானே? பாவம்பா, வண்டிய நிறுத்து...ஏத்திக்கலாம்...போற வழி தானே...தேனாம்பேட்டை ல எறக்கிட்டு போயிடலாம்...'

வண்டி நிற்க, ப்ளாட்பாரத்தில் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த பத்மா திரும்பி பார்த்தாள்.

"நான்தான். வந்து ஏறிக்கோ பத்மா..வழில எறக்கி விடறேன்..."

"தாங்க்ஸ் நளினி... எங்க போயிட்டு வரே... கடைக்கா? பார்த்தா டயர்டா தெரியறியே!"

"ஐயோ அத ஏன் கேக்கறே... தெரியாத்தனமா காய்கறி மார்கெட்ல கீதாகிட்ட நாயப்பத்தி ஒரு கேள்வி கேட்டு இத்தனை நாழி முழிச்சிட்டு, இப்பத்தான் தப்பிச்சேன் பொழைச்சேன்னு ஓடி வரேன்..."



"உன்னை பாத்து ரொம்ப நாளாச்சா, எங்க மாமியார் கூட என்ன அவள கண்ணுலியே காணுமேனு நாலு தரம் பொலம்பிட்டாங்க நளினி..."

"ஆமாம்...ரொம்ப பிஸிதான்...பொது வேலையெல்லாம் இழுத்துப் போட்டுகிட்டு பண்ணறதிலே 24 மணி நேரமும் போத மாட்டேங்குது..."

"இப்போ என்ன பண்ணிகிட்டு இருக்கே"

நளினி சிரித்தாள்.

"எது பண்லேன்னு கேளு...அப்போ ஈஸியா பதில் சொல்லலாம் இப்போ எல்லாம் கவுன்ஸலிங் நிறையா பண்ணிகிட்டு இருக்கேன்..."

பத்மா பதில் கூறாமல் கண்களை இருக்கிக் கொண்டு ஏறிட, நளினி தொடர்ந்தாள்'

"எங்க கிளப்பிலே ஒரு கௌன்ஸல்லிங் விங் ஆரம்பிச்சிருக்கோம். அதிலே யார் வேணா தங்க பிரச்னை, அது எதுவானாலும். எங்ககிட்ட சொல்லலாம்...நாங்க அதுக்கு எப்படி தீர்வு காண்றதுனு சொல்லித் தருவோம்..."

"அப்படிகூட முன்பின் தெரியாதவா கிட்ட மனசு திறந்து பேசுவாங்களா என்ன?"

"ஏன் பேசாம? எவ்வளவு பேர் பிரச்னைகளை யாருகிட்டே சொல்லலாம்னு கிடந்து தவிச்சுகிட்டு இருக்கங்க தெரியுமா? அவங்களுக்கெல்லாம் பொறுமையா தங்க பிரச்னைகளை கேட்க மனுஷங்க வேணும். நா அக்கறையோட கேட்டுப்பேன். அப்புறம், தெரிஞ்ச சைக்கியாட்ரிஸ்டு கிட்ட பேசி, என்ன தீர்வுனு பேஷண்டுகளுக்குத் தெரிவிப்பேன்-இதெல்லாம் ஈஸியான விஷயம்னு நினைக்காதே—பல பிரச்னைகளோட மூலகாரணம் வரவர நாம பொதுவா மனிதர்களா வாழுவே மறந்து விட்டதுதான். சுயநலமான ஒரு வட்டத்துக்குள்ளேயே நாம இயங்க

றோம்...கண்ணுக்கு மஞ்சக் கண்ணாடி போட்டுகிட்டு பிறரை பார்க்கறோம். நமக்கு ஒரு யார்ட்ஸ்டிக் பிறருக்கு ஒரு யார்ட்ஸ்டிக்னு மொத்தத்திலே வால்யூ எல்லாமே மாறிபோச்சு. நா ஒரு நல்ல மனுஷியா வாழணும்ங்கற விழிப்புணர்ச்சியே இல்லாம போச்சு...தினமும் ராத்திரி தூங்கப் போறதுக்கு முன்னே நம்மை நாமே சுய அலசல் செய்துக்கணும்... நம்மகிட்டே உள்ள நல்லதை வளத்துக்கணும்,-,கெட்டதைக் குறைச்சுக்கணும்... அப்போதான் நாம வளர்ச்சியடைவோம்... நாம வளர்ந்தா சமுதாயம் வளரும்...அப்புறம்...''

அவளை முடிக்க விடாமல் பத்மா ஒருவித தவிப்புடன் குறுக்கிட்டாள்.

''என்ன இங்கயே எறக்கிவிட்டுடு...அம்மாவீட்டுக்குப் போகணும்...'' கார் நிற்க பத்மா இறங்கினாள்.

''அப்புறமா வீட்டுக்கு வாயேன்...''

''வரேன்...கண்டிப்பா வரேன்...''

கார் நகர்ந்ததும் பத்மா உதட்டை சுழித்து கழுத்தை வெட்டினாள்.

ப்பா...என்னேரமும் தான், தன் சமூகசேவை, அது, இது...என்றுதான் பேசத் தெரியுமா? அம்மா எப்படி இருக்கிறார்—உன் யோகா க்ளாஸ் எப்படி இருக்கிறது என்று சின்னதாய் ஒரு கேள்வி?

எங்கே?

தற்பெருமை பேசத்தான் பொழுது சரியாய் போய் விடுகிறதே—அப்புறம் அடுத்தவராவது, அவர் பற்றின விசாரிப்பாவது!

எரிச்சல் மாறாமல் யோசனையுடன் நடந்தவள் ''அடடே...நம்ப பத்மா!'' என்கிற ஆச்சர்ய குரல் கேட்டு நின்றாள்.



அம்மா வீட்டுக்கு மாடியில் இருக்கும் மனோ, அழித்தால் சாதாரண சைஸில் இரண்டு ஆட்கள் தாராளமாய் செய்யலாம்.

''என்ன இந்த வெய்யில்ல?''

''அம்மாவ பாக்கலாம்னுதான்...''

மனோ, தமுட்டாய் சிரித்தாள்.

''வீட்டுலேந்தே நடந்து வர்றிங்களா என்ன? அந்த அளவுக்கு உங்க நடை ஆசை வளர்ந்திடுச்சா?''

''நடந்தேதான் வந்திருக்கணும்—தப்பு பண்ணிட்டேன்—என் ப்ரெண்ட் நளினி கார்ல ஏறிக்கயேன்னா, ஏறிகிட்டது தப்பா போச்சு...அது என்ன பேச்சு, மழைகால தவளை மாதிரி வாய் ஓயாம... இவ சோஷியல் சர்வீஸ் பண்ணறதும் போதும், வர்றவங்க போறவங்க கிட்டயெல்லாம் வாய் கிழிய பெருமை பேசறதும் போதும்...ச்சே... கேட்க சகிக்கல... இப்படி கூடவா ஒருத்தி...''

''அட—அந்த பேச்ச விடுங்க பத்மா...எப்ப பாரு இப்படி 'சிக்'குனு 'ட்ரிம்மா' இருக்கிங்களே, இந்த ரகசியத்த எனக்கும் சொல்லித்தரக் கூடாதா?''

''நா 'ட்ரிம்மா' இருக்கறதுக்கு ஏதோ ஒண்ணு மட்டும் காரணம்னு நினைச்சிடாதீங்க மனோ...காலைல தினம் குறைஞ்சபட்சம் 3 கிலோ மீட்டராவது வாக் போறேன், ஸ்பாட் எக்ஸைஸ் பண்றேன், யோகா கிளாஸ் நடத்தறேன், டயட்டை ஒழுங்கா கடை பிடிக்கறேன்... ஆல்ஸோ...''

பத்மா பட்டியல் போட, மனோ வாயைப் பிளந்தாள்.

''தினமும் 3 கிலோ மீட்டரா? கடவுளே...டயர்டா ஆகல?''

''ம்ஹூம். சரியா சொல்லணும்னா சுறுசுறுப்பா கூட இருக்கும்...காலை வீசிப்போட்டு நடந்திட்டு வந்து காபி, டீபினு கண்டதை குடிச்சு வயித்த கெடுத்துக்காம, வெதவெதனு வெந்நீரில எலுமிச்சம்பழம் பிழிஞ்சு, தேன் போட்டு சாப்பிட்டா சுகம்மா இருக்கும்... ருசியா இருக்கறத விடுங்க, உடம்புக்கு எவ்வளவு நல்லது தெரியுமா?''

''நிஜமாவா?''

''பின்னே... பொய்யா சொல்றேன்... காலையிலே வெறும் வயித்திலே வெண்ணீரிலே எலுமிச்சை சாறும், தேனும் கலந்து தினமும் சாப்பிட்டா, அது ரத்தத்தை சுத்தப்படுத்தும் 'ஸ்கின்ன' பளபளன்னு ஆக்கும். உடம்பும் இளைக்கும். அப்புறம் சுத்தமா மத்த சாப்பாட்டு அயிட்டங்கள்ல கொழுப்பை தவிர்க்கறது நல்லது... ஏடு எடுத்துட்ட பால், வெண்ணைய், கடைஞ்ச மோர் எடைய கூட்டவே கூட்டாது... வெண்ணெய், நெய், எண்ணெய் பதார்த்தம்... இதெல்லாம் மூச்... கிட்டே கூட வரக்கூடாது...''

''எனக்கு டயட் எழுதி கொடுத்த டாக்டர் இத்தனை ஸ்ட்ரிக்டா சொல்லலியே பத்மா!''

''ஐய்யய்யோ ரொம்ப அலட்சியமா இருக்காதீங்க மனோ, நீங்க கட்டாயம் இளைக்கணும்... இல்லாட்டி ஆர்த்ரைட்டில், ப்ளட் ப்ரஷர், ஹார்ட் ப்ராப்ளம் எல்லாம் வந்திடும். டயட்ல மட்டும் கரெக்டா இருந்தா போதாது. கண்டிப்பா கூடவே எக்ஸஸையும் செய்யணும் ...நீங்க செய்றீங்களா?''

''இல்லே! அவ்வளவு அவசியம் இல்லேன்னு டாக்டர் நினைச்சிருப்பாரோ என்னவோ...''



''அவசியம் இல்லையா — யார் சொன்னது...! நா எவ்வளவு ஜாக்கிரதையா இருக்கேன்னு சொல்றேன் கேட்டுக்கங்க... தூங்கி எழுந்ததும் 20 நிமிஷம் டி. எம் — அதான் மெடிடேஷன் — பண்ணிட்டுத்தான் மத்த வேலைகளை கவனிப்பேன். காலைல 3 கி.மீ நடந்துட்டு வீட்டுக்குப் போனா, எலுமிச்சை ஜூஸை சாப்பிட்டுட்டு 20 நிமிஷம் ஸ்பாட் எக்ஸஸைஸ் பண்ணுவேன்... 10 மணிக்கு லைட்டா லஞ்ச் சாப்பிட்டுருவேன்... 3 புல்கா, ஒரு கப் டால், கொஞ்சம் வேக வச்ச காய்கறிங்க... ஒரு டம்ளர் மோர் அவ்வளவுதான். அப்புறம் சாயங்காலம் வெறும் டீ ... சாயங்காலம் யோகா கத்துக்க ஸ்டூட்டன்ஸ் வந்திருவாங்க... அவங்களை கவனிச்சிட்டு ராத்திரி திரும்ப சிம்பிளா சாப்பாடு... ஒரு கப் சூப், கொஞ்சமா தயிர் சாதம்... தூங்கறத்துக்கு முன்னால மறுபடி டி.எம்... இந்த டி.எம் செய்யறப்போ என்ன ஆகுதுன்னா... 'பேடா' லெவல்லேந்து, 'ஆல்ஃபா' லெவலுக்கு போய், ஆழ் மனம் தியானத்துல ஈடுபடறப்போ...''

புரியாத விஷயங்களை எல்லாம் அடுக்கடுக்காக பத்மா அடுக்கிக் கொண்டே போக, இனி தாளமுடியாது என்று ஆனது போல மனோ அவளை இடைமறித்தாள்.

''ரொம்ப நேரமா வெயில்ல நிக்கறதுல தலை வலிக்குது... நிதானமா ஒரு நாள் உங்க வீட்டுக்கு வந்து உடம்ப கச்சிதமா வச்சிக்க வேண்டிய விஷயங்களை எல்லாம் கேட்டுத் தெரிஞ்சிக்கறேன்...இப்ப வரட்டுமா?— பஸ் வந்திடுச்சு...''

அவசரமாய்த் திரும்பி அதைவிட அவசரமாய் எதிரில் வந்த பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தவள், கொஞ்சம்ஆஸ்வாசப் படுத்திக் கொண்டு கண்டக்டரிடம் போக வேண்டிய இடத்தைச் சொல்லி பணம் கொடுத்து டிக்கெட்டை பெற்றுக் கொண்டாள்.

பஸ் ஸ்டாப்பில் இறங்கி, நிதானமாய் நடந்து தூரத்து உறவு பெண்மணியான ஸ்யாமளாவின் வீட்டை அடைந்து உள்ளே சென்றபோது ஸ்யாமளா டி.வி. யில் மதிய நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அத்தே... மனோ வந்திருக்கேன்...''

''அடடே... மனோவா! இன்னிக்கி மழைதான் கொட்டப் போகுது... உனக்கு கூட அத்தை ஞாபகம் வந்திடுச்சே!''

மனோ கரிசனத்தோடு சிரித்தாள்.

''அடிக்கடி வரணும்னுதான் நினைச்சிக்கறேன்... ஆன எங்க ஒழியுது, அத்தே... உண்மையைச் சொல்லணும்னா இன்னிக்கு கூட வந்திருக்க மாட்டேன், ஆனா வசமா அந்த 'யோகா போர்' பொம்பளை கிட்ட மாட்டிகிட்டு எப்படிடா தப்பிப்போம்னு முழிச்சுக்கிட்டு இருந்தப்ப, எதிர்ல 11டி பஸ் வந்துச்சு... உங்களை பார்க்கறதோட, அப்படியே அந்த 'போர்' கிட்டேயிருந்து தப்பிக்க இதான் சான்ஸ்னு தோணிச்சு...ஏறி, ஓடியே வந்திட்டேன். நா குண்டுதான்... ஒத்துக்கறேன். அதுக்காக இலகிட்ட லெக்சர் கேக்கணும்னு தலை விதியா என்னா?''

''இப்படி விழுந்தடிச்சுகிட்டு ஓடி வர்ற அளவுக்கு அறுத்திட்டாளா? நிறைய பேர் இப்படித்தான் மனோ... தாங்க பேசறதையே பேசிட்டு இருப்பாங்களே தவிர, அடுத்தவங்களுக்கு இன்ட்ரஸ்ட் இருக்கா, போர் அடிக்காம, பெருமை பீத்திக்காம இருக்கமானு எல்லாம் யோசிக்கவே மாட்டாங்க... சரி, காபி சாப்பிடறயா?''

''காபி கிடக்கட்டும் அத்தே... ஒத்தை தலைவலிக்கு புது மருந்து கண்டுபிடிச்சிருக்கேன் கேக்கறீங்களா? கட்டில்ல மல்லாந்து படுத்துக்கிட்டு தலைய மட்டும் விளிம்புக்கு கிழே தொங்க விட்டு ரத்த ஓட்டம் தலைக்கு



நல்லா போக வைக்கணும்... இப்படி செஞ்சா, பத்தே நிமிஷத்துல தலைவலி இருக்குற எடம் தெரியாம பறந்துடுது... அடி வயித்த கட்டிக்கிட்டு கனமா கணக்குது, குத்து வலி எடுக்குதுனு சொன்னீங்களே... அதுக்கு நா சொன்ன மாதிரி பெருஞ்சீரகத்தை வறுத்து தண்ணி ஊத்தி கொதிக்க வச்சு, வடிகட்டி, அரை ஸ்பூன் நெய் விட்டு குடிச்சுப் பாத்தீங்களா? காலைல தூங்கி எழுந்தா விக்ரம் தம்பி ஓயாம தும்துமுனு வருத்தப்பட்டீங்களே... அதுக்கு...''

சுவர் கோழி போல அடித் தொண்டையில் நிறுத்தாமல் தான் வெகுவாக தேர்ச்சி பெற்றிருக்கும் 'கைவைத்தியத்தை' பற்றி நீளமாய் மனோ பேச ஆரம்பிக்க, ஸ்யாமளாவுக்குள் எரிச்சல் கொப்புளங்கள் வெடித்தன.

சரியான போர்.

தலைக்கனம் பிடித்த கழுத்தறுப்பு...

வந்தோமோ, உங்கள் ரோஜா தோட்டம் ஊர் பிரசித்தி பெற்றதாயிற்றே, அது நன்றாக இருக்கிறதா? விக்ரம் அமெரிக்கா போவது உறுதியாகிவிட்டதா?'— என்கிற ரீதியில் நிறைவாய், பேசினோமா, போனோமா, என்பதெல்லாம் இல்லை.

சதா தன் பீத்தல்... தற்பெருமை... ஏன்தான் பலரும் இப்படியே இருக்கிறார்களோ! சலிப்பு அதிகமாக பீறிட்டுக் கொண்டு எழுந்த கொட்டாவிகளை அடக்கத் தெரியாமல் புடைவைத் தலைப்பால் வாயை பொத்திக் கொண்ட ஸ்யாமளா, மனோ பேசுவதை காதில் வாங்காமல் தோட்டத்து ரோஜாச் செடிகளை வெறிக்க ஆரம்பித்தாள்.

———

# எங்கோ செல்ல ஒரு பாதை

**எ**ங்கோ ஒரு கிராமம், ஒரு சிறுவனின் உறவினர் வாழ்ந்த இடம். எனக்கு அதன் பெயர் தெரியாது. அதைப்பற்றி சாந்தாராம் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால், என் தங்கைக்கோ அவள் குழந்தைகளுக்கோ கூட தெரியுமா என்பது சந்தேகம்தான். நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று யாரும் கருதியிருக்கமாட்டார்கள்.

அந்தப் பெரிய நகரத்துக்கு நான் பல சந்தர்ப்பங்களில் போக வேண்டியிருந்தது. ஒரு நாளைக்கு எட்டு ரூபாய் வாங்கிக்கொண்டு உக்கிராண அறையில் படுக்க இடம் கொடுத்த 'கோலீஸ்' ஹோட்டலைப் பற்றி நினைப்பதை அப்போது நிறுத்தியிருந்தேன். நகரில் இருக்கும்போது என் தங்கையின் இல்லம்தான் என் விலாசம்.

'பைகுல்லா'வில் உள்ள ஹோட்டல் 'அரிஸ்டோகிராட்', என்ன பெரிய நாகரீகத்தை சொந்தம் கொண்டாட முடியும் என்று புரியவில்லை. அதன்மேல் விசேஷமான காதலினால் ஒன்றும் நான் அங்கு தங்க தீர்மானிக்கவில்லை. இரவு முழுவதும் நடத்தப்படுவதாக விளம்பரப்படுத்தப்பட்ட காபரே காட்சிகள்கூட என் முடிவுக்குக் காரணமில்லை. அங்கே கவுண்டரில் கண்ணாடியணிந்த குமாஸ்தா ஒருவன் உண்டு. ஆயிரம் தடவைகள் சந்தித்த விருந்தாளியைப் பார்த்தால்கூட சற்றும் மனமிரங்கி சிரிக்கமாட்டான். எனது பேண்ட்



மடிப்பைவிட அவனது நடை அகலமானது. அவனுக்குப் பின்னால், சிறிய டேபிள் ஒன்றின் முன் சிறிய நாற்காலியில் ஒரு சின்னப்பெண் அமர்ந்திருப்பாள், ஒரு குட்டி டைப்ரைட்டரில் தன் மெல்லிய விரல்களால் சங்கீதம் உருவாக்கிக் கொண்டு. என்னைத் தெரிந்தவன்போல புன்சிரிப்பு ஒன்றை வீசுவாள், என்னவோ எனக்காக விசேஷமாகச் செய்கிற மாதிரி தலை அசைப்பாள். அந்த பிரத்யேகமான புன்சிரிப்பை என் மனசுக்குள் பத்திரப் படுத்தி வைத்துக் கொள்வேன்.

கண்ணாடியணிந்த அந்த குண்டு குமாஸ்தா, இந்த புன்சிரிப்பை கவனித்துவிட்டு, எனக்கு ஒரு ரூம் கொடுப்பான். ரிசர்வேஷன் அட்டையைக்கூட சரிபார்க்காமல், அவன் அட்வான்ஸ் பணம் கேட்கும்போது, காதில் விழாத மாதிரி இருந்துவிடுவேன். ஓயாத பிரயாணங்களினால் நைந்து போயிருந்த எனது பெட்டியை அறையில் வைத்துவிட்டு வெளியே போய்விடுவேன். நான் வசிக்கும் சின்ன ஊரில் மரக்கடைகள் இருக்கும் தெருவின் நிறம்தான் இங்கு காண்வேண்டும் சர்ச்சும் உள்ள தெருவுக்கும் இருக்கிறது, அதே வாசனையும்கூட, நடைபாதை ஒன்று, துருத்திக் கொண்டிருக்கும் கற்களும் சிதறிக்கிடந்த மரத்தூளும் அழுக்குத் தண்ணீருமாக. மாலை வேளைகளில் அங்கு அடுப்புகள் மூட்டப்படும். மரக்கடைகளில் வேலை செய்பவர்கள் அவற்றில் சப்பாத்தி சுடுவார்கள். நடைபாதையில் கயிற்றுக் கட்டில்கள் விரிக்கப்படும். புளிய மரத்தடியில், அழுக்குத் துணிகளைப் போர்த்தியபடி தொழுநோய்க்காரர்கள் காத்திருப்பார்கள். தங்களை நோக்கி எறியப்படுகிற சப்பாத்திகளுக்காக. மசாலா வறுக்கும் வாசனை அந்த இடம் பூராவும் வியாபித்திருக்கும்.

ஒரு பழைய சிவப்புக்கட்டிடத்தில் மூன்று குறுகலான படிக்கட்டுகளை ஏறிக் கடந்துதான் என் தங்கையின் பிளாட்டை அடையமுடியும். ஒரே ஒரு படுக்கை அறை

கொண்ட பிளாட். ஒரு நாளைக்கு ஆறு அல்லது ஏழு தடவைகள் மாடி ஏறி இறங்க வேண்டியிருப்பதால் அவள் சதைபோடவே வாய்ப்பில்லை.

அவளது எல்லா குழந்தைகளுக்கும் வட இந்தியப் பெயர்கள்தான். பிறந்ததிலிருந்தே அவர்களுக்குப் பெயர் உண்டுதான்; நான்தான் கவனம் செலுத்தவில்லை. என்னைப் பொறுத்தவரை, அவர்கள் பனித்துளியோடு விரித்த இதழ்களைக் கொண்ட அழகான இளம்சிகப்பு மொட்டுக்கள்தான். சின்னவர்களாக இருந்தபோது அவர்களை நான் தூக்கியதேயில்லை. ஆச்சர்யத்தோடு அவர்களைப் பார்த்திருப்பேன். அவர்களை பெயர் சொல்லிக் கூப்பிட வேண்டிவந்தால், தவறாகக் குறிப்பிட்டு விடுவேன். என் தங்கைதான் என்னைத் திருத்துவாள்.

குழந்தைகள் தங்கள் பெற்றோருடனும் என்னுடனும் ஆங்கிலத்திலேயே பேசினார்கள். ஆனாலும், அவர்கள் பேச்சில், பனைமரங்களையும், குளங்களையும், கேரளாவின் சின்ன ஊர்களையும் நினைவுபடுத்தும் அத்தை மாமாக்களின் செல்லப்பெயர்கள் வெளிப்படும். நான் மெதுவாக மலையாளம் பேசினால் புரிந்துகொள்வார்கள். அந்தச் சின்ன வேலையாள் சாந்தாராமுக்கு கொஞ்சம் தான் ஹிந்தி தெரியும் என் தங்கையிடமும் அவள் குழந்தைகளிடமும் அவன் மராத்தியே பேசினான்.

மொழி எனக்கு எப்போதும் ஒரு பிரச்னையாகவே இருந்து வந்திருக்கிறது, எங்கேயும்.

ஒருமுறை நான் அங்கு போயிருந்தபோது, என் தங்கை குரல் கொடுத்ததும் சாந்தாராம்தான் டீ கொண்டு வந்தான். ஒரு மாணவனாக நான் அப்போது டைரக்டர் சாந்தாராமின் படங்களில் விருப்பம் கொண்டிருந்தேன். எனவே, அந்தப் பையனது பெயரை மறக்கவே முடியவில்லை. கருத்த உடம்பும் காபிக் கலர் உடையுமாக,



இருட்டில் சரியாகப் புலப்படக் கூட மாட்டான். ஆனால் அவன் சிரிக்கும்போது, பற்கள் பளிச்சிடும். வாயிலிருந்து வண்ணக் காகிதத்தை இழுக்கும் மாஜிக் நிபுணரைப் போல, அவன் உதிர்க்கும் வார்த்தைகளுக்கு, அவனது நடையையும் வேலையையும் விட அதிகமான வேகம் இருந்தது.

''எங்கே பிடித்தாய் இவனை?''

''ஒரு மாசம் கஷ்டப்பட்டேன். ஒத்தாசைக்கு ஆள் இல்லாம நான் என்ன செய்வேன்? அந்த வயசான ஆயா துணி துவைக்க மட்டும் வருவா. இவன் சின்னப்பையன், ஜெயேஷ் வயசுதான். ஆனாக்கூட கொஞ்சம் உதவியாத் தான் இருக்கு''

காய்கறியையும் இறைச்சியையும் அரிந்து வைப்பான் அவன். அதோடு வெளியே போய் சாமான்களும் வாங்கி வருவான். சப்பாத்தி இட்டு சுட்டு வைப்பான்'

என் தங்கைக்கு எப்போதும் வேலையிருக்கும். மூன்று குழந்தைகளும், எந்நேரமும் கணவரைப் பார்க்க வருகிற விருந்தாளிகளுமாய். எத்தனை வேலை இருந்தாலும் அந்தச் சின்ன வரவேற்பறையில் வந்து உட்கார்ந்து கொண்டு என்னோடு பேசுவாள். என்னமோ உலகத்தில் உள்ள நேரமெல்லாம் தன்னுடையதுதான் என்கிற மாதிரி.

என்னைவிட அவள் ஒன்றரை வயசு சின்னவள்; ஆனால் அவள் என் முன் வந்து நின்றால், நான் நெளியத் துவங்குவேன்.

அந்தத் தேன் நிறமான பெண் சிந்திய புன்னகையின் வலிமையில் எனக்கு ஒரு ரூம் கிடைத்தது, இப்போது எனக்கு பணம் தேவை. இதற்காகத் தங்கையின் வீட்டுக்குப் போனபோதுதான், குடும்பத்தில் அந்தப் புதிய

அங்கத்தினரைப் பார்த்தேன், ஒரு பழைய ஊதா நிறப் புடவை அணிந்து, தோய்த்த துணிகளை நீண்ட மூங்கில் கழியில் காயப்போடும் அந்த வேலைக்காரப் பெண் மணியை குடும்பத்தின் அங்கத்தினராகவே நான் ஒப்புக்கொண்டதில்லை.

''எங்கேயிருந்து வரான் இவன்?''

''இங்க பக்கத்துலேர்ந்துதான். வேலைக்கு ஆள் கிடைக்க எவ்வளவு சிரமாயிருக்கு! நம்ப ஊர்லேருந்து யாரைக் கூட்டிக்கிட்டு வந்தாலும் ஒரு மாசத்துல திரும்பப் போயிடணும்னு அவசரப்படறாங்க. ரயில்? சார்ஜுக்கே எவ்வளவு சொவழிக்க வேண்டியிருக்கு இந்தப் பையன் இங்கதான் பக்கத்லயிருந்து வரான்''

நகரத்தில் ஏதோ ஒரு இடத்தைக் குறிப்பிட்டாள் தங்கை.

அவன் கேட்டுக்கொண்டிருந்தான். கதவுக்குப் பின்னாலிருந்து ஒரே மூச்சில் என்னமோ சொன்னான் பிறகு, என்னைப் பார்த்து தன் பளபளப்பான பற்களைக் காட்டி சிரித்தான்.

''ம்?''

''அவன் என்ன சொல்றான்னா...'' என்று தங்கை மொழிபெயர்த்தாள். ''தனக்கு இந்த ஊர் இல்லை, 'சத்தாரா'வுல ஒரு கிராமம்னு சொல்றான்''

''நாம பேசினத அவன் எப்படி புரிஞ்சிகிட்டான்?''

''இந்தப் பயல் ரொம்ப புத்திசாலி போலருக்கு!''

தங்கையின் கணவர் நேரம் கழித்துத்தான் வருவார். உலகத்தின் அறிவுப் பிரச்னைகளின் பாரம் முழுவதையும் சுமந்து, சின்ன வயசிலேயே அவருக்கு வழுக்கை விழுந்து விட்டது, அவர் இருந்தாலும்கூட நாங்கள் அதிகம் பேசிக்



கொண்டதில்லை. என குறைகளையும் மீறி என்னை அவருக்குப் பிடித்திருந்தது, அதனால்தான், எங்களுக்கிடையில் வார்த்தைகளுக்கு அவசியமில்லாமல் போயிற்று

குழந்தைகள் உள்ளே வரும்போது ஒரு பெரிய குழப்பமே இருக்கும். புத்தகப் — பைகளைத் தூக்கியெறிந்து விட்டு அவர்கள் என்னை சூழ்ந்துகொள்ளும்போது அசையாமல் உணர்வில்லாத முகத்தைக் காட்ட நான் ரொம்ப கவனம் செலுத்த வேண்டியிருக்கும். தீவிர எதிர்ப்போடு உலகுக்கு எதிராக திரும்பிவிட்ட என் முகத்தில ஒரு சந்தோஷ அலை வந்து மோதும். இனம் புரியாத துயரங்களின் உறைகளை அடித்துச் செல்லும் ஓர் உணர்வு அலை.

நான் முயன்றால்கூட அதை அழிக்க முடியாது. நல்லதொரு நடிகனை நான் பார்த்ததேயில்லை. (தங்கை என் புகைப்படத்தை மறைத்துவிட்டிருந்தாள், 'வெளியில் எல்லாமே இருட்டாக இருக்கிறது!' என்று முணுமுணுத்தபடி விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொள்ளும் ஒரு தோல்வியுற்ற காதலனாக நான் இருக்கும் படம். அந்த ஆலபம் என் கையில் அகப்பட்டால் புகைப்படத்தை நான் சுக்கலாகக் கிழித்து விடுவேன் என்பது அவளுக்குத் தெரியும்.)

குழந்தைகள் பேச ஆரம்பிக்கிறார்கள். இரண்டு நாளைக்கு முன், பூனாவில் ஒரு ஆலமரத்தின் கீழ், நண்பர்களுடன் மணிக்கணக்கில் கஞ்சா அடித்ததெல்லாம் மறந்தே போகிறது. மூத்தின நாள், தன் சுயபரிதாபக் கதைகளால் என் மாலை நேரத்தைக் கெடுத்த பேராசிரியையும் மறந்து போகிறேன்.

என் துயரங்களை மறக்க நான் குடித்திருந்த நாட்டுச் சாராயத்தை வாந்தியெடுத்ததும் ஏற்பட்ட களைப்பைக் கூட மறந்து போகிறேன். தீவின் நிழலில் எனது கருமையான விளக்கொளியைக் கண்டு பிடித்திருந்தேன்.

என் தங்கையின் குழந்தைகளை, அவர்களது அலங்காரமான வட இந்தியப் பெயர்களை வைத்து நான் கூப்பிட்டதேயில்லை. பெயர் சொல்லித்தான் கூப்பிட வேண்டும் என்ற அவசியம் நேர்ந்தபோது, அவர்களுக்குப் பட்டப் பெயர்களை வைத்தேன். மூத்தவன் எனக்கு தீப்பெட்டி வாங்கிக் கொடுப்பவன், தங்கையின் எச்சரிக்கையை மீறி நான் தரையில் வீசியெறியும் பீடித்துண்டுகளைப் பொறுக்கி எடுத்துப் போடுபவன், சில நேரங்களில் எனக்குத் துணையாக இருப்பவன், எனது 'செக்ரட்டரி' ஜெயேஷ் ஆனான். அவன் அதை 'ஜெயேஷ்' என்று உச்சரிப்பான்

சின்னவன் நரேஷ், கயிற்றில் தொங்கும் தொட்டிகளில் செடிகளை வளர்ப்பவன், அதுவும் மூன்றாவது மாடியில், 'கிருஷி பண்டிட்' ஆனான்.

பெண், அனுஜா, ஒரு கவிதையைப் போலிருந்தாள். அதனால் அவளை 'கவிதா' என்று அழைத்தேன்.

செக்ரட்டரிக்கும், கிருஷி பண்டிட்டுக்கும், கிரிக்கெட் புட்பால், மல்யுத்தம், காமிக் புத்தகங்கள் ஆகியவற்றில் எக்கச்சக்க ஆர்வம் இருந்தது. கிருஷி பண்டிட் நரேஷ் சொன்னான்.

''பாருங்க மாமா. சாந்தாராமோட அப்பா தான் தாராசிங் வீட்டுத் தோட்டக்காரர்''

''எந்த தாராசிங்?''

''உங்களுக்கு ஒண்ணுமே தெரியாது மாமா! மல்யுத்த வீரர் தாராசிங். அந்த 'பிளாக் டெவில்' தெரியுமா, அவன்...''

''அவனும் ஒரு மல்யுத்தக்காரனா?''

''யாரு 'பிளாக் டெவிலா'? கடவுளே!''

''இல்லே, இந்தப் பையனோட அப்பா''



''நான் அவனைப் பார்த்ததில்லே. அம்மாதான் பார்த்திருக்கா.''

மற்ற எல்லாரையும் பற்றி சொன்னது போலவே அவனைப்பற்றியும் சொன்னாள் என் தங்கை. ''ரொம்பப் பாவம் அவன். அவன்தான் இவனைக் கூட்டிட்டு வந்தான்''

தங்கை ராத்திரி சாப்பாடு போடும்போது சாந்தாராம் அடுப்படியிலேயே நிற்பான். அவன் தானாகவே வந்து அனுஜாவின் தட்டில் சூடாய் ஒரு சப்பாத்தியைப் போட்டுவிட்டால் அவள் கத்துவாள். ''நான் யாருனு நினைச்சே? தாராசிங்கா? முட்டாளே...''

அவன் அப்போதும் சிரிப்பான்.

ஒவ்வொரு தரம் இங்கு நான் வரும்போதும் மற்ற செய்திகளோடு சாந்தாராமை பற்றிய புது விபரங்களும் கிடைக்கும். இப்போது அவனுக்கு ஆங்கிலம் புரிகிறது. ஒரு சில வரிகள் சமாளித்துப் பேசக்கூட செய்கிறான்.

சில நாட்கள், மாலை வேளைகளில் என் தங்கை குழந்தைகளை அழைத்துக் கொண்டு வெளியே போய் விடுவாள், வீட்டை என் பொறுப்பில் விட்டுவிட்டு. என்னைக் கட்டுப்பாட்டில் வைக்க அதுவும் ஒரு தந்திரம்; வெளியே செல்வதை நான் விரும்புவதேயில்லை என்று அவளுக்குத் தெரியும். இதுமாதிரி சமயங்களில் என்னிடம் சொல்வான். ''உனக்கு ஏதாவது வேணுன்னா சாந்தாராமைக் கேளு.''

''ஐயா, டீ வேணுமா?''

''ஆமா''

அதை நான் பருகும்போது கேட்பான், ''இன்னும் கொஞ்சம் சர்க்கரை வேணுமாய்யா?''

''வேணாம்''

நகரத்தில் என் வேலைகளை முடித்துவிட்டால், பயணப்படி, கட்டணம் எல்லாம் கிடைத்து என்னிடம் பணப் புழக்கம் அதிகமாகிவிடும். தங்கையிடமிருந்து கடன் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவேன். அப்புறம், அந்த கண்ணாடியணிந்த ஹோட்டல் வரவேற்பு கிளார்க் முன்னால் ரொம்ப தைரியமாக இரவும் பகலும் நடைபோட முடியும். தங்கையின் வீட்டில் இரவு சாப்பிட்டுவிட்டுத்தான் ஹோட்டலுக்குப் படுக்க வருவேன். சாப்பாட்டுக்கு முன் அனுப்பவே மாட்டாள். அதனாலேயே, ஹோட்டல் கவுண்டருக்குப் பின்னால் தெரியும் அந்த இனிய புன்சிரிப்பை இழந்து விடுவேன்.

சில சமயங்களில் தங்கையிடம் கடன் தொகையைத் திருப்பித் தரும்போது இழந்துவிட்ட அந்த புன்சிரிப்புகளுக்கான கட்டணத்தைக் கழித்துக்கொள்ளலாம் போல தோன்றும். ஆனால் அதைச் சொல்வதற்கான தைரியமே இருந்ததில்லை.

காரணம் ரொம்ப சாதாரணமானது. சில சமயம், என்னை அவள் விமர்சித்து அல்லது ஆலோசனை கூறும்போது, அவள் எனக்கு அம்மாவாகி விடுவாள்.

''நீ எழுதறதெல்லாம் நிஜமா?''

''உன் வீட்டுக்காரரும்தான் எழுதறார். அவரக் கேளு. வயித்துப் பொழைப்புக்காக எத்தனையோ எழுத வேண்டியிருக்கு'' இதோடு தப்பித்துக் கொள்வேன்.

அவள் தனியாக இருக்கும்போது பார்க்கவே பயப்படுவேன்.

''உன்னைப் பத்தி நம்ப ஊர்ல என்னென்னவோ பேசிக்கறாங்களே?''

''என்ன சொல்றாங்க?'' ஆச்சர்யப்படுகிற மாதிரி பாசாங்கு செய்வேன்.



''ஊர்லேருந்து லெட்டர்லாம் வரும். அவங்க சொல்றதெல்லாம்...''

என்னிடம் தயாராய் பதில் உண்டு. ''அவங்க சொல்லாதது என்ன பாக்கி இருக்கு''

மௌனம். ஒரு மெல்லிய நிழல் அவள் முகத்தில் பரவும். அவள் தலை தாழ்ந்து போகும்.

''நீ கவனமா இருக்கணும்''

''கவலைப்படாதே. நான் என்ன சொல்றேன்னா... கவலைப்படாதே'' தொடர்பில்லாத வார்த்தைகள். சொற்கள் எங்கே? ''கவலைப் படாதே. பாரு, நான் 'டெக்கான் குவீன்'இல் வரும்போது...கவலைப்படாதே''

நகரத்தில் மூச்சடைக்கும்போல இருந்தால் கிராமத்துக்கு ஓடிவிடுவேன், ஓய்வுக்காக. மணிகள் நாட்களாகும்போது, திரும்பிவிடுவேன். அறுபது மைல் இடைவெளியில் அமைந்துள்ள இந்த இரு இடங்களுக்கும் ஓடி ஓடி களைக்கும்போது, இந்தப் பெரிய நகரத்துக்கு வந்துவிடுவேன். சின்ன நகரத்தில் தானே பெருக்கும் அவதூறுகள் என்னை இங்கு வந்து பற்றிக்கொள்ளுமா என்று அவளுக்குத் தெரியவில்லை. அங்குள்ள மௌனமான முகங்களில் தென்படும் கேட்கப்படாத கேள்விகள் இந்த நகரத்தை அடைய முடியாது.

''நான் கிளம்பறேன்''

''போறதுக்கு முன்ன சாப்பிட்டுட்டுப் போ''

''அலமாரில ஏதாவது இருக்கா?''

சாப்பாட்டுக்கு முன்னால் இரண்டே இரண்டு 'பெக்' தான் எனக்குத் தேவை. இப்போதைக்கு அவ்வளவுதான் தேவை. அவளுக்குத் தெரியாமல் அவள் கணவன் கொடுக்கும் பெரிய 'பெக்' ஒரு போனஸ்தான்! மிகுந்து போய்விட்ட சாப்பாட்டைப் பற்றி புகார் சொல்வான்

அவன். தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக்கொள்ளும் குழந்தைகளின் சத்தமும், பேரொலியும்; வெளியே படியிறங்கும்போது அதை என் மனசுக்குள் சங்கீதமாகப் பூட்டி வைப்பேன். அந்த குறுகலான நடைபாதையை ஒட்டி நடக்கத் துவங்குவேன், கயிற்றுக்கட்டில்களில் படுத்துறங்கும் வேலையாட்களுக்கும் அழுக்குத் துணிப் பைகளோடு இருக்கும் தொழுநோய்க்காரர்களுக்கும் இடையில்.

என் பயணங்கள் பல இடங்களுக்கும் பரவத் துவங்கியதும், நான் இங்கு வருவதற்கு நீண்ட நாளாயிற்று.

என் தங்கையிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அவர்கள் கனவு நனவாயிற்று. ''எங்க சொந்த ஃப்ளாட்டுக்குக் குடிபோகப் போறோம். இனிமே உனக்கு இங்க தங்கறதுல பிரச்னை இருக்காது''

அதாவது, இனிமேல் ஹோட்டல் ரூமைத் தேடிக்கொண்டு அலைய வேண்டாம்.

அடுத்தமுறை அலுவலக விஷயமாக ஏர்போர்ட்டில், பெரிய வயிறும் தசையில் வலியுமாகப் போய் இறங்கியபோது, செக்ரட்டரி, அதாவது என் பெரிய மருமகன் என்னை வரவேற்க நின்றிருந்தான். ஜனவரியில் நான் எதிர்பார்த்ததைவிட அதிகக் குளிராகவே இருந்தது. ஒரு நாய்க்குட்டி, 'சிண்டு' என்று பெயர், வீட்டுக்கு வந்திருந்தது. ''அப்பாவோட நண்பர் சியான் மாமாதான் இதைக் குடுத்தார். நரேஷ் ஒரு கிளி வெச்சிருக்கான். தப்லா வாசிக்கக் கத்துக்கறான். நீங்க ஏன் இளைச்சுப் போயிட்டீங்க மாமா?''

சாமான்களின் அடையாளச் சீட்டோடு கூட்டத்தில் வேகமாகப் புகுந்து புறப்படுகிறான் அவன். இதிலெல்லாம் பெரிய 'எக்ஸ்பர்ட்' ஆகிவிட்டான் அவன். 'கன்வேயர் பெல்ட்'டில் வைக்கப்படும் முன்பே என்



பையை அவனால் கண்டு பிடித்துவிட முடிகிறது. உள்ளே நுழையும் போது அதே பழைய கேள்வி என்னை எதிர்கொள்ளும். இந்தப் பையை மாற்ற இன்னுமா நேரம் வரவில்லை?

அவளிடம் சொல்ல முடியாது. 'கன்வேயர் பெல்ட்'டுகளிலும் 'ட்ராலி'களிலும் செல்கையில் நிகழும் மோதல்களையும் மீறி நான் தாங்கிக் கொள்ள வேண்டிய சுமை இன்னொன்றும் இருக்கிறது. உனக்கு ஒன்றரை வருஷங்களுக்கு முன்பே என்னிடம் ஒருவரால் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு சுமை.

அந்தக் கதையை ஞாபகப்படுத்திக் கொள்ள அவன் விரும்புவதில்லை. என் அம்மா என்னை கருவுற்றிருந்தபோது, மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தாள். குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடாது என்று டாக்டர்கள் கண்டிப்பாக சொல்லிவிட்டார்களாம். தொலைவிலிருந்து வந்த டாக்டர்களும் அதையே தான் சொன்னார்களாம். பிறகு கருவைக் கலைக்க மருந்துகள் வந்தன. கணவனை இழந்த அந்தப் பிரபல பெண் 'சீட்டா'வின் மூலிகை மருந்து முதல், நகரின் மருந்துக்கடை இன்ஜெக்ஷன் வரை இதில் அடக்கம். நான் பிழைத்து விட்டேன். அம்மாவும் பிழைத்து விட்டாள், அவள் வேண்டிக் கொள்ளாவிட்டாலும்கூட, அதனால்தான் அப்புறம் பிறந்த இந்தத் தங்கையும் அவள் மூலம் வந்த குழந்தைகளும் இன்று உயிரோடு இருப்பது சாத்தியமாயிருக்கிறது.

உள்ளூர் கோவில்களில் நாங்கள் ஒன்றாகப் பிரார்த்தனை செய்ததில்லை? குருவாயூரில் விதைகளைத் தூவவில்லை? கோவில்களைப் பற்றிய கருத்துக்கள் சில எனக்கு இன்னமும் உண்டு. ஆகவே உள் அறைகளைக் கறைப்படுத்தாமல் வெளியே ஏதாவது இடம் கிடைத்தால் எனக்குப் போதும்.

புது ஃபிளாட்டுக்குப் போனால் நான் என்ன கொடுக்க வேண்டும்? குழந்தைகளுக்காக நான் எதுவுமே கொண்டு வருவதில்லை. அவளுக்கும் இல்லை. இப்போது? பெட்டியில் சில பழைய துணிகள் மட்டுமே வைத்திருக்கிறேன். 'செக்ரட்டரி' கூட, நாகரீக உணர்வு கொண்டவன், என் தலைகிராப்பு, ஷூ, பேண்டின் அகலம் பற்றியெல்லாம் தீர்மானமான அபிப்ராயம் வைத்திருக்கிறான். எல்லாரும் கவனிக்காதது போல பாசாங்கு செய்வார்கள், ஏனென்றால் அவர்களது விமர்சனத்தில் வித்தியாசம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

என்ன கொடுக்கலாம்? நாளை இரவு எல்லாருக்கும் வெளியே நல்ல சாப்பாடு? கடைசியில் நான் ஒரு முடிவுக்கு வந்தேன். நான் கடன் ஏதும் கேட்கப் போவதில்லை. அதுவே போதும்.

அது ஒரு கீழ்த்தள ஃப்ளாட். கதவுக்கு வெளியே இரும்புக் கூண்டில் ஒரு கிளி. மாடிக்குக் குறுக்காக அது சட்டென பறந்தபோது குழந்தைகள் ஓடி அதைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். யாரோ அதை நிராதரவாக விட்டுவிட்டுப் போயிருந்தார்கள். நரேஷ் அதை புண்படுத்தாமல் பிடித்து கூண்டில் அடைத்திருந்தான்.

ஆம், என் அருமை 'கிருஷி பண்டிட்'. இந்தக் கூண்டிலிருந்து...

''இல்லே, மாமா, அது போகாது. நான் வெளியே விட்டாக்கூட அது திரும்ப வந்துடும் பாருங்க''

'கிருஷி பண்டிட்' பற்றி அனுஜா சொன்னாள்: ''இந்த முட்டாளோட தோட்டத்தப் பாருங்க மாமா''

வீட்டுக்குப் பின்னால் ஒரு துண்டு நிலம் வேலி போடப்பட்டு இருந்தது. அங்கு, ஒரு சின்ன பந்தலில், பாகல் கொடி படர்ந்திருந்தது. கொஞ்சம் கீரை, ஒரு



வாழை மரம், அதில் ஒரு குலை வேறு! அந்தச் சின்ன 'கிருஷி பண்டிட்', எப்படி ஒவ்வொன்றும் பயிர் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகிறது என்று விளக்கினான்.

''இருங்க, மாமா டிரெஸ் மாத்திக்கட்டும்!'' என்று குழந்தைகளைத் திட்டினாள் தங்கை. ''சாந்தாராம்!''

கையில் கோதுமை மாவு ஒட்டியிருக்க சாந்தாராம் சமையலறையிலிருந்து வெளிப்பட்டான். அவனிடம் ஒரு மாற்றமும் இல்லை. குளிருக்காக முழங்கைவரை நீண்ட ஒரு 'கோட்'டைத் தவிர.

அனுஜா முணுமுணுத்தாள்: ''ரொம்ப வருஷத்துக்கு முன்னால அப்பா ரஷ்யா போனப்போ தைச்சுக்கிட்ட கோட் அது!''

சாந்தாராமின் பற்கள் பளபளத்தன. மொழி இன்றி, செய்கையும் இன்றி என்னை வரவேற்றான்.

''இவன் இன்னுமா இருக்கான்?''

''ஆமா. எல்லா வேலையும் செய்றான். சாம்பார் செய்ய, அவியல்கூட செய்ய சொல்லிக் குடுத்திருக்கேன். புட்டுக்குழாய் கொண்டு வந்திருக்கியா?''

(கடவுளே! அந்தப் புட்டுக் குழாய்! கடிதத்தில் அவள் அதைக் குறிப்பிட்டிருந்தாள். மலிவான ஒரு பொருள். நான் அதைக்கூட வாங்கவில்லை).

''மறந்துட்டேன். அடுத்த தரம் கொண்டு வரேன்''

அவள் சாந்தாராமை டீ கொண்டு வரச் சொன்னாள்.

பேச்சு புட்டுக்குழாயைவிட்டுப் போனால் தேவலை போலிருந்தது.

''இவனோட அப்பா இங்க வர்றானா?''

''பாவம். ஒவ்வொரு மாசமும் சாந்தாராமோட சம்பளத்த வாங்கிக்க வருவான். இவன் சொல்றான், அப்பாகிட்ட குடுக்காம சேமிக்கணும்னு. அந்த அப்பா வந்து கேட்கும்போது நான் என்ன செய்ய முடியும்?''

அனுஜா சொன்னாள்: ''இதக் கேளுங்க, மாமா. இவன் ஒரு அசடு. எதுக்குப் பணம்னு நான் கேட்டேன். இவனுக்கு பேண்ட், சர்ட் ஒண்ணும் தேவையில்லை. தீபாவளிக்கு நாங்க வாங்கிக் குடுத்த துணியக்கூட இவன் போட்டுக்கவே இல்லே''

குடும்பத்தின் புது அங்கத்தினரான 'சின்டு'வைக் கொஞ்சியபடி ஜெயேஷ் உள்ளே தலை நீட்டினான். ''இவனுக்கு கிராமத்துக்குப் போகணுமாம். அங்கே யாருமே இல்லே...முட்டாள்''

காலனியில் ஒரு விளையாட்டு விழா நடந்தது. விடுமுறையாக இருந்தும் கூட குழந்தைகள் வீட்டை விட்டு வெளியிலேயே இருந்தார்கள். விழாவுக்கான ஏற்பாடுகள் துவங்கின. ஜெயேஷ் விளையாட்டுப் பயிற்சிப்பொறுப்பை ஏற்றிருந்தான். பலூன் சுடும் விளையாட்டை ஏற்பாடு செய்திருந்தான். எங்கிருந்தோ ஒரு துப்பாக்கியை எடுத்து வைத்திருந்தான், சிப்பாய் கலகத்தின் போதோ என்னவோ யாரோ விட்டுவிட்டுப்போயிருந்த துப்பாக்கி, (சரித்திரத்தில் புலியான அனுஜாவுக்கு நன்றி!) எனக்கு துப்பாக்கியை இயக்கிக் காட்டுவதற்காக, மேற்கத்திய ஆங்கில கதைப் புத்தகங்களைப் படிக்கிற ஜெயேஷ் 'யெல்லோ ஸ்டோன் கெல்லி' மாதிரியோ அல்லது வைல்ட்பில் உறிக்காக்' போன்றோ ஒரு போஸ் கொடுத்தபடி துப்பாக்கியால் குறி பார்த்தான். தலையிலிருந்து பழுப்பு முடிக் கற்றை வழிந்தது. அவன் வயதுக்கு நல்ல உயரமாகவே இருந்தான். துப்பாக்கியின் குதிரையை அவன் அழுத்தியபோது, மூன்று துண்டங்களாகியது—துப்பாக்கி.



அவசரமாகத் தேவைப்படும் பொருள் எதையாவது எடுத்துப் போக மற்றவர்களோடு இந்தக் குழந்தைகளும் வீட்டுக்குள் வருவார்கள். இவற்றில் 'கர்பா' நடனத்துக்குத் தேவையான குச்சி, 'பைட் பைபர்' கதையில் வரும் ஏமாற்றம் மேயருக்கு வேண்டிய ஒட்டு மீசை, அல்லது 'கொலைகாரனின்' மழைக்கோட்டு எல்லாம் அடங்கும். நான் வழக்கமாகப் படுக்கும் சோபாவின் கீழ் தான் இவை குவித்து வைக்கப்பட்டிருந்தன. தின்பண்டங்கள் விற்கும் கடைகளுக்கான பொறுப்பை என் தங்கை ஏற்றிருந்தாள். எல்லாம் சரியாக இருக்கிறதா என்று சரிபார்க்க எப்போதாவது அவள் வீட்டுக்கு வருவாள். அதற்குள் வெளியிலிருந்து அழைப்பு வந்துவிடும் அவளுக்கு.

சில சமயங்களில் ரொம்பப் பரிதாபமான விஷயங்களை என்னிடம் சொல்வார்கள். மிகுந்த சிரமத்தோடு அதிக நேரம் கியூவில் நின்று வாங்கிய சினிமா டிக்கெட் ஒன்றை, பாக்கெட்டிலிருந்து மற்ற பஸ் டிக்கெட்டுகளோடு சேர்த்து தவறுதலாக நரேஷ் கிழித்துவிட்டான். ''கிழிஞ்ச பேப்பரை ஒட்டி எடுத்திட்டுப்போனா என்னை உள்ளே விடுவாங்களா மாமா?''

''போய்த்தான் பாரேன்''

''அதெல்லாம் விடமாட்டாங்க. அவங்க இவனை மாதிரி முட்டாள் இல்லே'' என்றாள் அனுஜா.

''நான் போவேன்.''

''பந்தயம்?'' என்று அந்த 'கர்பா' நடனப்பெண் கேட்டாள். தன் பேச்சுக்களை எப்போதும் இப்படியே முடிப்பாள் அவள். எனக்குத் தெரிந்தவரை அவள் பந்தயத்தை யாருமே ஏற்றதில்லை.

சாந்தாராம் வருவதும் போவதுமாக இருந்தான். பெரியவர்களுடன் என் தங்கையின் கணவரும் பிஸியாக இருந்தார், பெரிய மனிதர்களை வரவேற்றுக்கொண்டு.

யாருக்கும் தெரியால் சாந்தாராம் எனக்கு பீர் வாங்கிக் கொடுப்பான். என் இடுப்பு பாக்கெட்டில் ஒரு தட்டையான ஃபிளாஸ்கில் இருக்கும் விஸ்கிக்கு ஏற்ற தினுசில் டம்ளரையும் ஐஸ் துண்டங்களையும் தருவான். சில சமயங்களில், தன் அண்ணாவின் உடம்பு வலிக்கு நல்லதென்று என் தங்கை பிரத்யேகமாக சொல்லிவிட்டுப் போகும் கரும்புச்சாறு அல்லது பார்லிகூட கொடுப்பான்.

நான் பீர் அல்லது விஸ்கி குடிப்பதை யாரிடமும் சொல்லாதே என்று அவனிடம் எப்படிச் சொல்வது? ஆனால் அவன் கண்களில் மின்னும் ஒளியும் அவனது சிரிப்பில் விரியும் மகிழ்ச்சியும் எனக்கு எப்போதும் தைரியத்தையே அளித்தன.

திறந்திருந்த வாசலை நோக்கியபடி சோபாவின் விளிம்பில் என் முகவாயை அழுத்தி உட்கார்ந்தவாறு, பல்வேறு மொழிகளில் குரல்கள் ததும்பும் வெளிமுற்றத்தைப் பார்த்தேன்.

நான் அமைதியாக இருக்கிறேன். என்னால் சிரிக்க முடிகிறது. இந்த மாதிரி எனக்குள்ளேயே சிரித்துக் கொள்ள முடிகிற தருணங்களில், சாந்தாராமுடன் இந்தி, ஆங்கிலம், தமிழ், சில சமயம் மலையாளத்தில் கூட பேச முடிகிறது.

அவனது சிரிப்பு எங்கும் பரவியிருந்தது.

''கைஸா ஹை, சாந்தாராம்?''

''அச்சா ஹை, சாப்''

சந்தோஷமாக இருக்கிறதா?

நல்லது.

மாலை நிகழ்ச்சி துவங்கும் முன் உடைமாற்றவென அவசரமாக உள்ளே வந்த என் தங்கை கேட்டாள்.



''நீ வரலே? இங்க நீ வந்திருக்கேன்னு சில பேர்கிட்ட நான் சொல்லியிருக்கேன்''

''நீ கிளம்பு. நான் வரேன்''

''உன் சர்ட்டும், பேண்டும் படுக்கைல வெச்சிருக்கேன். அதை போட்டுக்கோ''

''சரி''

அவள் முகத்தில் சந்தேகம் பரவியது. ''ஏதாவது குடிச்சியா என்ன?''

''எல்லாம் சரியா இருக்கு. நீ கிளம்பு. விழா பிரமாதமா நடக்கட்டும். பாட்டில்ல இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கு, உன் புருஷன் உள்ளே வெச்சிட்டுப் போயிருக்கார். அதைக் கொண்டு வா. இங்க ஒரே குளிரா இருக்கு''

மஞ்சள் புடவை சுற்றப்பட்ட அந்த சிவந்த ஒல்லியான உடம்புக்குள் புயல் ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது.

''நீ போ, நான் வரேன்.''

நான் போகவில்லை, வழக்கம்போல. எனக்கு பீர் வாங்கிக் கொடுக்க சாந்தாராமைக்கூட காணவில்லை.

காலனியில் கார்களை நிறுத்துமிடம் காலி செய்யப்பட்டு அங்கு போடப்பட்டிருந்த மேடையின்முன் எல்லாரும் குழுமியிருந்தார்கள். நான் சிண்டு (நாய்) வுடன் பேச ஆரம்பித்தேன். அப்புறம், கூண்டிலிருந்த கிளியுடன் பேசினேன். பிறகு கூட்டத்திலிருந்து தள்ளி இருண்ட ஓரமாக சிண்டுவுடன் நடந்தேன். விழாவில் பேச்சு முடிந்து குழந்தைகள் பாடிக்கொண்டிருந்தார்கள். நரேஷ் தபேலா வாசித்துக் கொண்டிருந்தான். என் மருமகன் நன்றாகவே வாசிக்கிறான். எல்லாருமே

நன்றாக இருக்கிறார்கள். இந்தக் குடும்பக் கதையில் எதற்கும் உபயோகமில்லாத ஒரு கதாபாத்திரத்தை உருவாக்குவது யார்? அறிவே இல்லாத அந்தக் கதாசிரியன் யார்?

மேடையில் தார்ப்பாயினால் மூடப்பட்ட இந்தப் பகுதியில் யாரும் இல்லை. யாரும் என்னைப் பார்க்க மாட்டார்கள். அருகே போனபோது, திரையில் ஓட்டை வழியாக உள்ளே பார்க்க ஒரு தலை எழும்புவது தெரிந்தது. முழங்கால்வரை நீண்ட கோட் அணிந்த ஒரு நிழல் உருவம். அவன் கைவிரல்கள் தாளமிட்டபடி இருந்தன. மிக அருகே போனபிறகும் அவன் என்னை கவனிக்கவில்லை. தன் தலையை வெளியே இழுத்துக் கொள்ளவுமில்லை. அவன் கால்களை சீண்டு முகர்ந்து பார்த்ததைக்கூட அவன் உணரவில்லை.

நான் என் இடத்துக்குத் திரும்பினேன்.

தங்கையும் அவள் குழந்தைகளும் வருவதற்கு வெகு நேரம் முன்பே சாந்தாராம் திரும்பிவிட்டான். காரணமேயில்லாமல் அவன் சோர்வாகக் காணப்பட்டான்.

''ஐயா, சப்பாத்தி?''

நான் சிரித்துவிட்டு மலையாளத்தில் சொன்னேன் ''அவங்க வரட்டும்''. ஏராளமான செய்கைகளை உபயோகித்தேன். அவை இல்லாமலேகூட அவன் புரிந்து கொள்வான்.

அடுத்த நாள் நகரில் எனக்கு நிறைய வேலை இருந்தது—விவாதங்கள். கணக்குகளை சரிபார்த்தல். மூன்று மணி நேர சோர்வுக்குப் பிறகு, அந்தப் பழக்கமான 'கோவா'ப் பெண்ணின் தனிப்பட்ட 'பாரு'க்குப் போனேன், என் மனசை சுத்தமாக்கிக்கொள்ள. ஆச்சர்யம், அந்த அம்மாள் என்னை அடையாளம் புரிந்துகொண்டாள். ஒரு வருஷம் முன்பு சிகப்பு ஸ்வெட்டர் அணிந்து என்னுடன் வந்த நண்பரைக்கூட



நினைவு வைத்திருந்தாள். உலகத்தின்மீது பாசமுள்ளவனாக ஆனேன், குறிப்பிட்ட காரணம் ஒன்றுமில்லாமல்.

பலமணி நேரத்துக்குப்பிறகு, பொழுது சாயும் வேளையில் வீட்டுக்குப்போய் இறங்கினேன், டாக்ஸியில். என் சட்டைப்பையில் பணம் இருந்தது; என் நரம்புகளில் கிளர்ச்சி!

''குழந்தைகள் எங்கே? நரேஷ், இங்கே வா''

அவனை தபேலா வாசிக்கச் சொன்னேன்.

''மாமா. சாந்தாராம் கூட அதை வாசிப்பான்''

''எப்பிடி?''

''யாருமே அவனுக்கு சொல்லித் தரலை''

பைத்தியக்காரத்தனமான நேரம். என் தங்கை கவனிக்கிறாள் என்பது தெரிந்தது. இருந்தும் இந்த மாதிரி பைத்தியக்கார நேரங்களில்தான் நான் உலகம் நினைப்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. சமையல் பாத்திரங்கள் பரப்பி வைக்கப்பட்டன.

''கதவை சாத்து''

தங்கை கணவர் வர இன்னும் நிறைய நேரம் இருக்கிறது. ''இரண்டு பேரும் உட்காருங்கள். இந்தியில் இதற்கு என்ன சொல்வீர்கள்? ஜுகல்பந்தி? போட்டி, டுயட்? வா சாந்தாராம், வா நரேஷ். முதலில் நரேஷ். இல்லை...இல்லை...திரும்ப வாசி. வெரிகுட். அதையே வாசி. அப்படித்தான். மனசையும் ஆத்மாவையும் அதில் வெளிப்படுத்து. ஆகட்டும். வேகமாக...இன்னும் வேகமாக...ஜெயிப்பவருக்கு பரிசு உண்டு''



20220
3737262

நான் சிரித்தேன். கையில் கிடைத்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து, தயக்கத்துடன் நீண்ட இரு சின்னக் கைகளில் திணித்தேன்; ''பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள், இரண்டு பேரும். இதுதான் என் ஆசீர்வாதம். பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். கதைப் புத்தக ஹீரோ எங்கே? தாயத்து மாதிரி பத்திரப் படுத்துங்கள். அதிருஷ்ட தாயத்து. 'ஃபேண்டம்' என்ற பலசாலியின் அடையாளம்''

அழும்வரை சிரித்தேன். தள்ளாடியபடி சோபாவை நோக்கி நான் நடந்தபோது, என் தங்கை சிரிக்காமல் அழுதாள்.

''கவலைப்படாதே''

யாரும் கவலைப்பட க்கூடாது. யாருமே. நாய் சிண்டு கவலைப்படாது. கவலைப்படாதே, நான் சொல்கிறேன் கவலைப்படாதே!

இரவில் எப்போதோ விழித்துக் கொண்டபோது ரொம்ப தாகமாக இருந்தது. நான் ஏதாவது சாப்பிட்டேனோ? தலை வலித்தது. எல்லாரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள் என்னால் அழ முடியவில்லை. சமையலறைக்குப்போய் ஃபிரிஜ்ஜைத் திறந்தேன். அதன் உள்ளிருந்து வந்த லேசான வெளிச்சம் தூங்கிக் கொண்டிருக்கும் சாந்தாராமின் முகத்தில் விழக்கூடிய சாத்தியக் கூறை நான் நினைத்துப் பார்க்கவில்லை.

''ஐயா''

''நீ போய் தூங்கு''

மறுபடி பச்சைத் தண்ணீரைக் குடித்தேன். குளிர்ந்த நீர்த்தாரைகள் என் மார்புக்குள் இறங்கின.

இருட்டில் வரவேற்பறையை நோக்கி நான் நடந்தபோது சாந்தாராம் உடன் வந்தான்...



''ஐயா என் கிராமம் சத்தாரவுல இருக்கு''

''அங்க உனக்கு யாரு இருக்காங்க?''

''யாருமே இல்லே. அங்கே ஒரு கோவில் இருக்கு, என் பாட்டி சொல்லியிருக்கா. பெரிய கோவில். கோவில்ல மகா காளி இருக்கா.''

நான் என்ன சொல்ல வேண்டும்?

''போய்த் தூங்கு சாந்தாராம். தூங்கப்போ''

தாங்கமுடியாமல் கனத்த தலையை சோபாவில் சாய்ந்தேன். மறுபடி இருட்டாக இருந்தது.

காலையில், இளம்குரல்களின் விவாதங்களையும் சத்தத்தையும் கேட்டு விழித்துக் கொண்டேன். நான் கண்களைத் திறக்கவில்லை, ஏதோ நடந்திருக்கிறது. அதனால் தைரியமாக எழுந்திருக்க முடிந்தது.

''ஏன்? என்ன ஆச்ச?''

முந்தின இரவுக்கான விளக்கம் எதனையும் நான் கொடுக்கத் தேவையில்லை. அதிருஷ்டம். ஏதோ புதுசாக நடந்திருக்கிறது, ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு முறையும் ஏதோ புதுசாக நடந்து கொண்டே இருக்கட்டும்.

''மாமா, சாந்தாராமைக் காணோம்''

வழக்கம்போல, தங்கையின் கணவர் மௌனமாக இருந்தார். தங்கையும் அவள் குழந்தைகளும் அக்கம்பக்கத்தில் தேடப் போனார்கள் யாரும் அவனைப் பார்க்கவில்லை. தன் துணிகளை அவன் எடுத்துப் போகவில்லை. வீட்டிலிருந்து எதையுமே எடுத்துப்போகவில்லை, பணத்தைக்கூட.

மாலையில் ஜெயேஷ் அவன் வீட்டைக் கண்டுபிடித்தான். சாந்தாராம் அங்கு இல்லை, அவன் எங்கு

போனான் என்று அவனது அம்மாவுக்கோ மாமாவுக்கோ தெரியவில்லை.

இரவு வெகுநேரம் கழித்து, டர்பனும் தொங்கிய நரைமீசையுமாக இருந்த ஒல்லியான கருப்பு மனிதன் வந்தான்.

நரேஷ் கிசுகிசுத்தான் ''தாராசிங்கோட தோட்டக்காரன். சாந்தாராமோட அப்பா''

சமையலறை கதவுக்குப் பின் நின்று என் தங்கையுடன் வெகு நேரம் பேசிவிட்டுப் போனான் அவன்.

எல்லா வேலையும் முடிந்ததும் தங்கை டைனிங் டேபிள் அருகே வந்து உட்காருவாள், அலங்காரப் பொருள்கள் இருக்கும் அலமாரியில் பத்திரமாக வைத்திருக்கும் கண்ணாடியை எடுத்து மூக்கில் அணிந்தவாறு. அதைத் தொடர்ந்து, அரை மணி அல்லது முக்கால் மணிக்கு அவள் தோழிகளுடன் சாதாரண வீட்டு விஷயங்கள் பற்றிய உரையாடல் போனில் நடைபெறும். பிறகு, கடிதங்கள் எழுதுவாள்.

சாந்தாரம் வேலையை விட்டு அப்போதான் நின்றிருந்ததால், தோழிகள் அனைவருக்கும் போன் செய்து விஷயத்தைத் தெரிவிப்பாள் என்று அஞ்சினேன். தங்கை கணவர் சீக்கிரம் வந்து விடவேண்டும் என்று வேண்டினேன்.. அது நடக்கவில்லை.

''சாந்தாராமோட அப்பா என்ன சொன்னான்?''

''பாவம் அவனுக்கு எதுவுமே தெரியலே. நன்றியில்லாத பிள்ளை. அவனுக்காக எவ்வளவு செஞ்சிருக்கேன்.''

''எதையும் எடுத்திட்டுப் போகலையே''

''அவன் சத்தாராவுக்குப் போயிருப்பான்னு அவன் அப்பா கூட சொன்னான்''

''ம்''



''அவனுக்கு அங்க யாருமே, இல்லே, அவன் அப்பா சொன்னான். சாந்தாராமுக்குப் பைத்தியம். சத்தாரால எங்கேயிருந்தோ அவன் பாட்டி வந்திருக்கா. அவ்வளவு தான் அவனுக்குத் தெரியும். ஆனாக்கூட எப்பவும் கிராமத்தப் பத்தியே பேசுவான். முன்னபின்ன தெரியாத எடத்துல அவன் என்ன செய்வான்? அதான் அவன் அப்பா பயப்படறான்''

அனுஜா இன்னமும் தூங்கவில்லை. உள்ளேயிருந்து கத்தினான் ''முட்டாள்''

சத்தாராவுல ஒரு சின்ன கிராமம். ஒரு பெரிய கோவில்.

இரண்டு மூன்று மாசத்துக்குப் பின் வந்த கடிதம் என்னைப் பற்றி அவள் சமீபத்தில் கேள்விப்பட்ட செய்தியோடு துவங்கியிருந்தது. என்னைப்பற்றிய சமீபத்திய அக்கப்போரின் நட்சத்திரம் யார்? அவள் கோபமாக இருந்தாள். மூன்றாம் பக்கம் வருவதற்குள் தணிந்து போயிருந்தாள். சின்னத் தங்கையாக ஆகிவிட்டிருந்தாள். குழந்தைகளைப்பற்றிய செய்திகளை எழுதும்போது, கிளி பறந்து விட்டதையும், சாந்தாராம் திரும்பிவந்து விட்டதையும் குறிப்பிட்டிருந்தாள்.

ஆதிநாளைய இலக்கியங்களைப் பற்றி பேசுவதில் எனக்கொன்றும் பிரமாத ஈடுபாடு இல்லை, என்றாலும் பணம் கிடைக்கிறதே! பேசுவது அத்தனையும் எனக்கோ என்னைக் கேட்பவர்களுக்கோ புரியாத விஷயங்கள்— அர்த்தமற்ற வார்த்தைகளின் நடனம். நிகழ்ச்சிக்குப் பிறகு நானும் என்னைக் கேட்பவர்களும் சோர்வடைந்ததும் என்னை விட்டுவிடுவார்கள். ஆனாலும், இந்தப் பேச்சுக்களுக்கு ஒப்புக் கொள்வதன் மூலம் தங்கையையும் அவள் குழந்தைகளையும் என்னால் பார்க்க முடிந்ததே!

எட்டு மணி நேரத்துக்குப் பின் நான் பம்பாயில் இருந்தேன். காரில் என்னோடு ஆதிவாசி கருத்துக்களைக் கொண்ட இன்னொரு இலக்கியவாதியும் பயணித்ததால் வழியில், நான் 'ஆண்டியின் பார்'ல் எட்டிப் பார்க்கவில்லை.

நான் ஃப்ளாட்டுக்குப் போனபோது குழந்தைகள் அங்கு இல்லை. காலனியின் விளையாட்டு மைதானத்திலும் நான் அவர்களைப் பார்க்கவில்லை. வருகிறேன் என்று அவர்களிடம் நான் தெரிவித்திருக்கவில்லை. அழைப்பு மணியை அழுத்தினேன். ஒரு பெண், இரண்டு மூக்குத்திகளை இருபுறமும் அணிந்தவள், கதவை திறந்தாள்.

''எல்லாரும் எங்க'''

அவள் மராத்தி மொழியில் ஏதோ சொன்னாள். அப்புறம் இந்தியில். கடந்த சில மணி நேரமாக இலக்கிய கூட்டத்துக்காக போட்ட வேஷத்தினால் கோபமும் களைப்புமாக நான் புகைந்து கொண்டிருந்தேன். 'பாய்' என்றும் 'ஊப்பர் லோக்' என்றும் எவ்வளவோ சொன்னாள் அவள். ஏதோ தோழியின் மாடி வீட்டில் இருந்தாள். என் தங்கை.

''கூப்பிடு அவளை'' அவளைத் தாண்டிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தேன். நைந்து போன பெட்டியை சோபாவில் விட்டெறிந்தேன். ஷூக்களை அவிழ்த்து உதைத்துத் தள்ளினேன். சோபா மெத்தையில் சாய்ந்து கொண்டு, கட்டளையிட்டேன்.

''பேனைப் போடு''

அந்த வேலைக்காரப் பெண் அழுதுவிடுவாள் என்று நினைத்தேன். அல்லது கூச்சலிடலாம். அவள் திகைத்துப் போய் ஊமையாய் நின்று கொண்டிருக்கையில், என் தங்கை உள்ளே நுழைந்தாள்.



''குழந்தைகள் எங்கே?''

''விளையாட்டுப் பயிற்சிக்காக ஒருத்தன் போயிருக்கான். உன் பெரிய மருமான் ஒரு ஃபிரெண்டோட கோவா போயிருக்கான்''

''அனுஜா எங்கே?''

''அவ கொஞ்ச நாளைக்கு தன் ஃபிரெண்டோட தங்கிட்டு வர போயிருக்கா. உனக்கு நிலூஃபர் தெரியாது?''

நிலூஃபர்!.

எனக்கு எதுவும் தெரியாது. புரிகிறதா? எனக்கு எதுவும் தெரியாது எனக்கு ஒரு விஷயம் தான் தெரியும். சொல்கிறேன் கேட்டுக்கொள், எனக்கு எல்லாரும் இங்கே இருக்க வேண்டும். புரிகிறதா? இருபத்தி இரண்டு மணி நேரம் பஸ்ஸில் பிரயாணித்தேன். அதற்கு முன், எட்டு மணி நேரம் ரயிலில். அப்புறம் அந்த வெத்து வேட்டு இலக்கியவாதிகள்!

கடவுளே! இப்பிடியா பேசுகிறேன்? குரலைத் தழைக்க எவ்வளவு முயன்றேனோ அவ்வளவு உயர்ந்தது அது கட்டுப்பாடில்லாமல்.

எதனையும் உணர்ந்து கொள்ளாமல் வெறித்தாள் தங்கை.

''புரிகிறதா?''

''சாந்தாராம் எங்கே? இந்தப் பொண்ணு யாரு? ஏன் ரெண்டு மூக்குத்தி போட்டுக்கிட்டிருக்கா? இதெல்லாம் மூக்குத்தியா?''

அவள் பதில் சொல்லவில்லை. எனக்கு சோர்வாக இருந்தது. பெருமூச்சு விட்டபடி தலையை உலுக்கிக் கொண்டேன்.

''சாந்தாராம்''

அவள் ரொம்ப மென்மையாக சொன்னாள் : ''சாந்தாராம் இங்க இல்ல. உனக்கு என்ன வேணும்? டீ, இல்லேன்னா ஏதாவது ஜில்லுனு? சாந்தாராம் வந்துட்டு திரும்பவும் ஓடிப் போயிட்டான்''

''எங்கே?''

''அவன் கிராமத்துக்கா இருக்கும்''

நான் அமைதியானேன். அவளுக்கு நிம்மதியாயிற்று. குரலை உயர்த்த வேண்டி வந்ததற்காக வருத்தப் பட்டேன். களைத்துப்போன என் முகத்தை, ஏதோ புது மனிதனைப் பார்க்கிற தினுசில் அவள் வெறித்துக் கொண்டு நின்றிருந்த போது, நான் அவளை அருகில் அழைத்தேன். சின்ன வயசில் அம்மா அவளை புளிய விளாறால் அடித்த போது, ''அழாதே, சொல்றேன் கேளு... அழாதே'' என்று சமாதானப்படுத்தின விதத்தில் வருத்தம் தொனிக்கும் குரலில் நீட்டி முழக்கி ஆறுதல் சொல்லி அவள் முன்னெற்றியில் முத்தமிட வேண்டும் போல இருந்தது.

என்னால் முடியாது. அமைதியான மாதிரி பாசாங்கு செய்து சிரிக்கவாவது முயற்சிக்கிறேன். நான் எப்போதும் சொல்கிறாற் போல், வருத்தத்தில் சிரிக்கப் பார்க்க வேண்டும்.

என் தூக்க மாத்திரைகளை எங்கே வைத்துவிட்டேன்? பெட்டியிலா அல்லது என் பேண்ட் பாக்கெட்டிலா? யோசித்து முடிப்பதற்குள், என்னை எரிச்சலடைய வைக்



காத விஷயத்தைத் தொட்டு விட்ட சந்தோஷத்துடன் தங்கை சொன்னாள் :

''சாந்தாராம் இப்பிடி ஊர் சுத்திகிட்டிருக்கறதப் பார்த்து யாரோ வந்து சொன்னதும், அவன் அப்பா இங்க திரும்ப அழைச்சுகிட்டு வந்தான். இந்த தடவை எல்லாரும் இருக்கறப்பவே அவன் போயிட்டான். ஒரு சண்டையுமில்ல. யாரும் அவனை திட்டவுமில்லே. எதை யும் அவன் எடுத்துக்கிட்டும் போகல்லே. அப்பிடியே சுவரேறி தொத்திகிட்டுப் போயிட்டான். ஜெயேஷ் மெயின் ரோடு வரைக்கும் போய் பார்த்தான். அவனைக் காணல்லே... பாவம்''

அவன் நிறுத்தாமல் ஓடுவான். அவனுக்குத்தெரியாது. அவன் ஓடிக் கொண்டே இருப்பான் சந்தாராவுக்கு. அங்கே ஒரு கிராமத்துக்கு. அங்கே கோவிலுக்குப் போகும் பாதைக்கு... அப்புறம்......

மலையாள மொழியில் — எம்.டி. வாசுதேவன் நாயர்
தமிழில் — சிவசங்கரி.

—

# 8. வீழ்ச்சி

அந்த பழைய பிளாட்பாரத்தில் கூட்டமே இல்லை. புதிய பிளாட்பாரம் கட்டப்பட்டதும், கடைகளும் சிற்றுண்டிச்சாலைகளும் சில்லறைப் பொருட்களைக் கூவி விற்பவர்களும் அங்கு போய் விட்டிருந்தார்கள். சற்றுமுன் கீழே இறக்கி வைக்கப்பட்டிருந்த மீன் கூடைகளிலிருந்து ஒழுகிய கருந்திரவம், உடைந்த சிமெண்ட் தரையில் குளமாகத் தேங்கியிருந்தது. அதைச் சுற்றி ஈக்கள் வட்டமடித்துக் கொண்டிருந்தன.

அருகிலிருந்த கல் பெஞ்சில் காக்கி சட்டையணிந்த ஒருவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். ஒரு ரயில்வே பணியாள் போலும். தொலைவில் இருந்த பெஞ்சுகள் எல்லாம் காலியாகக் கிடந்தன.

பாஸஞ்சர் ரயில் வழக்கமாக பழைய பிளாட்பாரத்தில்தான் நிற்கும். இங்கு ஏறுபவர்கள் கொஞ்சம் பேர்தான். இவன் நினைத்திருந்தால் வெயிட்டிங் ரூமிலேயே தங்கியிருந்திருக்கலாம். இல்லை. காலியான பெஞ்சின் மீது பெட்டியை வைத்துவிட்டு, இரும்புத்தூண் அருகில் சிகரெட் பிடித்தவாறு நிற்பதையே இவன் விரும்பினான்.

பிளாட்பாரத்தில் யாரையும் இவனுக்குத் தெரியவில்லை. அதிர்ஷ்டம்தான். தெரிந்தவர்கள் யாராவது இருந்திருந்தால் வரிசையாய் கேள்விக்கணைகள் இவன் மீது தொடுக்கப்பட்டிருக்கும்.



''எங்கே போகிறாய்? எப்போது திரும்பி வருவாய்? ஏதாவது முக்கியமான விசேஷமா?''

எவ்வளவுதான் பிஸியாக இருந்தாலும் அடுத்தவரின் விவகாரங்களைத் தெரிந்து கொள்வதில் மனிதர்கள் ஆர்வமுள்ளவராகவே இருக்கிறார்கள்.

எதிர்பக்க பிளாட்பாரத்தில், மெயிலில் ஏறவிருந்தவர்களின் இரைச்சலும் சத்தமும் அதிகமாகிக் கொண்டே இருந்தன.

சிரமப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றான் இவன். யாராவது பார்த்துவிட்டால்தான் என்ன? ரயிலில் பயணிக்கத் துவங்கியது நேற்றோ இன்றோ அல்ல. வழியில் ஏதாவது ஒருஸ்டேஷனில் உறவினர் எவரையாவது சந்திக்கவோ, பேசவோ அல்லது உடன் பயணம் செய்யவோ கூட நேரலாம். அதில் ஆச்சர்யப்பட ஏதுமில்லை, சந்தேகப்படவும் ஏதுமில்லை.

தேவையானால் உண்மையையே சொல்லிவிடலாம். ''சரஸ்வதி என் அத்தை பெண். பஞ்சாயத்து ஆபீஸ்ல கிளார்க்கா இருக்கா''

தேவையானால்...

முன்பு ஒரு தடவை அவளோடு ரயிலில் பயணம் செய்ய வேண்டி வந்தது.

இவன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது மாமா அதே ஊருக்கு மாற்றலாகி வந்தார். சரஸ்வதி படிப்பை முடித்திருந்த வருஷம் அது. கோவிலுக்குப் போகும் வழியில் ஜட்கா ஸ்டாண்டு தாண்டி ஒரு குறுகலான சந்தில், 'ஷெட்டி'க்களின் வீடுகளின் இடையே ஒரு இரண்டு மாடிக் கட்டிடத்தில் அவர்கள் வசித்து வந்தார்கள்.

அந்த சமயத்தில்தான் இவன், உதடுகளில் சினிமாப் பாடல்களுடனும் மனசில் சியாமளா மேனனைப் பற்றிய பெருமைக் கனவுகளுடனும் திரிந்து கொண்டிருந்தான். போதாததற்கு, சாயங்காலமானால் முகத்தைக் கழுவி பௌடர் அடித்துக் கொண்டு சைக்கிளில் கிளம்பி விடுவான்.

''எங்க போறே?''

''ஒ, சும்மா இப்பிடி சுத்றதான்''

மாமா வெறும் பியூனாகத்தான் இருந்தார், அதனால் ''மாமா வீட்டுக்குப் போறேன்'' என்று தைரியமாகச் சொல்ல முடியவில்லை.

எட்டு மணிவாக்கில்தான் ஹாஸ்ட்டலுக்குத் திரும்புவான்.

எழு மணிக்கு மாமா வீடு திரும்பி விடுவார்.

காக்கி சட்டையைக் கழற்றிக் கொண்டே மனைவியிடம் கேட்பார்—''யார் வந்திருக்காங்க?''

''ராஜன்தான்''

ராஜனுக்குத் தொண்டை வறண்டு போகும். வெறும் பியூனாக இருந்தாலும் கூட, மாமா ஒரு முரட்டு ஆசாமி. என்ன சொல்வாரோ? இதுவரைக்கும் இல்லாத பாசம் திடீர்னு எப்போலேருந்து வந்தது இந்தப் பயலுக்கு என்பாரோ?

இரவு சாப்பிட்டுவிட்டுப் போ என்று அத்தைஅழைப்பாள், ஆனாலும் ராஜன் தங்கிவிட மாட்டான். அத்தையிடமும் சந்திரனிடமும் விடைபெற்றுக் கிளம்பி விடுவான். தலை சுவற்றைத் தொட்டுக் கொண்டிருக்க, சோர்வடைந்த கண்கள் எங்கோ வெறித்திருக்க, அகலமான அந்த அறையில் தரையில் உடம்பை நீட்டிப் படுத்



திருப்பார் மாமா. பானையிலிருந்து வெளிப்படும் புகை அறை முழுக்க மேகம்போல சூழ்ந்திருக்கும்.

நடையைக் கடக்கும்போது ஓரப்பார்வை ஒன்றை வீசுவான் ராஜன்.

ஒரு சந்தர்ப்பத்தில், குழந்தைகள் அவர்களது கிராமத்துக் கோயில் உற்சவத்துக்குப் போக விரும்பினார்கள். மாமாவால் அவர்களை அழைத்துப்போக முடியவில்லை. தேங்காய் எண்ணைப் பறிமுதல் வழக்கு ஒன்றில் சாட்சி சொல்ல வேண்டி அழைக்கப்பட்டிருந்ததால், பிறகு அத்தை ஒரு யோசனை சொன்னாள்.

''சனி, ஞாயிறு ராஜனுக்கு லீவுதானே? குழந்தைகளை கிராமத்துக்கு அவன் அழைச்சிட்டுப் போயிட்டு வரட்டுமே!'' என்றாள்.

இவன் முதலில் தயங்கினான். இந்த அழுக்குப் பசங்களோடு எப்படித் துணைக்குப் போவது? ஆனால், முடியாது என்று சொல்ல முடியவில்லை. அதோடு, சரஸுவும் வருவதாக இருந்தாள். சியாமளா, தன் அழகாக வகிடெடுக்கப்பட்டு ரோஜாச் சூடிய தலைமுடியோடும் மைதீட்டிய கண்களோடும் இவன் தியானத்தை ஆக்ரமித்திருந்த காலம் அது என்றாலும், அதில் சரஸுவும் இருந்தாள். மலரத் துவங்கியிருந்த சரஸு.

நான்கு குழந்தைகளும் ஊருக்குப் போகத் தயாரானார்கள். ஆனால் புறப்படும் நேரத்தில் சரஸு மட்டுமே கிளம்பினாள்.

இருவரும் ஜட்காவில் ஏறும்போது குடும்பத்தில் மற்றவர்கள் எல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். தான் எவ்வளவு யோக்கியன் என்று காட்டிக் கொள்வதற்காக, சரஸுவிடமிருந்து தள்ளியே உட்கார்ந்து கொண்டான்.

ரயில்வே ஸ்டேஷனில் டிக்கெட் வாங்கப் போனபோது ஒரு யோசனை உதித்தது. மாமா கொடுத்ததைத் தவிர இவனது சொந்தப் பணம் வேறு கொஞ்சம் இருந்தது. இரண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்கினான்.

மூன்று மணி நேர பயணத்தின்போது இவர்கள் இருவர் மட்டும் தனியாக இருந்தார்கள். ஒளி கூலிங் கிளாஸ் வழியாக, சரஸு பார்த்துவிடாதவண்ணம் அவள் கடைக்கண் பார்வை பார்த்துக் கொண்டும், அடுத்தடுத்து சிகரெட்டுக்களைப் புகைத்துக் கொண்டும், கருமையாக் கப்பட்டிருந்த மீசையை விரல்களால் நீவி விட்டுக் கொண்டும் கம்பீரமாகப் போஸ் கொடுத்தபடி அமர்ந்திருந்தான் இவன். ரயில் நின்ற ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஜன்னல் வழியாகப் பார்த்தான். பிளாட் பாரத்தில் யாராவது தெரிந்தவர்கள் நிற்கிறார்களா?

இப்போதுகூட அது நினைவுக்கு வந்தது. ஜன்ன லருகில் நின்றிருந்த உயரமான சிவந்த ரயில்வே அலுவலர் ஒருவன் சரஸுவை முறைத்துப் பார்த்துக் கொண்டி ருந்தான். அவளை தோலுரித்து நிர்வாணமாக்கும் பார்வை. அவன் முதலில் ராஜாவைப் பார்த்திருக்க வில்லை. பிறகு பார்த்ததும், தூரத்தில் வெள்ளை கோட் அணிந்து நின்றிருந்த மனிதனைப் பார்த்து வெட்கச் சிரிப்பொன்றை சிரித்து, ஏதோ முணுமுணுத்தபடி பின்னுக்குப் போனான்.

ஆனால் இன்று சரஸுவுடன் பயணிக்கப் போவதை யாரும் பார்த்து விடக்கூடாதே என்று வேண்டிக் கொண்டான்.

ரயில் வந்து நின்றது. வெறிச்சோடிக்கிடந்த பிளாட் பாரத்தில் ஒரு கணம் உயிர் வந்தது. பெட்டியைக் கையில் தூக்கிக் கொண்டு, ஏதேனும் காலி இடம் இருக்கிறதா என்று பார்த்தபடி நடந்தான் இவன். மூன்று முதல் வகுப்புப் பெட்டிகளும் காலியாகக் கிடந்தன.



அவற்றுள் ஒன்றினுள் நுழைந்து, கதவைச் சார்த்தி, பெட்டியைத திறந்து, முதல்நாள் வாங்கின புத்தகம் ஒன்றைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டான். சீட்டில் தூசிதட்டி பின்னால் சாய்ந்தபடி உட்கார்ந்தான்.

நிம்மதியே வா. இப்போது யாராவது வந்தால், வெகு தொலைவிலிருந்து வருவதாகச் சொல்லிவிடலாம். இல்லை, எதற்காகவும் இல்லை. யாருக்காகவும் இல்லை.

இறங்கலையா நீங்க?

திருச்சூர் வரை போகணும்.

வேலையா?

ஆமா, கொஞ்சம். அத்தோட 'மூலன்குன்னத்துக் காவு' ஆஸ்பத்திரில எங்கக் குடும்பத்துப் பொண்ணு ஒண்ணு...

ஓ!

வழியில அவங்கள்லாம் காத்துகிட்டு இருப்பாங்க.

இந்தப் பொய்யெல்லாம் எதற்காகவும் இல்லை. தினம் எவ்வளவு பொய் சொல்கிறோம்? எவ்வளவு சீக்கிரம் விளக்கங்களும், நியாயப்படுத்துதல்களும், மழுப் பல்களும் மனசுக்குள் உதித்து விடுகின்றன!

உண்மையில், நல்ல கற்பனைதான்!

ஒருமுறை கல்லூரி பத்திரிகையில் இவன் ஒரு கட்டுரை எழுதினான். ஒரு எழுத்தாளராகக்கூட இவன் வந்திருக்க முடியும். ஆனால், என்ன லாபம்? கல்லூரியில் இவனுடைய செட்டில் நான்கு பேர்கள் இருந்தார்கள். லைப்ரரியிலிருந்து புத்தகங்கள் வாங்கிப் படிப்பார்கள். லெக்சர்களை கவனமாகக் கேட்பார்கள். நால்வரில், ராமச்சந்திரன் டீச்சராக ஆனான். ஷேராடி வக்கீலா னான்; தேர்தலில் நின்று தோற்றான். வாசு மட்டுமே

எழுத்தாளரானான். ஆனால் அதனால் என்ன லாபம்? குளிக்காமல், ஷேவ் செய்து கொள்ளாமல், அழுக்கான உடைகளோடு, மொத்த உலகத்தின் மீதும் கொண்ட கோபம் முகத்தில் பிரதிபலிக்கத் திரிந்து கொண்டிருந்தான். ராஜன், ஒரு மரம் அறுக்கும் ஆலையின் சொந்தக்காரனாக, நான்கு குமாஸ்தாக்களும், இரண்டு டெலிபோன்களுமாக இருந்த போது, வாசு ஏதோ நன்கொடைக்காக வந்திருக்கிறான்.

நகரம் பின்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. கழிவுப் பொருள் அடங்கிய பீப்பாய்களும், மர லாரிகளும் மூடி வைக்கப்பட்ட கார்களும் பைத்தியக்கார மனிதர்களும் புழங்கிய நகரம். தந்திக்கம்பங்களின் கீழ் விலைமாதுக்களும், மறைவான இடங்களில் சாராய வியாபாரிகளும், ஏர்-கன்டிஷண்ட் அறைகளில் 'மகாத்மா'க்களும் செழித்த நகரம். புழுக்கள் நிறைந்து நுரைத்துக் கெட்டியாக மிதந்த தவிட்டுக் கழுநீரைப் போல் மனிதர்கள் பொங்கிப் பெருகியிருந்தார்ரான். எவ்வளவுக்கெவ்வளவு அதைவிட்டு விலகி இருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நிம்மதி. ஆனால் அதைவிட்டு ஒரேயடியாய் விலகிப் போனாலும் கஷ்டம்தான். திரும்பிப் போவது சந்தோஷமான விஷயம், மறுபடி தப்பித்துப் போய்விட வேண்டும் என்கிற ஆவல் எழும் நிமிஷம் வரை. நகரம் என்பது பெண்டாட்டியைப் போல. விட்டுவிட்டு ஓடிப் போய் விட்டாலும், கடைசியில் திரும்பி வந்துதான் ஆக வேண்டும்.

தென்னம்மட்டைகள் புதைக்கப்பட்டு, குவித்து வைக்கப்பட்டிருந்த கருப்பு மண் கொண்ட ஆற்றங்கரையைப் பார்த்தான் இவன். ஆறு கடலைச் சேரும் இடத்தை மரக்கட்டைகள் மறைத்தன. மத்தியான வெயிலில் பளபளத்த வெட்டவெளியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். ஒரு தரம், பன்னிரண்டு வருஷங்



களுக்கு முன், நகரத்துக்கு முதல் முதலாக வந்தபோது ரயில்வே லைனை ஒட்டி கூரை வேய்ந்த குடிசைகள் இருந்தன.

இவன் அப்போது ஒரு பண்டக சாலையில் கணக்கர் குமாஸ்தாவாக இருந்தான். 'ஷேர்த்தலை'யிலிருந்து டாக்ஸியில் பிராந்தி பாட்டில்களைக் கடத்தத் துவங்குவதற்கு முன்பு அது. பத்திரிகை அலுவலகத்தில் வேலை பார்த்த நண்பன் ஒருவனுடன்தான் அந்த குடிசைகளுள் ஒன்றினுள் முதலில் இவன் சென்றான்.

ஆச்சர்யம்! குடிசைகளைக்கூட மறைத்த அந்த அடர்ந்த இருட்டில், ரயில்வே லைனிலிருந்து சரிந்திருந்த சரளைக் கற்கள் மீது இவன் நடந்து கொண்டிருக்க, இருளிலிருந்து சில கருநிழல்கள் பிறந்தன. கனன்று கொண்டிருந்த சில பீடித் துண்டுகள்.

அவள் பெயர் ஆமினா.

அல்லது, ஃபாத்திமாவா?

குறிப்புகளை எழுதிவைக்கும் புத்தகத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும். ரொம்ப நாளைக்கு முன் இவன் படித்த ஒரு நாவலில் இரண்டாவது கதாநாயகனைப் போல கிடைக்கும் ஒவ்வொரு அனுபவமும், கருப்பு உறையிட்ட அந்தச் சின்ன புத்தகத்தில் ஒரு தங்க நட்சத்திரத்தை அதிகரிக்கும்.

வயதான காலத்தில் அந்தப் பழைய புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்து அசை போட்டபடி சாயங்கால வேளைகளைக் கழிக்கலாம்.

இப்போது அந்தக் குடிசைகள் அங்கு இல்லை. புரட்சி வாழ்க! புனிதத்தன்மை காப்பாற்றப்பட்டு விட்டது...

இம்சைபபடுத்தும் சத்தத்தோடு சுற்றிக் கொண்டிருந்த மின்விசிறியிலிருந்து சூடான காற்றுதான் வந்தது.

தாகம். தாகம் அதிகரித்தது. சர்க்கரை வியாதியின் அறிகுறி. அதிக ரத்த அழுத்தம். நடக்கும்போது மூச்சு வாங்குகிறது. முப்பத்தேழு வயதில் மனிதனுக்கு எல்லாம் வந்து விட்டன.

குழாயில் முகத்தைக் கழுவிவிட்டு, கண்ணாடியில் பார்த்தான். முகம் சிவந்து போயிருந்தது. ஒரு வேளை வெப்பத்தினால் இருக்கும். கருப்பு பிரேமிட்ட கண்ணாடியை மூக்கின் மீது அழுந்தப் பொருத்திக் கொண்டு, வழுக்கைத்தலையின் மீது தெறித்திருந்த நீர்த்துளிகளைத் துடைத்துவிட்டுக் கொண்டான். கண்ணாடியைப் பார்க்கும் போதெல்லாம் தனக்குள் இவன் சொல்லிக் கொள்வான்—நான் கட்டாயம் உடம்பைக் குறைக்க வேண்டும் கொழுப்பு கூடாது. அரிசி கூடாது. சர்க்கரை கூடாது.

சீட்டுக்குத் திரும்பி வந்து அமர்ந்தான். புத்தகத்தைப் படிக்க முயன்றான். கண்களைத் திறந்து விழித்திருக்கவே இவனால் முடியவில்லை...

விழித்து எழுந்தபோது, ரயில் நின்றிருந்தது. வெளியே மீன்கூடைகளை ரயிலுக்குள் ஏற்றும் கூச்சல் கேட்டது. சகிக்க முடியாத நாற்றம்.

சரஸுவின் ஸ்டேஷனை அடைய இன்னும் ஒருமணி நேரமே இருக்கிறது.

ரயில் கிளம்பியதும் இவன் தயாராகத் துவங்கினான். ஜன்னல் கதவுகளை மேலேற்றினான். வந்த ஸ்டேஷன் எல்லாம் இவனுக்குப் பரிச்சயமானவையாகவே இருந்தன. தெரிந்தவர் எவரையாவது பார்க்கக் கூடும்.

ரயில் அவள் ஸ்டேஷனை நெருங்க. நெருங்க, இவனது இருப்புக் கொள்ளாமை அதிகமாயிற்று. அவளுக்கு எழுதியிருக்கவே தேவையில்லை. ஆமாம், தேவையேயில்லை.

''அப்பா செத்துப்போனப்போ வந்ததுக்கப்புறம் ராஜேட்டன் கிட்டயிருந்து சேதியே இல்லே'' அது



நடந்து இரண்டு வருஷங்களாகின்றன. இவனைப் பார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டு அவள் எழுதவில்லை. சந்திரனை அருகிலிருக்கும் பள்ளி ஒன்றுக்கு மாற்றல் வேண்டும் என்று கேட்கும் வேண்டுகோள் மட்டுமே வந்தது. ஆனாலும் தன் பதிலில் இவன் எழுதினான்: ''பதினேழாம் தேதி மத்தியானம் இங்கிருந்து கிளம்பும் ரயிலில் நான் வருகிறேன் உனக்கு லீவு இருந்து நீ ஸ்டேஷனுக்கு வந்தால், நாம் பார்த்துக் கொள்ளலாம். நீ அத்தை ஒருத்தியோடு தங்கிவிட்டு அடுத்த நாளே திரும்பி விடலாம்''

இவனுக்கு தைரியமில்லை, ''நீ வந்துதான் ஆக வேண்டும்; நான் அதைத்தான் விரும்புகிறேன்'' என்று எழுத.

இவன் எழுதினதெல்லாம், ''நீ விரும்பினால் வரலாம், நீ விரும்பினால் என்னைப் பார்க்கலாம், நீ விரும்பினால்...'' என்கிற மாதிரிதான்.

என்னமோ, பல சிரமங்களுக்கிடையில் அவனுக்காக ஏதோ தியாகம் செய்கிற மாதிரி!

நேற்று அவளுக்கு இவன் லெட்டர் கிடைத்திருக்கும்.

இந்த ரயிலில் வருவாள் சரஸு. இவன் கணக்குகள் தவறாகப் போவதேயில்லை. அற்புதமான திட்டம்.

இரண்டு வருஷங்களுக்கு முன் அவளைப் பார்த்த போது, இனி அவளைப் பார்ப்பதில்லை, அவளுக்கு எழுதுவதில்லை என்று முடிவு செய்தான்.

தனக்குக் கல்யாணமான பிறகு ஏழு வருஷங்களுக்கு அவள் வீட்டுக்கு இவன் போகவே இல்லை, அவளைப் பார்ப்பதைத் தவிர்க்கவே விரும்பினான்.

மாமா இறந்த செய்தியைத் தாங்கி வந்தபோது, மனசுக்குள் ஒரு இழுபறி போராட்டம்தான்.

அவள் வீடு துக்கத்தில் மூழ்கிக் கிடக்கும். அவளுக்கு சற்று நிம்மதி தேவையாக இருக்கும்.

கண்காணிப்பு பார்வைகளை ஏமாற்ற இதுதான் நேரம்.

ஆனால் இவன் அந்த பழைய ராஜேட்டன் இல்லை. இப்போது இவன் திருமணமானவன், இரு குழந்தைகள் கொண்ட குடும்பஸ்தன்.

வாதங்களுக்குக் குறைச்சலில்லை.

அவனுக்கு எதைப்பற்றி கவலைப்பட வேண்டும்? அவளை முதன் முதலில் தொட்ட அந்தக் கணத்தில், இளவயசுக் காதலன் போல, ''நான் உன்னைக் காதலிக்கிறேன். உன்னை மட்டும்தான்'' என்று நடுங்கும் குரலில் ஏதும் பறைசாற்றவில்லை இவன்.

'திருமணம்' என்ற வார்த்தையையே இவன் உச்சரித்ததில்லை.

லாபத்தையே குறியாகக் கொண்ட வியாபாரி நான். என் கணக்குத் தவறாகப் போவதேயில்லை

அப்போது—தணிந்த மூச்சுடன் அடிமேல் அடி வைத்து அந்த லேசான மரப்படிக்கட்டுகளில் நடந்து, கிரீச்சிட்ட அவள் அறைக்கதவை மிக மெதுவாகத் திறந்து உள்ளே நுழைந்து—தாழ்ந்த கட்டிலின் அருகில் மண்டியிட்டு அவள்மீது கை வைத்தபோது, அவளுள் அழுகை எட்டிப் பார்த்ததோ என்னமோ, ஆனால் வாய்விட்டு அழவில்லை எதிர்க்கவுமில்லை. அவள் வாய்திறந்து ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை.

மனைவியைத் தவிர வேறொரு பெண்ணை இவன் காதலிப்பதாக வீட்டுக்குள்ளும் வெளியிலும் அவதூறுகள் எக்கச்சக்கமாக இருந்த நேரம் அது

எண்ணெயிடப்பட்ட கதவுக் கீல்கள், கிரீச்சிடுவதை நிறுத்தின. ஏழாவது படியில் அடிவைக்கும் ஓசையின்றி எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் படிக்கட்டுகளில் இறங்க முடிந்தது.

அது ஒரு பரீட்சை மாதிரி தோன்றியது. அல்லது ஒரு



சவால். முடிந்தால், திருமணமாகி இரு குழந்தைகள் கொண்டவனிடமிருந்து அவள் விலகியிருக்கட்டுமே.

அதனால் நஷ்டம் ஒன்றுமில்லை.

திடீர் திடீர் என்று பெருமழை பெய்யும் மார்கழி மாதம் அது. இவன் வேண்டுமென்றேதான் அந்த ஸ்டேஷனில் விடியற்காலையில் வந்து இறங்கினான். மறுநாள் காலைதான் திரும்பிப் போக ரயில் உண்டு. குடும்ப வீட்டின் சுவர்களுக்குள்தான் இவன் ஒடுங்கியிருக்க வேண்டிவரும்.

சந்திரனும் அந்த ஹரிஜன வேலையாளும்தான் விளக்குடன் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள்.

ஒற்றையடிப் பாதைகள் வயல்களைப் பிரித்திருக்க, அவற்றிலிருந்து தண்ணீர் வழிந்தோடிக்கொண்டிருந்தது. வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு தண்ணீரில் அளைந்தபடி நடந்தான் இவன்.

மேஜை விளக்கின் வெளிச்சத்தில் தெரு வாயிலிலேயே அத்தை நெகிழ்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள், பள்ளிக்கூடம் போகும் குழந்தைகளும் உடன் இருந்தார்கள்.

''கடைசியா உன்னைப் பார்த்து எத்தனை நாளாச்சு! என்று சொன்னபடி அழ ஆரம்பித்தாள் அத்தை. காக்கி உடையணிந்து பீடியைப் புகைத்தபடி மாலை நேரங்களில் மாமா ஓய்வெடுக்கும் அந்தச் சாய்வு நாற்காலி இப்போ காலியாக இருந்தது.

டீ கொண்டு வந்தபோதுதான் இவன் சரஸ்வைப் பார்த்தான். அவளைப்பற்றி இவன் மனதில் இருந்த பிம்பம், நீண்டிருந்த முகம் கொண்ட நிமிர்ந்த உருவம், நெற்றியில் பெரிய குங்குமப்பொட்டு, வழிந்தோடும் இளமை. காலடியில் மெல்லிய சுள்ளி நொறுங்குவதைப் போன்ற ஓசையுடன் கூடிய நடை.

எங்கே, எங்கே அந்த தாளமும் லயமும் கொண்டு உடலை அசைத்தபடி குளிர்ந்த இரவில் தென்படும் பளபளப்பான அழகி?

ஏதாவது சொல்ல வேண்டுமே நினைப்பு என்று தோன்ற, ''சரஸு களைப்பா தெரியறா'' என்றான்.

சரஸு எதுவும் சொல்லவில்லை.

காரை பெயர்ந்த சுவற்றில் அத்தை முகத்தின் நிழல் விழுந்து பயங்கரமான உருவமாகத் தெரிந்தது.

அத்தை சொன்னாள். ''மனசு நல்லா இருந்தா தானே உடம்பும் ஆரோக்கியமா இருக்கும்!''

''எனக்கும் உடம்பு சரியா இல்லே. தந்தி கிடைச்சதும் கட்டாயம் வரணும்னு தோணிச்சு''

அப்புறம் தன் வியாதி பற்றி விளக்கினான்.

''ஆஸ்த்மா. மூச்சுவிடவே சிரமமாயிருக்கு''

''சிகிச்சை ஒண்ணும் பண்ணிக்கலையாப்பா?''

''பனி படாம கவனமா இருக்கணும். திறந்தவெளில தூங்கப் கூடாது. வெயில்லயும் மழையிலயும் நிக்கக் கூடாது. கட்டுப்பாடான வாழ்க்கைதான் வாழணும்''

இவன் திறந்தவெளியில் தூங்கக்கூடாது என்பதை அத்தை கவனித்திருக்க வேண்டும்!

திறந்த வராந்தாவில் பாயில் படுத்து இரவைக் கழிப்பதை இப்படித்தான் தவிர்க்க முடியும்.

சரஸுதான் முதலில் கேட்டாள். ''குழந்தைங்கள்லாம் சௌக்கியம்னு நினைக்கிறேன்''

இவனுக்கு அதிர்ச்சியாயிருந்தது.

''ம்''

''உங்க மனைவியும் சௌக்கியம்தானே?''

''ம்''

பனை ஓலைகளில் மழைத்துளிகள் விழுவதைக் கேட்டுக் கொண்டு அறையினுள் படுத்திருந்தான். மேஜை மேல் ஒரு சிறு விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

சரஸு ஒரு தண்ணீர் கூஜாவைக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்தபோது, விளக்கு ஒளி வட்டத்தில் அவள் முகத்தைப் பார்த்தான். கன்னங்கள் உள்ளடங்கி இருந்தன. முன்நெற்றி சற்று அகலமானாற்போல் இருந்தது.



இவன் எழுந்து மெள்ள அவளை நோக்கி நடந்தான். அவள் தலையைக் குனிந்தபடி வெறுமே நின்றிருந்தாள். அவள் தோளில் கை வைத்தபோது இவன் உடம்பே நடுங்கிற்று. அவள் அசையவேயில்லை. எதுவும் சொல்லவுமில்லை. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கைகளால் அவளை வளைத்துப் பிடித்து தன்னருகே இழுத்த போதும் அவள் மௌனமாகவே இருந்தாள். இல்லை, அவளை இன்னும் இழந்துவிடவில்லை.

'நான் ஒரு மர வியாபாரி. நஷ்டத்தை என்னால் சகிக்க முடியாது. எங்கேயும்'

''ஏதாவது டானிக் சாப்பிடணும் நீ. உடம்பைத் தேத்திக்கணும்''

நடையில் காலடி யோசை கேட்டதும் அவள் மெல்ல திரும்பி வெளியே நடந்தாள்.

'சரஸு, நீ வந்துதான் ஆகணும்' என்று இவனால் சொல்ல முடியவில்லை.

வீடு முழுக்க உறங்கிக் கொண்டிருந்த போதும் இவனால் தூங்க முடியவில்லை. மாமாவின் பீடி வாசம் காற்றில் வட்டமடித்துக் கொண்டிருந்த மாதிரி இவனுக்குத் தோன்றியது.

ஒரு வழியாய் சிறு தூக்கம் இவன் கண்முன் மெல்லிய நூலால் வலை பின்னத் துவங்கிய போது, சரஸு வந்து இவன் கட்டிலருகில் நின்றாள், ஒரு நிழல் மாதிரி.

அவள் திரும்பிப் போனதும், இருட்டின் முணுமுணுப்பைக் கேட்டுக் கொண்டு படுத்திருக்கையில் இவன் தன்னைத் தானே சபித்துக் கொண்டான். இங்கு வந்திருக்கவே கூடாது. அல்லது, தன் மீது ஏன் குற்றம்

கூற வேண்டும்? அவள் தானே திரும்பி வந்தாள். எனக்கு ஒரு பங்கும் இல்லை...

இவன் கண்களை அழுந்த மூடிக் கொண்டான், இனி மேல் சரஸுவைப் பார்ப்பதேயில்லை என்ற தீர்மானத்துடன்.

ஆனால் மறுபடி போன மாதம், எங்கிருந்தோ ஒரு திருமண சம்பந்தத்தைப் பற்றிய செய்தி காற்று வாக்கில் கிடைத்தபோது, கடிதம் எழுத உட்கார்ந்தான். மரம் அறுக்கும் அரத்தின் கிரீச்சு சத்தத்தால் ஆட்டம் கண்டிருந்த ஆபீஸ் அறையில் யோசித்தபடி. நாசமாப் போக! அவசியம் எழுதணுமா என்ன?

குடும்பத்தினர் நடுவே தனியாக இருந்தபோது, ஒன்பது வருஷத்திய வனப்பான அழகியைப் பார்த்தான் இவன்.

இதுதான் சரஸுவின் ஸ்டேஷன். பாதி உயர்த்தியிருந்த ஜன்னல் சட்டத்தின் வழியாக இவன் வெளியே பார்த்தான். நாட்டுப் புறப் பயணிகள் முண்டியடித்து ஏறிக் கொண்டிருந்தார்கள். ரயில் இந்த ஸ்டேஷனில் ஐந்து நிமிஷம்தான் நிற்கும். கீழே இறங்கிப் பார்க்க இவனுக்கு தைரியமில்லை. ஒருவேளை, சந்திரன் இங்கு இருக்கலாம். அல்லது கோபி, அல்லது வேறு தெரிந்தவர் எவராவது. முன்பெல்லாம் ஒவ்வொரு விடுமுறைக்கும் இவன் இங்கு வருவதுண்டு, விருந்தாளியாக.

இவனுக்கு யாரும் தென்படவில்லை. அவள் வரவில்லை போலும். என்னை நானே ஏமாற்றிக் கொள்ளப் பார்க்கிறேன். அடுத்த ஸ்டேஷன்தான் ஜங்க்ஷன். இவன் கீழே இறங்கினான். கடைசி பிளாட்பாரத்தில் ரயில் நின்றபோது, கூச்சலோ நெருக்கமோ இல்லை. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக இன்னொரு சிகரெட்டைப் புகைத்தபடி இவன் நடந்து கொண்டிருக்கையில், கூட்டத்திலிருந்து சரஸு வெளிப்பட்டு, 'ஏர்பேக்' உடன் இவன் முன் வந்து நின்றாள்.



அது சரஸு இல்லை, ஆனால் சரஸுவின் உயிரற்ற ஓர் நினைவு. இவன் சிரிக்க முயன்றான்.

''இப்பிடி வா''

அவள் தன்னைப் பின்தொடர்ந்து வருகிறாள் என்ற நம்பிக்கை ஏற்பட்டதும், இவன் தன் கம்பார்ட்மெண்டுக்கு விரைந்தான்.

இருவருமாக சீட்டில் உட்கார்ந்ததும் இவன் பெரு மூச்சைக் கட்டுப்படுத்திக் கொண்டு சொன்னான், ''உன்னை ஸ்டேஷன்ல நான் பார்க்கலையே. தேடிக்கிட்டு இருந்தேன்''

''நான் பார்த்தேன்''

பரிச்சயமான சிற்றுண்டிச்சாலை சர்வர் ஒருவன் கம்பார்ட்மெண்டினுள் வந்ததும், அவனிடம் காபி கொண்டு வரச் சொன்னான் இவன்.

உடனே அவனைத் திரும்பக் கூப்பிட்டான்.

''போர்ட்டரைக் கூப்பிடு''

போர்ட்டரிடம் காசைக் கொடுத்து டிக்கெட் வாங்கி வரச் சொன்னபோது நிம்மதியாக இருந்தது.

சரஸு, மலிவான புடவை உடுத்தி, கைகள் சுருங்கி கன்னங்கள் உள்ளடங்கியிருக்க, இந்த இரண்டு வருஷங்களில் மேலும் மாறிப் போயிருந்தாள்.

''நீ ரொம்ப சோர்வா தெரியறே. முதல்ல எனக்கு அடையாளமே புரியலே'' என்றான், குற்றம் சாட்டுகிற மாதிரி இருந்த தொனியைத் தவிர்த்தபடி.

''ராஜேட்டன் கூட மாறிப் போயிருக்கீங்க''

இருக்கலாம். உடம்பு கொஞ்சம் பெருத்துவிட்டது. வயிறு தளர்ந்து போய்விட்டது. அகலமாக விரிந்து விட்டது.

அவளைப் பார்ப்பவர்கள், தவறுதலாக முதல் வகுப்புப் பெட்டியில் ஏறிவிட்ட பெண் பயணியாகத்தான்

கருதுவார்கள். இன்னும் முக்கால் மணி நேரத்தில் ரயில் கிளம்பிவிடும். கோயமுத்தூரிலிருந்து ரயிலில் வந்து கடைசி ஸ்டேஷன் வரை செல்லும் பயணிகளில் சிலர் இந்தப் பெட்டியில் நிச்சயம் ஏறிவிடக்கூடும்.

அறிமுகமில்லாதவனைப்போல அவளுடன் பயணிக்க முடியவில்லை இவனால். பெட்டியைத் திறந்து ரோஸ் கலர் பூத்துவாலை ஒன்றையும், சோப், பவுடர், சீப்பை யும் வெளியில் எடுத்தான்.

''இதை எடுத்துக்கோ. வேணுன்னா பாத்ரும்ல போய் முகம் கழுவிக்கிட்டு வா''

இவன் சொன்னதன் அர்த்தம் அவளுக்குப் புரிந்திருக் குமோ? என்கூட பிரயாணம் பண்ற அளவுக்கு பளிச்சுனு உன்னை மாத்திக்கோ''

போர்ட்டர் டிக்கெட்டுடனும், சர்வர் காபியுடனும் ஒரே நேரத்தில் திரும்பினார்கள்.

ஒரு கணம் இவன் முட்டாள்தனமாக எதிர்பார்த் தான், பாத்ருமிலிருந்து அவள் முற்றிலுமாக மாறி வெளிப்படுவாள், என்னவோ மாஜிக் மாதிரி, பழைய சரஸுவாக என்று.

சரஸு வெளியே வந்தாள். இல்லை. ஒரு அற்புத மும் நிகழ்ந்திருக்கவில்லை. பவுடரினால் இன்னமும் வெளுத்திருந்த முகம். தலை வாரியதில் நெற்றி இன்ன மும் அகலமாகத் தெரிந்தது.

''கொஞ்சம் காபி சாப்பிடு''

கோயமுத்தூரிலிருந்து வரும் வண்டி எதிர் பிளாட் பாரத்தில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய பயணி களில் பலர் இவனது ரயிலில் ஏறினார்கள். நல்லவேளை, அவர்களில் யாரும் தெரிந்தவர்கள் இல்லை.

பெட்டி மனிதர்களால் நிறைந்ததும், அவளை நெருங்கி அமர்ந்தான். வெளியே கூட்டம் அதிகமாகிக்



கொண்டிருந்தது. பக்கத்து இரண்டாம் வகுப்புப் பெட்டியின் கதவருகே, இவன் ஊரைச் சேர்ந்த தெரிந்த முகமொன்று தென்பட்டது. பேப்பரைப் பிரித்து வைத்துக் கொண்டு அதன்பின் ஒளிந்தபடி தீவிரமாகப் படிக்க ஆரம்பித்தான்

நேரம் சாவகாசமாக ஊர்ந்தது. கீழே விழுந்திருந்த பேப்பரை எடுத்து சரஸுவும் படிக்கத் துவங்கினாள். அவள் வெறுமே தாளைப் பிடித்திருக்கிறாள், எதையும் படித்துக் கொண்டு இல்லை என்பது இவனுக்குத் தெரிந் தது.

மற்ற பயணிகள் இந்த பெட்டிக்கு வந்திருப்பதும் ஒரு விதத்தில் நல்லதற்குத்தான். இவர்கள் இரண்டு பேர் மட்டும் தனியாக இருந்திருந்தால், கட்டாயமாகப் பேச வேண்டி வந்திருக்கும்.

ஒரு வழியாய் ரயில் கிளம்பியது. பகல் வெளிச்சம் மங்கத் துவங்கியது. பேப்பரைக் கீழே வைத்துவிட்டு. ஜன்னல் வழியாக எதிர் பிளாட்பாரத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் இவன்.

தேக்குமரக் காடுகளையும் அறுவடை நிலங்களையும் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு ரயில் வேகம் பிடித்தது. ஸ்டேஷன்கள் ஒன்றோடு ஒன்று நெருக்கத்திலேயே இருந்தன. எவரும் ஏறுவதையோ இறங்குவதையோ குறிப்பாகப் பார்க்கவில்லை இவன். பொழுது வேகமாக இருட்டிக்கொண்டு வந்தது.

இவன் மனசுக்குள் கணக்குப் போட்டான். திட்ட மிட்ட இடத்துக்கு ஆறே முக்காலுக்குப் போய்ச் சேரு வார்கள். அதற்குள் நன்றாக இருட்டிவிட்டிருக்கும். ஒளியூட்டப்பட்ட ஊரில், இரவின் பாதுகாப்பின் பின் நடமாடும்போது மனிதர்களை அடையாளம் கண்டு கொள்வது சிரமமாக இருக்கும்.

காலி நிலங்களுக்கு அப்பால், மரக்குடிசைகளுக்கு

வெகு தொலைவில், ஒலிபரப்பு நிலையத்தின் விளக்குகள் வானத்தில் தெரிந்தன, பேயின் இரத்தச் சிவப்பான கண்களைப் போல. நகரம் நெருங்கிக் கொண்டிருந்தது... இவனுக்கு நிம்மதியாயும் கலக்கமாகவும் இருந்தது ஒரே சமயத்தில்.

ஸ்டேஷனில் ரயில் நின்றபோது, இவன் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே இருட்டியிருந்தது.

பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு இறங்கினான். அவனுக்கு மிக அருகில் ஒரு நிழல்போல சரஸு பின் தொடர்ந்தாள். ரிக்ஷாக்காரர்களிடமிருந்தும் கூலிகளிடமிருந்தும் தப்பித்து அக்கம்பக்கம் பார்க்காமல் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தான்.

கண்ணில்பட்ட டாக்ஸியில் ஏறி அமர்ந்ததும், சரஸுவின் அத்தை வீடு அருகில் இருப்பது நினைவுக்கு வந்தது. இந்த அத்தையைப் பார்க்கப் போவதாக சாக்கு சொல்லிவிட்டுத்தான் சரஸு வந்திருந்தாள்.

"எங்க போகணுங்க?"

"இப்படியே போ. டவுன் வந்ததும் நானே சொல்றேன்"

டவுன் நுழைவாசலுக்கு அருகில், ஒரு உயர மேட்டுக்குக் கீழே இருந்த பிரபல ஹோட்டலைக் கார் நெருங்கியதும், இவன் டிரைவரிடம் நிறுத்தும்படி கூறினான்.

அவனிடம் அவசியமில்லாமல் ஒரு பொய் சொன்னான்.

"இங்க ஒரு போன் பண்ணணும்"

கவுண்டருக்கு அருகில் சர்வர் ஜான் காத்திருந்தான். பகல் நேரத்துக்கு அப்புறம்தான் அவன் வழக்கமாகக் குடிக்கத் துவங்குவான்.

ஜான் நட்புடன் சிரித்தது ராஜனுக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது.



"எனக்கு ஒரு ரூம் கிடைக்குமா?"

"சிங்கிளா? டபுளா?" என்று மானேஜர் கேட்டார்.

"டபுள்"

இவன் காருக்குத் திரும்பிச் சென்று சரஸுவை இறங்கச் சொன்னான்.

மாடியிலிருந்தும் ஹோட்டலின் மற்ற பகுதிகளிலிருந்தும் பலர் இவனைக் கவனித்திருக்கக்கூடும், எங்கிருந்தோ ஒரு பெண்ணை அழைத்து வந்திருக்கிறான் என்ற எண்ணத்துடன்.

படியேறி முதல் மாடியை அடைந்தபோது, ரூம் பையன் அதற்குள் அறைக்கதவைத் திறந்து வைத்திருந்தான். உள்ளே நுழைந்ததும் பத்து ரூபாய்த்தாள் ஒன்றை அவனிடம் நீட்டி, "பையையும் பெட்டியையும் எடுத்துக்கிட்டு வா. இதை சில்லறை மாத்தி டாக்ஸி டிரைவர்கிட்ட குடுத்துடு" என்றான் ராஜன்.

கூன்விழுந்த முதுகும், உடைந்த மூக்கும், நெற்றியில் புண்ணுமாகத் தோற்றமளிக்கும் அந்த ஆள் திருட்டுத்தனமாக சரஸுவின்மீது பார்வையை வீசுவதைக் காணாதவன்போல் இருந்தான் ராஜன். அவளை ஜான் மனசுக்குள் எடை போட்டுக் கொண்டிருப்பான். இரவு நேரங்களில் புரோக்கர்கள் டாக்ஸியில் அழைத்துவரும் 'சரக்கு'களோடு இவளை ஒப்பிட்டுக் கொண்டிருப்பான். ராஜனுக்கு உலகத்தின்மீதே பொதுவாகக் கோபம் வந்தது

"உட்காரேன்" என்றான் சரஸுவிடம்.

அவள் மௌனமாக ஒரு சேரில் உட்கார்ந்தாள்.

அத்தையின் வீட்டுக்குப் போகாததற்கு அவளிடம் விளக்கம் ஏதும் கொடுக்கவில்லை இவன்.

ஜான் திரும்பி வந்து படுக்கை விரிப்புகளை மாற்றினான்.

ராஜன் கடியாரத்தைப் பார்த்தான். மணி ஏழு பத்து.

''ரெண்டு சாப்பாடு''

ஹோட்டல் ரிஜிஸ்தரில் தன் உண்மையான பெயரையும் விலாசத்தையும்தான் எழுதியிருந்தான் இவன். கடைசி பகுதியில் 'குடும்பத்துடன்' என்று குறிப்பிடுகையில், பணியாளின் முகத்தில் மெல்லிய சிரிப்புப் பரவுவதை உணர முடிந்தது.

''வேற எதுவும் வேணுமா சார்?''

''வேணும். கொஞ்சம் பீர் கொண்டு வா. 'ஜில்'லுனு பீர்''

பாட்டில்களையும் இரண்டு கண்ணாடித் தம்ளர்களையும் மேஜைமேல் அவன் வைத்தபோது ராஜன் சொன்னான், ''ஒரு டம்ளர் போதும்''

சர்வர் போனதும், கதவைச் சாத்திவிட்டு சரஸுவுக்குப் முதுகைக் காட்டிக்கொண்டு பாட்டிலைத் திறந்து டம்ளரை நிரட்பினான் ராஜன். அது நுரைத்து வழிந்தது.

தான் குடிப்பதை சரஸு அறிவாளா என்று குழம்பினான். ஒரே மடக்கில் டம்ளரைக் காலி செய்துவிட்டு, எதிர்பக்க படுக்கைக்குப் போய் அமர்ந்து சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டான்.

''இது வெறும் பீர்தான். உடம்புக்கு ஒண்ணும் பண்ணாது''

பேச்சோடு பேச்சாய் மன்னிப்பு ஒன்றை வீசினான். அவள் புன்னகைத்தாளோ?

இவனைப்பற்றி நிறைய தெரிந்து கொள்ளத் துவங்கியிருந்தாள் அவள். இவளை முழுமையாக யாரும் புரிந்து கொள்ளவில்லை. சரஸு, யாரும் யாரையும் முழுசாகப் புரிந்து கொள்ளவே முடியாது.



—பார், இந்த அழகான ஹோட்டல் அறையில் நீயும் நானும் மட்டும் தனியாக இருக்கிறோம், உன் கனவுகளுக்கெல்லாம் காரணமாக இருக்கும் மனிதனை நீ இன்னும் உனக்கே உனக்காக சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. உன்னுடைய இந்த மௌனம் சில மணி நேரத்துக்குத் தான் என்றாலும், என்னைப் பாதிக்கவே செய்கிறது.

டம்ளர் மறுபடியும் மறுபடியும் நிரம்பியும் காலியாகவும் ஆகிக் கொண்டே இருந்தது. வாசல் வழியாக பாட்டில்கள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருந்தன.

அரிசிச் சாப்பாடு வந்தபோது. ''நீ சாப்பிடு'' என்றான் இவன்.

''இல்லே, ராஜேட்டனுக்கு அப்புறந்தான்''

இது வீடு அல்ல. சம்பிரதாயங்கள் இங்கே அனாவசியம்.

''தயவு பண்ணி சாப்பிடு''

அவள் சாப்பிட உட்கார்ந்தாள். கட்டிலுக்கு அருகே பிரம்பு டீப்பாயை இழுத்துப் போட்டுக்கொண்டு மடக் மடக்கென்று குடித்தான் இவன்.

''சாப்பிட்டாச்சா?''

''ம்''

''அதுக்குள்ளியா?''

—நீ நிறைய சாப்பிட வேண்டும். உன் உடம்பைப் பார்த்தால் எனக்குக் கவலையாக இருக்கிறது. தேய்ந்து வரும் உன் அழகின் எல்லைக்கோடுகள்வரை, உன் உறுதியில்லாத்தனம் தெரிகிறது. தாளமும் இசையுமான உடம்பின் கோடுகள்.

வியர்வையில் முழுவதுமாக நனைந்து போன பிறகு தான் புரிந்தது, பேன் வேலை செய்யவில்லை என்பது. ஸ்விட்சைப் போட்டான். இப்போது எவ்வளவு இதமான குளிர்ச்சியாக இருக்கிறது!

— ஏதாவது பேசேன்

— சரஸ், என்னைப் பத்தி நினைக்கும் போது வியப்பாக இருக்கிறதா? உனக்கு நினைவிருக்கிறதா சரஸ், பெருமழை பெய்த அந்த ஒரு மாசத்தில், மாடிப்படிக்கட்டு நடுவே நாம் சந்திப்பதற்காக வேண்டுமேன்றே ஒரு சந்தர்ப்பத்தை நீ உருவாக்கினாய், என்னை ஆரத்தழுவி சந்தோஷப்பட்டாய். பிறகு உன்னை விடுவித்துக் கொண்டு ஓடியே போய்விட்டாய்? அப்போது நன்றியில்லாமல் நான் சொன்னேன், ''இனிமே இதுமாதிரி நடக்கக் கூடாது''

— அந்த இருளில் பதுங்கியபடி நான் இருந்த போது நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லை. நீ மட்டுமல்ல, யாருமே

— பாகியும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை. உலகம் முழுவதும் எங்கள் கல்யாணத்தை எதிர்த்தபோது, நான் அவள் மீது அளவில்லாத அன்பு கொண்டு அவள் பெயரைப் பறைசாற்றவும் செய்தேன். கடத்தலிலும், மர வியாபாரத்திலும் நான் நிறைய பணம் பண்ணிய பிறகு எல்லா எதிர்ப்பும் குறைந்ததும், அவளை அவமதித்து மனசிலிருந்து களைந்து எறிந்துவிட்ட என்னை அவள் புரிந்து கொள்ள மாட்டாள்தான். ஆஷ்தாவும் மரியாவும் கூட புரிந்து கொள்ள மாட்டார்கள்

— இது அறை எண் 6, மூலையில் இருக்கிறது. 'தொழில்' புரோக்கர்கள் அடிக்கடி இந்தக் கதவைத்தட்டியிருக்கிறார்கள் எனக்காக

சரஸ் உன்னை நினைத்து அழ வேண்டும் போல் இருக்கிறது

பாகியை நினைத்து...

மரியாவை நினைத்து...

ஆஷ்தா சலோனனை நினைத்து.



எத்தனையோ விஷயங்கள் மறந்து போய்விட்ட மாதிரி எனக்கு அழுவதும் மறந்து போய்விட்டது.

சிரிக்கவும்கூட.

மேன்மையான இயற்கைத் திறன்களை இழந்தாயிற்று...

''நீங்க சாப்பிடலையா?''

அந்த அகலமான இரட்டைக் கட்டிலில் பாபுவும் ஷீபாவும் தங்களின் அம்மாவோடு தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். கைக்கெட்டிய தூரத்தில், நூக்குமரத்தொட்டியில், கொசு வலைக்குள் தூங்குகிறது ஒன்பது மாசக் குழந்தை சாரு.

யாருடைய தவறு அது, பாப்பா? பதினொரு வயது சூட்டிகையான பையன் ஒருவன், கோவிலைச் சுற்றிச் சுற்றி வந்து, சாயங்காலம் வீட்டில் சுவாமி விளக்குக்கு முன் மண்டியிட்டு நமஸ்கரித்து கடவுள் பெயரை ஜபித்து, காதுக்குப்பின் துளசியும் நெற்றியில் சந்தனக் கீற்றுமாய் வளர்ந்தது எனக்கு நினைவிருக்கிறது.

சூட்டிகையானவன், அதுதான் என் மறந்து போன செல்லப் பெயர்.

எங்கே வழியைத் தவற விட்டேன்?

''நீ ஏதாவது பேசக் கூடாதா?''

''என்ன பேச?''

வெளியில் எங்கோ கண்ணாடி நொறுங்கும் ஓசை கேட்டது.

தொலைவில் ஏதோ கோவிலில் பட்டாசு வெடிக்கிறார்கள்.

ஜன்னல் திரைச்சீலை இடைவெளிகளில் நகரத்தில் களைத்த விளக்கொளி தெரிந்தது.

''காலைல ஆறு மணிக்கு ஒரு ரயில் இருக்கு''

காலையில். ஆமாம். வெளிச்சம் வருவதற்கு முன்னால், பக்கத்து கிராமத்திலிருந்து பகட்டாக டாக்ஸிகளில் வந்து இறங்கும் பெண்கள், புடவைத் தலைப்புகளில் சுருட்டி முடிந்து வைத்த பணத்துடனும் களைத்த உடம்புடனும், தூக்கத்தில் கனத்த கண்ணிமைகளுடனும் ஊருக்குத் திரும்பிச் செல்லும் ரயில். ஆமாம், எனக்கு நினைவிருக்கிறது...

மேஜைமேல், மிச்சமிருந்த உணவுடன் தட்டுக்கள் அலங்கோலமாகக் கிடந்தன.

மூடிய கதவுக்கு அப்பாலும், நான்கு சுவர்களுக்குள்ளும் அந்த குறுகிய உலகம் இருண்டு போனது.

வா, பெண்ணே, வா. மறுபடியும் நான் ஒரு கடும் துன்பத்தில் இருண்ட பொந்தில் இருக்கும் பேயைப் போல காத்திருக்கிறேன்.

இது மறுபடி நிகழவே கூடாது.

மறுபடி ஒருதரம். ஒரு வேளை, விடியப்போகும் பொழுது என் வாழ்வில் ஒரு புதிய விடியலாக இருக்கலாம். ஒளியின் விடியல், இசையின் விடியல்.

இருட்டு.

இவன் திடுக்கிட்டு முழித்துக் கொண்டான். தன்னை எழுப்பிய சத்தத்தைக் கூர்ந்து கவனித்தான். கோவிலிலிருந்து, நகரத்தின் வழியாக, எல்லாருக்கும் காலை வாழ்த்துத் தெரிவிக்கும் துதிப்பாடல் ஒலி லவுட் ஸ்பீக்கர் மூலம் அதிகமாக்கப்பட்டு வந்து கொண்டிருந்தது. குளிர்ந்த காற்றில் ஒலி சீறிக் கொண்டு வந்தது.

ஜன்னல் திரைச்சீலையை விலக்கி வெளியே பார்த்தான். மிச்சமிருந்த வேதனையான இருட்டு,வெளிச்சத்தில் தன்னைக் கரைத்துக் கொண்டது. குளிர். ஜன்னலருகில்



நின்றான். லேசான தலைவலி. இவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

சரஸு இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தாள். மணி ஐந்தரை. அவளை எழுப்பலாமா? ஆறு மணிக்குப் பிறகு அடுத்த ரயில் இனி சாயங்காலம்தான்.

கட்டிலுக்கு அருகில் தயங்கியபடி நின்றான். பின், அவள் மெல்ல கண்களைத் திறந்தாள்.

நகரம் இன்னமும் முழித்துக் கொள்ளவில்லை. தெருவை அடைந்தபோது ஒரு வண்டிகூட இல்லை. ரிக்ஷாகூட இல்லை.

இவன் மெல்ல நடந்தான். சரஸு பின்தொடர்ந்தாள். மௌனமாகவே இருந்தார்கள். தார் ரோடு ஈரமாக இருந்தது. மேலைப் பனிக் காற்றின் அடையாளம் இன்னமும் காற்றில் கலந்திருந்தது.

மூன்றாம் வகுப்பு டிக்கெட்டோடு பிளாட்பாரத்தை இவர்கள் அடைந்தபோது,நேரம் மிகச் சரியாக இருந்தது. ரயில் வந்து கொண்டிருந்தது. குளிருக்காக நெருக்கமாக நின்றிருந்த பயணிகள் கும்பல்களிடையே புகுந்து பெண்கள் பெட்டியை அடைந்தார்கள். பிறகு இவன் சரஸுவிடம் டிக்கெட்டைக் கொடுத்தான்.

''ஏதவாது பணம் வேணுமா?''

''வேணாம்''

''எப்ப எது வேணுன்னாலும், எனக்கு எழுது''

அவள் எழுத மாட்டாள் என்பது இவனுக்குத் தெரியும். அதனால் அவள் மௌனம் விரும்பத்தகாததாக இருந்தது.

அவள் ரயிலுக்குள் போய் ஒரு சீட்டில் அமர்ந்தாள். ரயில் கிளம்பும்வரை நின்று, பிறகு கையசைத்து விடை கொடுத்து...அது ரொம்ப சிரமமானதாக இவனுக்குப் பட்டது. முடியாது.

3737262

"அப்ப நான் கிளம்பட்டுமா?"

அவன் இணக்கமாகத் தலையசைத்தான். மேலும் காத்திராமல் கும்பலினூடே வேகமாக நடந்தான் இவன். ஹோட்டல் கேட்டை அடைந்தபோது மூச்சுத்திணறியது. படியேறி முதல் மாடியை அடைந்தான். அங்கே தொப்பியணிந்து ஒரு படகுக் காண்ட்ராக்டரைப் பார்த்தான்.

கலக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவரை நோக்கிப் போனான் ராஜன்.

"நேத்து ராத்திரி நீங்க வரும்போது பார்த்தேன். உங்களை தொந்தரவு செய்ய விரும்பலை?"

இவன் முட்டாள்தனமாக சிரித்தான்.

"ஆளு எங்கே?"

"போயாச்சு. எப்படியோ வழியில என் கையில வந்து விழுந்தது."

"நினைச்சேன். மோசமான சரக்கு?"

வாஸ்தவம்தான். மோசமான சரக்கு. அவரோடு முழுமையாக உடன்படுகிற தினுசில் தலையாட்டிக் கொண்டே தன் அறையைப் பார்க்க நடந்தான் ராஜன்.

அறை முழுக்க நல்லெண்ணை வாசமடித்தது. இவன் தரையில் ஊர்ந்து செல்லும் ஜந்து மாதிரி ஜில்லென்றிருந்த படுக்கையில் சுருண்டு கொண்டான்.

செத்துப்போய்விட வேண்டும்போல இருந்தது.

கொலை செய்ய வேண்டும்போலவும் இருந்தது.

——— முற்றும் ———

மலையாளத்தில் எழுதியவர். எம்.டி. வாசுதேவன் நாயர்.
தமிழாக்கம்—சிவசங்கரி.